HSN 05

99

தி. இரா. பிரசன்னா,
'தமிழ்ப்புலவர்',

ஏடு எண்:- 51அ, (உரை)
'நோய்நிதானம்' +
மருந்துசெய்முறை'

23.

எத்தனை வேறுபாடுகளும் வகைகளும் இருப்பினும் வாதத்தால் வரும் வகைகள் ஏழாகும்

24. வாதம், பித்தம், சிலேத்துமம், பூதம், பிகாதம், சீரணம் தொந்தம் ஆகிய ஏழு வகைகளாய் துன்பம் கொடுக்கும் காய்ச்சலானது அமையும்.

25. காய்ச்சல் வருதல், குளிர் அதிகமாதல், அரிப்பு ஏற்படுதல், உடல் பெருத்தல், விறைப்பு ஏற்படுதல், மயிர்க்கூச்செறிதல், பல் கறுத்து உலருதல், உடல்வலி ஆகியவை வாத சுரத்தால் ஏற்படும் குறிகுணங்களாகும்.

26. மயக்கமடைதல், மலம், சிறுநீர் இறங்காமை, தாகம், உறக்கம், வாந்தி, உடல் வெப்பமடைதல், வாய்க்கசப்பு, அங்குமிங்கும் ஓடுதல், வாய் பிதற்றி ஏதோ ஏதோ பேசுதல், ஆகியவை பித்த சுரத்தின் குறிகுணங்களாகும்.

27. நாக்கில் சுவை தெரியாமை, ஏவறுத்தல், இரைப்பு, இருமல், தாகம், விக்கல், மூச்செறிதல், உள் தொண்டை வலித்தல், ஆகியவை சிலேத்தும சுரத்தின் குறிகுணங்களாகும்.

28. குமரகண்டன் வலி போல் வலித்தல், கண்ணை உருட்டி பார்த்தல், சோர்ந்து போதல், பால் சோற்றை விரும்புதல், அங்குமிங்கும் ஓடுதல், ஆடுதல், சிரித்தல், மயிர் கூச்செறிதல் ஆகியவை பூதசுரத்தின் குறிகுணங்களாகும்.

30. துடை இரண்டும் வலித்தல், மந்தமான விக்கல், செரியாததினால் புளித்தேப்பமுண்டாதல் ~~[illegible]~~ அதனால் தாங்கமுடியாத காய்ச்சல் வருதல் ஆகியவை சீரணசுரத்தின் குறிகுணங்களாகும்

29. தூர நடந்தால் களைப்பெடுத்தல், பித்தம் உண்டாதல், ~~[illegible]~~ சாப்பிட்ட பிறகு வாந்தியெடுத்தல், அதிசயத்தாலும் அச்சத்தாலும் விறைத்தல், உடல் வியர்த்தல், வலித்தல், கூச்சலிடுதல் ஆகியவை பிசாத சுரத்தின் குறிகுணங்களாகும்.

31. உள்ளங்கை கறுத்தல், மலம் வெளுத்தல், உந்தி மேல் நோக்கி வலித்தல், தூக்கத்தில் உளறுதல் ஆகிய குறிகுணங்கள் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகியவை ஒன்றுடன் ஒன்று கலத்தல், இரண்டுகலப்பதால் வரும் சுரத்தினுடையவை.

32. தினந்தோறும் இருமலினால் துன்பப்படுதல், நாக்கு வெளுத்தல், மயிர்க்கூச்செறிதல், பொருமுதல், தாகமெடுத்தல், கழுத்து வலித்தல் ஆகியவை வாதசிலேத்துமத்தினுடையவை.

33. பித்தம் அதிகமாகி பிதற்றுதல், வியர்த்தல், தாக மெடுத்தல் தூங்கும் போது இருமுதல், மார்புக்குள் வலித்தல், மயிர்க்கூச்செறிதல் ஆகியவை பித்தசிலேத்துமத்தின் குறிகுணங்கள்.

34. குளிரெடுத்தல், வயிறு கழிதல், இருமல், கை, கால், உடல் எரிதல், கண் விழி உடல் வலித்தல், ஏற்படுதல், பகலிலும் தவறுதலால் உண்டாகும் தூக்கம், மார்பு, முகம், கால் வாடுதல், கைகாலில் வெப்பம்

35 ~~[illegible]~~, சிவந்த தாமரை போன்ற கண்கள் நிறம் வேறுபட்டு ஒளி இழத்தல், கண்களைப் போன்றே நகக் கண்களும் இரத்தம் நீங்கி வெளிர்நிறமாதல்.

36. ஒரு நாள், மூன்று நாள், ஐந்து நாள், ஆறு நாள் என்று விட்டு விட்டு காய்ச்சல் மாறல் சுரத்தில் வரும். வாத பித்த சேத்தும சுரத்திலும் இவ்வாறு அமையும்.

37. தோல், என்பு, இரத்தம், தசை இவற்றின் காரணமாக காய்ச்சல் நான்கு வகைகளாக வரும். தலைவலி -யும் காய்ச்சலும் தொடர்ந்து இருக்கும்.

38. இளிருண்டாதல், உடல் வியர்த்தல் ஏற்படின் எலும்பு சுரம், மயக்கம், இளைப்பு, தாகம், உடல் வலித்தல் உண்டாயின் இரத்த சுரம், உடல் முழுதும் வலித்தல் மயக்கமுண்டாதல், காய்ச்சல் அடித்தல் ~~வாட்டமுண்டாதல்~~.

39. நினைவு தடுமாறுதல், வாட்டமுண்டாதல், மேல் மூச்சு வாங்குதல், உடல் வறண்டு போதல், மயிர் கூச்செறிதல், உடல் முழுதும் வலித்தல் ஆகிய குறிகுணங்கள் மாங்கிச சுரத்தின் ~~இ~~ ~~இயல்பாகும்~~ ~~யவை~~.

சன்னி பாகம்

40. உடலெங்கும் வலித்தல் முதலில் எரிச்சலாகி பின் குளிர்ந்து போதல், காய்ச்சல் அதிகமாதல், மார்பு கடுத்து, சந்திரனைப் போன்ற முகம், இமை உயர்த்தல், வாயில் நுரை தள்ளுதல், மயிர் சிலிர்த்தல், மயக்கம்
போற்றும் சமயத்திலும்

41. பித்தம், சுவாசத்தில் கமனம், குடலை இழுத்துப் பிடித்து விக்கல், இருமல் வந்தாலும் அது சன்னி பாகமென்று அறிந்து கொள்க.

42. உடலில் குத்தினால் போன்ற வலி, உடலில் எரிச்சல் ஏற்படுதல் சோகையுண்டாதல் கால் வலி உண்டாதல், இரைப்பு, சிலேத்துமம் அதிகமாதல் ஆகிய குறிகளைக் காட்டினால் அது சந்திக சன்னியென்று அறிந்து கொள்ள வேண்டும்.

43. வாந்தி, தலை சுற்றுதல், பலவாறு பேசுதல், மயக்கம் கழிச்சல், அதிகமான நீர்வேட்கை, மிகுந்த காய்ச்சல் தீராத விக்கல், ஆகியவை அந்தக சன்னியின் குறிகளாகும்.

44. பித்தத்தினால் ஏற்படும் மயக்கம், எரிச்சல்,
புலம்புதல், நோயின் அதிகத்தால் ஒரு இடத்தில்
நிலையாக இருக்க முடியாமை, தலை சுற்றுதல்
உடல் வறட்சியாதல் நெற்றி கறுத்து வியர்த்துப்
போதல், உடல் வலியும் அதிக குருதி அழுத்தமும் தோன்றும்.

பித்தப் பிரமை
45. சன்னியின் குணமானது ~~இவ்விதமாகும்~~.
வாதம், பித்தம் அதிகமாகும், வாய் பிதற்றல் ஏற்படும்
நினைவிழந்து மறதி அதிகமாகும்.

46. சீதாங்க சன்னியில் உடல் குளிர்ந்து இருமல்,
தூங்க முடியாது இரைத்தல் கழிச்சலுண்டாதல்
உடல் வலித்தல், வாந்தியாதல் மயக்கம், உடலை
அழுத்துதல் விக்கலுண்டாதல்.

47. காய்ச்சல் அதிகமாதல், தாகம், கண் வீங்கி தண்ணீர்
வடிதல் மூச்சு கடினப்பட்டு வாங்குதல், வெளிறுதல்
வாய் பிதற்றுதல் கோபம் அதிகமாதல் கழிச்சலாதல்,
நாக்கில் முள் தோன்றுதல் நெருப்பு போல் அனலாகி
உலர்ந்து போதல் ஆகிய குறிகுணங்கள் தாந்திரிக
சன்னியின் குறிகுணங்கள்.

48. கழுத்தின் நரம்பு வலித்தல், கழிதல், மயக்கம், பயங்கொள்ளுதல், வாந்தியாதல், விக்கலுண்டாதல், புலம்புதல், தலை சுற்றுதல், சோர்ந்திருதல், உடல் புண்ணாய் வலித்தல், நாக்கு உலர்ந்து போதல், மயக்கமுண்டாதல் ஆகிய குறிகுணங்கள் கண்டக சன்னியினுடையவை.

49. நாக்கு கீற்றுகளாய் வெடித்துப் போதல், விக்கல் வருதல், ஏதோதோ புலம்புதல் ஆகியவை பிரலாப சன்னியின் குறி-குணங்கள்.

50. திறந்த கண் மூடாமை, கண்ணீர் அதிகமாக வருதல், ஏதோதோ புலம்புதல், தலை சுற்றுதல், ஆகியவை நேத்திர சன்னியின் குறிகுணங்கள்.

51. நாக்கு வெடித்துமுள்ளாய் ஆதல், அறிவிழந்துநிற்றல், தலை சுற்றுதல், உடல் வெப்பமாதல், விக்கல் காய்ச்சல், நினைவிழந்து மனத்தடுமாற்றம் ஆதல், இரத்தமாகக் கழிதல்,

52. புலம்புதல், உடல் நடுங்குதல், வலித்தல், இருமுதல், விக்கல், காய்ச்சல் வருதல், உடல் முழுதும் கூடாகுதல் ஆகியவை பிரலாப சன்னியின் குறிகுணங்கள்.

53. காதுகேட்காமை, கை கால் எரிச்சல், மூச்சு மெதுவாக விடுதல், நீர் வேட்கை அதிகமாதல், வெப்பம் அதிகமாதல், வாய் திறக்க முடியாதபடி நாக்கு முழுதும் நாய் முள் போன்று அதிகமாகல், நாக்கு வெடித்து கறுத்திருத்தல் ஆகியவை சிங்குவாத சன்னியின் குறிகுணங்கள்.

54. காற்று முதலாகிய மூன்றும் கலந்து நாக்கானது பல வண்ணங்களாய் தோன்றும். மூச்சானது மெதுவாய் நடக்கும், தூக்கம் அதிகமாதல் காய்ச்சலாதல் ஆகிய குறிகுணங்கள் சன்னியினுடையவை.

55. சந்திகசன்னி, தாந்திரிகசன்னி, பிரலாபசன்னி, சித்தபிரமசன்னி, கர்ணிகசன்னி, சிங்குவாக சன்னி ஆகிய இந்த ஆறு வகையும் சாத்தியமாகும்.

56. அலந்தகசன்னி, நேத்திர சன்னி, கண்டகுச சன்னி, மாத்தெட்டிசன்னி, சித்தாங்க சன்னி, பிணியாச்சன்னி, மிருத்தாக சன்னி ஆக ஏழு வகைச் சன்னி அசாத்தியமாகும்,

57. சந்திக சன்னிக்கு இருபத்தெட்டு நாளும் அந்தக சன்னிக்கு பத்து நாளும் உருக்குவாத சன்னிக்கு இருபது நாட்களும் சித்தப்பிரம சன்னிக்கு இருபத்தொரு நாட்களும் சீதாங்க சன்னிக்கு பதினைந்து நாட்களும் சொல்லப்பட்டுள்ளது.

58. தாந்திரீக சன்னிக்கு ஏழு நாட்களும் கண்டகுச சன்னிக்கு இருபத்தைந்து நாட்களும் துட்டமான கர்ணிகசன்னிக்கு பதிமூன்று நாட்களும் நேத்திர சன்னிக்கு எட்டு நாட்களும்.

59. இரத்தெட்டிசன்னிக்குப் பத்து நாட்களும் பிரளாப சன்னிக்குப் பதினான்கு நாட்களும் ஜிஹ்வக சன்னிக்கு பதினாறு நாட்களும் பிணியாச்சன்னிக்கு பதினைந்து நாட்களும் கெடுநாட்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கு மீறினால் உயிர் போகும்.

தோடம் பிறக்கின்ற வண்ணம்

60. வெப்பிலைப் பத்தியத்திற்கு இடையூறு ஏற்படின் ஏழு வகையான தோடம் ஏற்படும். கைப்பு, புளிப்பு, அழற்சி, தாம்பூலம், பால், ~~[illegible]~~ வாசனைப் பொருட்கள், பூ.

61. தண்ணீர், குளிர்ச்சி, பெண்போகம், நடை அதிக -மாதல், கண்ணீர் விட்டு அழுதல் ஆகியவை மிகுந்த தோடத்தைக் கொடுக்கக் கூடியவை என்று பெரியோர் கூறுவர்.

62. வாசனை மிக்க சந்தனம், கற்பூரம், பாக்கு, மிகுந்த சிவப்பான ஆடை, மோர், வெல்லம், தேன், பால், தயிர், நெய், கொடி, படுக்கை, பெண்போகம், குளிர்ச்சி -யுடைய வீடு ஆகியவை ஆகாது.

63. சோம்பல், களைப்பு, மூர்ச்சை, புலம்புதல், தேம்பி அழுதல், தாகத்தினால் தண்ணீரைத் தேடுதல், ஆகிய குறிகுணங்கள், பாதுகாக்கும் முறைகளை விட்டுவிட்டாலும் பத்தியத்தை விட்டாலும் வந்தடையும். தோடத்திற்குடையவை.

64. உடல் சூடாகும், அதனால் பெண்களைத் தொற்றின சன்னிக்கு மெய் நடுங்கல், இங்குமிங்கும் ஆடுதல், மயங்குதல், கை, கால் குளிர்ந்திருத்தல், ஆகிய குறிகுணங்கள் உரியவை.

65. வெப்பம் மிகுந்திருத்தல், நாடி தன் நடையினின்று விலகுதல், உப்பு உடலில் அதிகமாகி வெந்து போதல், எரிதல், வியர்த்தல், மயக்கமடைதல் ஆகியவை விட சன்னியின் குறிகுணங்கள்.

அதிசார நிதானம்

66. ஒரு நாளில் இரண்டு, மூன்று முறை குளிருதல் மயக்கமாதல், தண்ணீர் வேட்கையாயிருத்தல், தோள், தலை வலித்தல், நாக்கு முள் போன்று இருத்தல்

67. நாக்கில் முள் போன்று தோன்றி அதிலிருந்து தண்ணீர் வடியாமை, வாடுதல், மயக்கமாதல் முகம் வியர்த்தல் ஆகிய குறிகுணங்கள் வியப்பைத் தரக் கூடியவை என்று அறிக.

68. நாக்கு கறுத்துப்போதல், குளிரில் வாது முள் போன்று விரைத்துப் போதல், சொறி, மேல்மூச்சு வாங்குதல், ஒன்றைப் பார்த்தல் எழுந்திருத்தல், மறுபடி விழுதல், அதிகமாய் ஆதல்.

புத்தி தடுமாறும்

69. நாக்கு முழுதும் சிவந்து தண்ணீர் சொறிந்து முள்போன்று தோன்றுதல், உடலெங்கும் சூடாய் இருத்தல், நீர் வேட்கை அதிகமாதல், ஆகிய குறிகுணங்களைக் காட்டினால் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

70. ஏழு வகையாகத் தோடம் தோன்றும் என்று முன்னர் சொல்லப்பட்டது. அந்த ஏழும் கழனமின்றியே பதினைந்து நாட்களிலேயே குணமாகும் என்று நூலறிந்த வைத்தியர்கள் சொல்லியுள்ளனர்.

71. காரமான உணவுப்பொருட்களை உண்ணுதல், கண் கலங்குமாறு அழுதல் இடுதல், உணவுப் பண்டங்களை அதிகமாய்ச் சாப்பிடல் ஆகிய காரணங்களால் கழிச்சல் வரும்.

72. மலம் கறுத்துப் போதல், கெட்டியாய் இறுகிப் போதல், வயிறு பொருமி வாயு அதிகமாகி அவ்வப் போது அடிவயிறு வலித்து கழிதல் வாதஜ அதிசாரத்தின் குறிகுணங்கள்.

73. ஒரு சில நேரங்களில் மலம் சிவந்தும் வெப்பம் அதிகமாகி கறுத்தும் இருத்தல், நீர் வேட்கையாதல், மார்பு வலி, அறிவு மயங்குதல் மயக்கம், உதடு காய்ந்து போதல் ஆகிய குறிகுணங்கள் பித்த அதிசாரத்தினுடையவை.

74. வயிறு வலித்தல், பசியின்மை, உடல் மேற்புறம் குளிரல் உள்ளே வயிறு எரிச்சலாதல் பொருமல் ஆகியவை சிலேத்தும அதிசாரத்தின் குறிகுணங்கள்.

75. இரைச்சல் வாந்தி, பிரமை பிடித்தது போலிருத்தல் விக்கல், தூக்கம் வராதிருத்தல், இரத்தம் சீதமாகக் கழிதல், எழுந்து அங்கு மிங்கும் ஓடுதல், கைகால் குளிர்ந்து போதல், மேல் மூச்சு வாங்குதல் ஆகியவை அதிசாரத்தின் குறிகுணங்கள்.

76. விளக்கெண்ணெய் போன்றும் [illegible]யானது பொன் போன்றும் தேன் போன்றும் கழிதல், மலம் நாற்றமாகக் கழிதல், கிழக்குரல் போல் பேசுதல் ஆகிய குறிகுணங்கள் சாத்தியசாரத்தினுடையவை.

77. எள்ளின் நிறத்தையும் தேனின் நிறத்தையும் போன்று நிற வேறுபாட்டுடன் நாற்றமுமாய்க் கழிதல், பின்னர் மலம் இளகியும் கட்டிகளுடனும் கழிதல். ஆகியவையும் மேலே சொன்ன சாத்தியசாரத்தினுடையவை.

78. முல்லை அரும்பு போன்று பற்களை உடையவனோ. இரண்டு கண்களில் முகம் தெரிபவனும் பழைய வினையை நீக்கியவனுமான [illegible] அறிவுடையவனே! குயிலைப் போன்ற பேச்சைப் போன்று நாடி.

79. சுத்தி குடித்தல், [illegible]சனை அறிதல், காது நன்கு கேட்டல் தும்மல், நகக்கண் கை [illegible] ரேகை இவற்றில் இரத்தக்குறி தோன்றல், கைகால் வெம்மையாயிருத்தல் ஆகியவை சாத்தியமாகும்.

உத்தமநாடி

80. மார்பு கைகால் குளிர்ந்து போதல்
வெப்பம் அதிகமாதல், வாய் பிதற்றல், மேல்மூச்சு வாங்கல், எப்போதும் சிறிது சுரம் கண்டு கொண்டே இருத்தல், மிக்க வாசனை தெரியாது.

81. கண்களில் கோபம் வெளிப்படல், முகத்தில் ஒளி இழந்து காணல், நகக்கண், கை, கால் இவற்றில் இரத்தக்குறி காணப்படல், கண்கள் இமையாமை, உணவின் சுவை தெரியாமை, வியர்வை வராமை, தனுர்வாதத்தொடு வாத வலியும் தோன்றுதல்.

82. தலை சோர்ந்து போதல், தொண்டையில் சிலேத்துமம் (கபம்) தோன்றுதல், தும்மல், வெப்பம் அதிகமாகி கறுமை கலந்த பொன்னிறமாய் உடலின் நிறமாதல், தொடர்ச்சியான விக்கல், நாடி தளர்ந்து மெல்லியதாய் இருத்தல், தொட்டவுடன் சக்கரம்போல் சுற்றி வருதல்.

83. முன்னால் வேண்டிய வாதம் பின்னால் வருவதாயும் பின்னால் வேண்டிய பித்தம் முன்னால் கூடியும் சிலேத்துமம் முன்னேயும் வாதம், பித்தம் இவை இரண்டு நாடிகளின் பின்னாலும் மிகவும் வேகமாக கூடினால் இவை அனைத்துமே அசாத்தியம் என்பர்.

84. சாப்பிட்டவன், அதிகமான பசியையுடையவன், தூங்கினவன், நடந்தவன், நண்டு, முயல், கோழி, பாம்பு, தவளை ஆகியவற்றைச் சாப்பிட்டவன், கள், சாராயம் குடித்தவன், வாயுத் தொல்லையால் துன்பப்படுபவன் மற்றும்

85. அமரகண்டன் போல் அமுதம், நஞ்சு இவற்றைச் சாப்பிட்டவன், குமரகண்டன் வலியையுடையவன், பேய் பிடித்தவன், பாரத்தைச் சுமந்ததால் உடல் இளைத்தவன்,

86.

சயம், கிராணி, கண்ணோய் உள்ளவர்கள், விருப்பப்பட்டு வழி நெடுக நடந்தவர்கள், இளைத்தவர்கள் கல்வி கற்றவர்கள், தலை பாரமில்லாதவர்கள்.

87. பழஞ்சுரத்தால் பாதிக்கப்பட்டவர் நலமடைந்த அடுத்த நாள் பல்துலக்கி நாக்கினை வழித்து சுத்தம் செய்து மிதமான தீயில் காய்ந்த வெந்நீர் குடித்து தேற்றான் விதை ஒன்றினைச் சாப்பிடவும்.

88. மூன்றாம் நாள், நான்காம் நாள் பட்டினியாய் இருந்து ஐந்தாம் நாள் ஆறாம் நாள் கஞ்சியைக் குடித்துப் பின் மருந்தினைச் சாப்பிடுபவரிடம் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் குடியிருப்பாள்.

89. முதலில் பட்டினியாய் இருந்து பின் மருந்தினைக் கொள்ள வேண்டும். கஞ்சியை இடையில் தேவையா குடிக்கவேண்டும். அவ்வாறில்லையெனில் காலையில் சிலேத்துமமும் பகலில் பித்தமும் அந்தமையும் மாலையில் வாத பித்த சிலேத்தும சுரங்களுக்குக் கஞ்சியைக் கொடுக்கலாம்.

90. வாத, பித்த, சிலேத்தும சுரங்களுக்கும் எளிதில் செரிக்கக்கூடிய உணவையும் கஞ்சியையும் கொடுக்க வேண்டும். வாத சுரத்திற்கு மூன்று வேளைக்குப் பட்டினி இருத்தல் நன்று.

91. வாதசுரம் ஏழு நாளிலும் பித்தசுரம் ஆறு நாளிலும் கபசுரம் ஒன்பது நாளிலும் தொந்த சுரம் பத்து நாளிலும் தீரும்.

92. திருமாலின் பாதங்களை நினைத்து மருந்தினையும் வாகட நூலினையும் அறிந்து நோயாளியின் தன்மை, நோயின் தன்மை, காலம் அறிந்து செயல்பட வேண்டும்.

93. பொருளுடையவனாய் நோயின் தன்மை முழுவதையும் கூறி மருந்தினை உட்கொள்ளல், மருந்தினால் வரும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்ளல், அவர்களின் வழி நடத்தல் ஆகியவற்றைக் கடைப்பிடித்தால் நோய் நீங்கும்.

94. பல நோய்களுக்கும் ஏற்றதான மருந்தினைக் கொள்க. அதை, வீரியத்தையும் அறிந்து வைத்திய நூலில் சொல்லப்பட்டது மட்டுமல்லாது அனுபவத்தில் உள்ளதையும் அறிந்து செயல்பட வேண்டும்.

95. உடல், காலம், வாத, பித்த, சிலேத்துமம் ஆகிய முத்தன்மைகள், வயது, நோய் ஆகிய ஐந்தினையும் அறிந்து பொருந்தும் வகையுள்ள மருந்தினை ஆய்ந்தறிந்து கொடுப்பவன் சிறந்த மருத்துவன்.

96. ஐந்தாம் நாள், ஏழாம் நாள், பதினெட்டாம் நாள், பதினேழாம் நாள், பதினோராம் நாள், முடசன்னி வந்ததென்றால் குணமானாலும் ஆகும். ஆகாமல் போனாலும் போகும்.

வாத நிதானம்

1. திருமால், பிரமன், சிவன் ஆகிய முத்தேவர்களும் வாழ்த்த தாமரை மலர் போன்ற கோயிலில் மனம் வாழும்.

2. ஊர்த்துவ வாதத்தில் மேன்மூச்சு, இருமல், ருசியின்மை, பொருமல் ஆகியவை அதிகமாகும். சிவப்பம் பழைய மலம் தங்கும். மனத்தில் ஆசை அதிகரித்தால் பல நோய்கள் அதிகமாகும்.

3. சிரோ வாதத்தில் தலையில் வாதம் அதிகரித்து தலைவலியுண்டாகும். உடல், மனம் வலித்து, இரவில் தூக்கமின்றி பசியெடுக்காது ஏக்கத்துடன் பார்த்து புலம்புதலைச் செய்யும்.

4. உடலில் ஒரு பக்கமாய் வலிக்கும் பாரிசவாதத்தில், சொல் தடுமாறுதல், உடலின் ஒரு பக்கம் வேல் போன்று குத்தி வலித்தும், இரவில் எப்போதும் தூக்கம் வராமை கைகால் நடுக்கல் கொள்ளுதல் ஆகிய குறிகுணங்கள் துன்பத்தைக் கொடுக்கக் கூடியவையாக அமையும்.

5. கம்பவாதத்தில் கை, கால், தலை நடுங்குதல், உடல் வாடி சழுவுதல், உடல் வலித்தல், இரவில் தூக்கமின்மை, அவ்வாறிருப்பின் புலம்புதல் அதிகமாய் இருக்கும்.

6. பண்ணார்த்த வாதத்தில் கை, கால் சந்துகளில் வலித்தல், அசையாதிருத்தல், உடல் தளர்ந்து போதல், மனம் வாடுதல், ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

7. கிசகிச வாதத்தில் வாதமானது முறைவான இடத்தில் சேர்ந்திருந்து கால் வரைக்கும் வலித்தல், சந்துகள் வலித்தல், இழுத்துப் பிடித்துக் கொள்ளுதல், கால் எடுத்து நடக்க முடியாமல் போதல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

8. இரத்தம் கக்குதல், விக்கல் எடுத்தல், மயக்கம், உடல் உரு அழிந்து வேறு ஒரு உருவம்போன்று தோற்றமளித்தல், ஆகியவை சோணவாதத்தின் குறிகுணங்கள். பொலிவிழந்த அழகினை அவ்வழுவகையே நினைத்தல் வேண்டும்.

9. ஆமவாதத்தில், உணவின் சுவை தெரியாமை, பசியெடுக்காமை, உண்ட உணவு செரிக்காமை உடலில் வலி எங்கும் தோன்றும். தோன்றும்.

10. கிரசவாதத்தில் மலம் வெளியேறுதல், வீங்கிப் புலம்புதல், தாகமெடுத்தல், மயக்கம், பித்தம் ஆகிய குறிகுணங்களைத்தோற்று வித்து துன்பத்தைக் கொடுக்கும்.

11. சந்தியாவாதத்தில் பகல் முழுதும் வலித்தல், உடல் முழுதும் உள்ள கை, கால் முதலிய உறுப்புகள் சந்துகளில் குத்தல், குடைச்சல், நடுக்கம் ஏற்படுதல் ஆகிய குறிகுணங்கள் ஏற்பட்டு தூக்கம் வராமல் போகும்.

12. தனுர்வாதத்தில் உடலானது வில் போல் வளைந்து இருக்கும். நடுக்கமேற்படுதல், தாகம் வருதல், பசியின்மை, தள்ளாடி மயங்கி விழுதல் ஆகிய குறிகுணங்களையுண்டாக்கி உடல் பலவாறாய்த் தோன்றும்.

13. திமிர்வாதத்தில் உடலின் மேல்தோல் மரத்துப்போதல், யானையின் தோலைப் போன்று தடித்துப் பெருத்துப் போதல், நிமிர்ந்த அன்னத்தின் நடை போன்று நடத்தல், தள்ளாடி நடத்தல், ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

14. அந்திவாதத்தில் தலை, நெற்றியில் வலி அதிகமாதல், பழைய வினை என்று ஆற்றிக்கொள்ளுதல் மயக்கமாதல், தன்னையே நொந்துகொள்ளுதல், பேசுதல் இன்றிக் கவலை கொள்ளுதல், மூக்கில் இரத்தம் வடிதல், உடல் நடுங்குதல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

15. காசவாதத்தில் இரண்டு கண்கள் சிவுதல், கை கால் நடுங்குதல், விழுதல் கண் கலங்குதல் மயங்குதல், ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

16. கண் சிவத்தல், நீர் வடிதல், தும்மல், இரவில் தூங்க முடியாமை, வலித்தல், வெப்பம் அதிகரித்தல் உண்டே ஆக வேண்டும் என்ற நிலை ஆகிய குறிகுணங்கள் நயன வாதத்தில் வரும்.

17. உதர வாதத்தில் வயிறு உளைதல், இரைதல், வயிறு, மார்பு கல் போல் கெட்டியாய் ஆதல், இரவில் தூக்கம் வராமை, அதனால் இரவு முழுதும் துன்பப்படுதல், உடல் முழுதும் குத்தல் வலி ஆகிய குறிகுணங்கள் தோன்றும்

18. நாசிகக்கிரண வாயு நாசிகை வாதத்தில் வரும். முகவாதம், வாய் பேசமுடியாமை, கொட்டாவி விட்ட பிறகு உதடு இணையாமல் இருத்தல் ஆகிய குறிகுணங்கள் இவ் வாதத்தில் வரும்.

19. அவையங்கா வாதத்தில் உடலின் உறுப்புகள் சந்துகள் இழுத்துப் பிடித்தாற் போல் வலித்தல், இரவில் தூக்கமின்மையால் துன்பப்படுதல், சிறுநீர், மலம் இரண்டும் சரியாய்ப் போகாமை, ஆகிய குறிகுணங்கள்

20. சிம்மாங்க நாத்தம்ப வாதத்தில் காது இரைதல் உழலை, உடலெங்கும் அடித்தாற் போல் வலித்தல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.

21. நாவாதத்தில் வாதமானது பாம்பு போன்று நாடியனைத்திலும் ஊர்ந்து போதல், கன்னத்தில் வலி அதிகமாதல், மந்தம் அதிகமாகி காது கேட்காது செவிடாதல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

22. சர்ப்ப வாதத்தில் சர்ப்பம் போன்று மெதுவாகச் செல்லும். கடுப்பு அதிகமாகும். கை கால் எரிதல், உடல் உறுப்புகள் வலித்தல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

23. முடக்கு வாதத்தில் உடலுறுப்புகள் முடங்குதல், வலித்தல், உடல் சிறிய உருவமாகுதல், தள்ளாடி நடத்தல், கை, கால் இவற்றின் இடைப்பட்ட சந்துகள் குவிந்து சிறியதாகல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும். வாமன அவதாரத்திலுள்ளது போல் ஆவான்.

24. சன்னி வாதத்தில் உடலானது நெருப்பு போன்ற அனலால் வாடிவிடுதல், உடல் இளைத்தல், சோர்ந்து போதல், மலம் கட்டிக் கொள்ளுதல் கால், கை அசையாது, கிடந்த படியிருத்தல், உயிர் பிரிந்து விடுதல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.

25. அங்குளி வாதத்தில் கை, கால் விரல்கள் சுருங்குதல் குறுக்க நரம்பு இழுத்துக் கொள்ளுதல், வாழ்நாள் குறைந்து போதல் ஆகியவை அங்குளி வாதத்தின் குறி -குணங்கள்.

26. பிரம வாதத்தில் வாதம் அதிகமாகி அழிஞ்சியாகி மயக்கமடைதல், சோர்வடைந்து விடுதல், தண்ணீர் தாகமெடுத்தல், தளர்ச்சி மனம் சோர்ந்து போதல், ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

27. மலபந்த வாதத்தில் மலம், சிறுநீரைப் போக விடாது வாதம் தடுக்கும்.

28. தன்மத்தின் வாதத்தில் ஈரல், வயிறு இவற்றில் குத்தல் வலி, செரியாமை, வாந்தி, விக்கம், உடல் இளைத்தல், தினவலியுண்டாதல், சோகமாய் இருத்தல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.

29. துவர்பாகு வாதத்தில் இரண்டு தோளிலும் வலியுண்டாதல், இரவில் தூங்கமுடியாமை, பகலிலும் தூக்கம் வராமை, தோளில் கடுத்து வலிக்கும், இவ்வாதம் ஒரு பக்க வாதமாகவும் ஆதல் ஆகிய இக்குறி குணங்கள் உண்டாகும்.

30. பாதவாதத்தில் கால் இழைச்சல், அதிசார சுரம் காய்தல், வாந்தி, சீதக்கழிச்சல் மயக்கம், அறிவு மயங்குதல், ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

31. தாமவாதத்தில் ஏப்பம் அதிகமாதல், உணவு செரியாமை வயிறு வலித்தல், செரியாத நிலையில் உணவு புளித்து ஏப்பம் வருதல், வயிறு பொருமுதல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.

32. விச்சுவச்சீவாதத்தில் உடல் உறுப்புகள் வலித்து உடம்பனைத்தும் வலியெடுத்தல், தலை வலித்தல்

33. சுரவாதத்தில் காதிரைச்சல், தும்மல், சுரங்காய்தல், உடல் நடுங்குதல், வாந்தி, தலை, உடல் வலித்தல், கழிச்சல் அதிகமாதல், கொட்டாவி விடுதல் ஆகிய குறி குணங்கள் உண்டாகி துன்பத்தை அதிகரிக்கும்.

34. சோபவாதத்தில் சுரங் காய்ந்து அதிகரித்தல், வயிறு கெடுதல், உடல் வலித்தல் குணங்களையும் கோபச்சுர வாதத்தில் உடல், நரம்புகளில் வலி அதிகரித்தலையும் தோன்றும்.

35. சீரணவாதத்தில் உணவு செரிக்காது மந்தமாதல், காதில் இரைச்சல் ஏற்படுதல், கண் கலங்குதல், ஆகிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

36. சயவாதத்தின் உடல் இளைத்தல், தாகசுரம், மந்தம், பலத்தைக் இழுக்கச் செய்யும் வலியுண்டாதல், சயம் அதிகரித்தல், ஆசனவாய்வு மிகுதல், மந்தமாதல், உடல் இளைத்தல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

37. <u>திவ வாதத்தில்</u> பகலில் உடல் வலித்தல், தாக்கம் அதிகமாய் ஆதல், ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

38. சலவாதத்தில் தண்ணீர் தோன்றும் இடங்களான குளம், ஆறு, கடல் இவற்றில் ஏதேனுமொன்றில் விழுதல், மயக்கமாதல், தாகமெடுத்தல், நடுக்கங் கொள்ளுதல் வியர்வை தோன்றாமை, செவிடாதல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

39. ஆதபத்தின் வாதத்தில் உலகத்திற்கு ஒளியைக் கொடுக்கும் சூரியனின் ஒளியைப் பார்த்து சுழன்று விழுந்து விடுதல், காதில் இரைச்சல் ஏற்படுதல், உடலில் வருத்தம் பல தோன்றுதல், ஆகிய குணங்கள் உண்டாகும்.

40. அக்கினியின் வாதத்தில் ஒளியைப் பார்த்தவுடன் உடல் நடுங்கி சோர்வுற்று விழுதல், விக்கி விக்கி கண்ணீர் பெருக்கெடுத்து வர கலங்கி நிற்றல், விகாரமுற்று விளங்குதல், ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

41. ததிவாதத்தில், தயிர் சாப்பிட்டால் சாப்பாட்டில் சேர்த்துக் கொண்டால் வாதம் அதிகமாகி சிலருக்கு மயக்கம் உண்டாதல், சூலை, வாந்தி, மலக்கட்டு உண்டாதல், உடல் வற்றுதல், ஒளி குறைதல், கோபம் வருதல் ஆகியவை உண்டாகும்.

42. மதுவாதத்தில் தேன் சாப்பிட்டால் வாதம் அதிகமாதல், உடல் விதுவிதுக்குதல், தாகம் அதிகமாதல், வேறு - பட்டிருத்தல், தலை குளித்தால் தலை வலி அதிகமாதல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

43. உன்மதவாதத்தில் பித்தம் அதிகமாதல், பேய் பிடித்தல், வாதம் அதிகமாதல்,

ஆகியவை காணும்.

44. வாயு வாதத்தில் உறுப்புகளின் வாதம் சேர்ந்து வலித்தல், சக்கிலத்தில் வாதம் இணைந்து துன்பப் படுத்த தாது கெட்டுப் போகும்.

45. சம்போக வாதத்தில் பெண்களின் மோகத்தால், போகத்தால் வாதம் அதிகமாகல், தாகமெடுத்தல் உடலின் வன்மை நீங்கி உலர்ந்து போதல், நோய் அதிகமாகல் ஆகியவை தோன்றும்.

46. கெந்தகத்தின் வாதத்தில் வாசனைப் பொருட்களை முகர்வதினால் கொடுமையான தலை நோய் வரும். சிரத்தின் வாதத்தில் வாந்தியாதல், தலை வலி வருதல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

47. தாம்பூல வாதத்தில் தாம்பூலம் போட்டதனால் உடல் சோம் மயக்கமாதல், காது கேட்காமை, கழுத்தில் வியர்த்தல், கலங்குதல், சாப்பிட்டதைக் கக்குதல், திகைத்தல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.

48. சீரான வாதத்தில் பல் சோறு சாப்பிட்டால் வாதம் அதிகமாகும். மலம் வாந்தியாக வரும். மயக்கம், அறிவு மயங்கி வாட்டமடைதல், காதில் வயிறு இரைச்சல் அதிகமாதல், வயிற்றில் வலி உண்டாதல், இரைதல், புலம்புதல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

49. பூதவாதத்தின் இடத்தில் சென்றதனால் வரும் பயமும் ஒருவர் சொன்ன செய்தியால் வரும் பயமும் அதனால் வாதமுண்டாதல் பேய்பிடித்தல், அதனால் அருதல், பிதற்றுதல், மயக்கமடைதல், கீழே விழுதல் ஆகிய குணங்களைத் தோற்றுவிக்கும்.

50. மோகனத்தின் வாதத்தில் ஒரு பொருளை விரும்பி அதனை அடைய வேண்டும் என்று நினைக்க அப்பொருள் தன்னை வந்தடையாவிட்டால் காய்ச்சல் வரும்.

51. வனவாதத்தின் காற்றானது உடலெங்கும் தங்கியிருந்து எங்கும் பரவி நோயை யுண்டாக்கும்.

52. கலகவாதத்தின் கோபம் அதிகமாதல், அதிகமாகப் பேசுதல், வாதம் அதிகமாதல், தன் நினைவு தளர்தல், உடல் இளைத்தல் மயக்கமாதல் உடல் வேறுபட்டு விகாரமாய் விளங்குதல், பயப்படுதல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

53. கார்காலத்தில் பெய்யும் மழையைப் பார்த்தாலும் ஆகாயத்திலுள்ள மேகத்தைப் பார்த்தாலும் மந்தமாகவே இருக்கும். வாதம் அதிகமாகும் சூலை உண்டாகும். ஜடத்தன்மையுண்டாகும். அனைத்து வகை வேதனைகளும் திணவில் வரக்கூடும் இவை மேகவாதத்தின் குறிகுணங்கள்.

54. சண்டை போட்டு எதிராளியை வெட்டி அடக்கி கனவதில் காட்சியைக் காணும் போது இரணத்தையுண்டாக்கும் ~~இ~~ இரணக்காயா? தோன்றுதல் இவறுபாடு கொண்டிருத்தல், மயக்கம் வியர்வை யுண்டாதல், அறியாமை அதிகமாதல் ஆகியவை இரணவாதத்தின் குறிகுணங்கள்.

55. வாத உடம்பின் நடுக்கர வர்க்கத்தினராய் இருப்பர், பசியெடுக்காது, தூங்குவதற்காக கண்ணை மூடினால் உடல் பதைக்கும். ஆகிய குறிகுணங்களை நித்திரை வாதம் பெற்றிருக்கும்.

56. மாரடித்து அன்புறல், வாயால் அரற்றுதல், வாதமுண்டாதல், தலை நடுங்குதல், உடல்

கிளர்ச்சியடைதல், தலை வலித்தல்
மயக்கமடைதல் ஆகியவை துக்க வாதத்தின்
குறிகுணங்கள்.

57. திருடர்கள் முதல் யாரை வெட்டுவதைப்
பார்த்தாலும் வாய்வு உண்டாகும்.
அறிவு மயங்கி ஒரு அற்று அற்றி கீழே விழுதல்,
பேய் போன்று தீய வார்த்தைகள் பேசுதல்,
ஆகியவை கடக வாதத்தின் குறிகுணங்கள்.

58. சாக்கிர வாதத்திற்கு திக்கம் ஆகாது.
அவ்வாறு செய்யின் இறப்பு நேரிடும். இவ்வாறு
தீய செய்கைகள் நிகழும்.

59. சோறுண்ட பிறகு குத்தினாற் போல் வலித்தல்
கோபம் அதிகமாதல், விடியல் வரைக்கும் 'கோ'
'கோ' என்று ஒலித்தல், பின்னர் சீரணமாதல்,
வியர்த்து விடுதல் ஆகியவை சூலை வாதத்தின்
குறிகுணங்கள்.

60. ஆற்று மரியின் வாதத்தில் தாகம் அதிகமாகத் தோன்றுதல், உடலில் வலி ஏற்படுதல், சிறுநீர் அதிகமாய் வெளிவிடுதல், காய்ச்சல், விந்துவினை வெளிவிடுதல், உடல் நடுங்குதல் ஆகியவை குறிகுணங்களாய் அமைகின்றன.

61. தாம்பிரத்தின் வாதத்தில் காற்றினையும் குதிரை ஓட்டத்தாலும் யானைகளின் நடையினாலும் எழுந்த துகளினைப் பார்த்தால் வாயு எழும்.

62. தலையைத் தொட்டியினால் வெட்டுதல் போல் வலியேற்படும். மண்டையோட்டில் வலி ஏற்பட்டு இரவும் பகலும் மிகும். கைதட்டுதல், பாடுதல், ஆடுதல் போன்ற பல வேறு செயல்களைச் செய்விக்கும் கபால வாதம்.

வாத நிதானம் முற்றும்.

பித்தகுணலட்சணம்

1. உடல்சுழலல், கண்கள் சுழலல், உடல் வியர்த்தல், நடுங்குதல், மயக்கம், தாகமெடுத்தல், மலம், சிறுநீர் கழிதல், ஆகிய குறிகுணங்கள் சீரண பித்தத்தினுடையவை.

2. தலை சுற்றுதல் உடல் ஒளி இழந்து போதல், களைப்பாதல், முடி உதிர்தல், வியர்வை தீய நாற்றம் ஆதல் மிகுந்திருத்தல், ஆகிய குறிகுணங்கள் பித்தம் என்று அறிந்து சோர்வை விடுவதற்குரிய வழிகளைப் பார்க்க வேண்டும்.

3. வெளிச்சத்தினைப் பார்க்க முடியாமை, அதிக தாகம் எடுத்தல், கண்கள் உருளல், மேல் மூச்சு வாங்குதல் ஆகிய குறிகுணங்களையுடைய இதனைச் சூரியாலுன்னப் பித்தமெனக் கூறுவார்கள்.

4. முகம், இரண்டுகண்கள் நன்கு அகன்று விரிந்திருத்தல், சிறுநீர், மலம் மஞ்சள் நிறமாயிருத்தல், பசியில்லாதிருத்தல், எப்போதும் தாகமெடுத்தல் ஆகிய குறிகுணங்கள் காலைப் பித்தத்தினுடையவை.

5. உடலின் ஒளி குறையும், தாகம் அதிக்கும், உணவில் விருப்பமின்மை, சாப்பிட்ட பிறகு புளித்தேப்பம் வருதல், சிலவேளை நாடியில் பித்தம் தங்குதல் ஆகியவை பித்தத்தின் குறிகுணம்,

6. இரத்தமாக வாந்தியெடுத்தல், விக்கல் வருதல், உடல் முழுதும் வலித்தல் காம இன்பம் தோன்றாது வேறுபாடு, மோகம் இருக்காது இவை சேர்ந்தாற்ற பித்தத்தின் குறிகுணங்கள்.

7. உடலில் வியர்வை அருவி போல் வழிதல், பலம் குறைந்து போதல் உடலிலுள்ள நீர் இடத்தில் உள்ளது போல குளிர்ந்திருப்பின் அவேத பித்தம் என்று கூறுவர்.

8. வாந்தி போல் போன்று எடுத்தல் மயக்கமாதல் மிகுந்த வேதனையாதல், சிறுநீர் கழிதல், கவலையினால் ஏற்படும் வேறுபாடு அதிகமாய்க்காணல் ஆகிய குறிகுணங்கள் தீர பித்தத்தினுடையவை.

9. உடலெங்கும் கட்டியாய்க்கட்டிக் கொள்ளுதல், மயிர் கூச்செறிதல், உடலில் வெப்பம் அதிகமாதல், சொறி சிரங்கு உண்டாதல் ஆகியவை புண்டரீக பித்தத்தின் குறிகுணங்கள்.

10. உடலெங்கும் பாம்பின் தோல் போல் தோற்றம் பெற்று பொலிவிழந்து, ஒளியிழந்து, நிறம் இறைந்து நீண்ட நாட்களாய் தங்கியுள்ள நோய் போல் தோற்றமளிக்கும் இது அசாத்தியமாகும். இது 'புசாங்க பித்தம்' என்று அழைக்கப்படும்.

11. கை, கால் எரிதல், தாது குற்றமடைதல், உடல் வலித்தல், துன்பம் அதிகமாதல், ஆகிய குறிகுணங்கள் கரபாத பித்தத்திற்குடையவை.

12. சீதக்கழிச்சல், பித்தம், மயக்கமடைதல், உணவில் விருப்பமின்மை, அறிவு கலங்குதல், மந்தாக்கினி பரவுதல் ஆகிய குறிகுணங்கள் சீதபித்தத்திற்குடையவை.

13. வாந்தியெடுத்தல், உணவில் விருப்பமின்மை வாய்நீர் அதிகமாக ஊறுதல், தலை சுற்றுதல், வாய் தித்தித்து இனிப்பாய் இருத்தல், மயக்கமாதல், உடலிலுள்ள மயிர்க்கால்கள் சிலிர்த்துக் கொள்ளுதல், ஆகிய குறி குணங்கள் மூர்ச்சை பித்தத்திற்குரியவை.

14. மூக்கில் இரத்தம் வடிதல், தண்ணீர் தாகமெடுத்தல், வெயில் மேனியில் பட்டால் உடல் கூசுதல், வேகமாக நடத்தல், கோபப்படுதல், பழிச்சொற்களைப் பேசுதல், ஆகிய குறிகுணங்கள் குரோத பித்தத்தினுடையவை.

15. தீய நினைவுகள் வருதல், மயக்கங்கொள்ளுதல், பித்தம், கோபம் அதிகமாதல், மிகுதியான வாந்தி, தலை சுற்றுதல் வாய்நீர் அதிகமாக ஊறுதல், ஆகிய குறிகுணங்கள் சென்னி பித்தத்தினுடையவை.

16. உணவு செரித்தல், பசி அதிகமாதல், வெப்பம் மிகுதல் காற்றுபரிதல், பிறகு தாகமெடுத்தல், கழுத்து எரிச்சல் கொள்ளுதல், மார்பு எரிச்சலடைதல் ஆகிய குறிகுணங்கள் உஷ்ண பித்தத்தினுடையவை.

17. தூக்கத்தில் பிதற்றுதல், தீய சொற்களைக் கூறுதல் கை, கால், தலை இவற்றில் கட்டுக்கட்டாகக் கட்டிக் கொள்ளுதல், ஆகிய குறிகுணங்கள் துர்பாஷா பித்தத்தினுடையவை.

18. துர்கந்த பித்தத்தில் தீராத தீய நாற்றம், உடலில் எரிச்சல், தாகமெடுத்தல், தலை கிறுகிறு என்று சுற்றுதல், மயக்கமாதல், வியர்வை அரும்புதல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

19. சீரணமாதல், வெல்லம், ஆமிலம், காமிலம், இரத்தம், ஆகியவை இருத்தல் அவேத சீத பித்தமாகும்.

20. மயக்கமடைதல், உட்பகையுள் ஒன்றாகிய குரோதம், அறிவு மயங்குதல், தீய வார்த்தைகளைப் பேசுதல், கெட்ட வாசம் வருதல் ஆகிய குறிகுணங்கள் சதாதிரிஷ்ண பித்தத்திற்குடையவை.

21. மேற்கூறப்பட்ட இருபத்து நான்கு வகை பித்தமென்று பெரியோர்கள் கூறியுள்ளனர். இவற்குறிப்பிட்ட குறிகுணங்களைக் கொண்டிருந்தால் அவ்வவ்வகைப் பித்தங்களே என்று குறிப்பிட்டுள்ளனர்.

அங்கவிபாகம்

1. கற்கம், குடிநீர், சாறு, தயிலம், நெய், பாகு, சூரணம், வடகம், லேகியம், இரசாயனம் ஆகிய மருந்து செய்முறைகளுடன் மற்றவையும் உண்டு.

2. அஞ்சனம், புகை, வேது, நசியம், வத்தி, விரோசனம் எனும் பேதி மருந்து, தாம்பூலம், எனும் மருந்துகளுடன் மற்றவையும் உண்டு.

3. தாரகம் எனும் மந்திரம், மருந்துக்கேற்ற யந்திரம், தலை முழுகல், சத்திர (கத்தி) சிகிச்சை
இரத்தம் வாங்குதல்,
மந்திரம், எந்திரம், ஆகிய பல சாத்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

4. வைத்திய சாத்திரத்தில் கூறியுள்ளபடி குற்றமில்லாத வைத்தியர்கள் நோயாளியின் தன்மை அறிந்து சிகிச்சை செய்ய பண்ணிக்கும். வைத்திய சூத்திரத்தில் கூறியுள்ள படி செய்தால் அற்றமானது திருமால் போல் உலகை பெருக்கும்.

தன்வந்திரி வைத்திய சிந்தாமணி

1. பிரமன், பரமசிவன், திருமால், பார்வதி, கணேசன் பராசக்தி முதலாக அனைத்துத் தெய்வங்களையும் வணங்கி தன்வந்திரியார் எழுதிய கிரந்தத் தமிழ் நூலைச் சொல்வேன்.

2. வைத்திய சிந்தாமணி தமிழில் வெண்பா வகையில் அந்தாதியாகப் பாடப்பட்டுள்ளது. கணக்கிணையென இதில் நோய்களின் குறிகுணங்கள், வேறுபாடுகள் கூறப்பட்டுள்ளன.

3. எந்த நூல்களிலும் காணப்படாத தோஷங்களின் வகைகள், குறிகுணங்கள், சாத்திய அசாத்தியங்கள் இதில் கூறப்பட்டுள்ளன. அவற்றை அறிந்து மருத்துவம் செய்தல் வேண்டும்.

4. தோடத்தைத் தீர்ப்பவர்க்கு ஐம்பலன் அதிகமென்று வேதம் கூறுவதால் காக்கும் கடவுளாகிய பிரமனுக்குப் பெருமை வந்து சேரும்.

5. தோடங்களுள் பல வகையுள்ளன. அவற்றை வகுத்துரைக்கிறேன் கேளுங்கள். நாகவங்கதோடம் கிருமி தோடம், வன்னி தோடம் சல்லியதோட்டம், விடதோடம்

6. லோக தோடம், நாக தோடம், ~~[illegible]~~ இட்டம் வரும் வங்க தோடம், தாகம் வரும் காங்க தோடம்

7. வன்னி தோடத்தில் தாது நட்டமாகி உயிரையும் போக்கி விடும் நாமவிந்தம் என்னும் தோடத்துக்கு நோயுண்டாகும்.

8. மேற்கூறிய இந்த தோடங்கள் முறையாக நீக்கக் கூடியவை.

9. வன்னியைச் சேர்த்து இரதம், மஞ்சள், சொங்கத்தாழந் தோறு இவற்றைச் சேர்த்து எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து காடி நீர் ~~[illegible]~~ சேர்த்து கழுவி எரித்தெடுத்து பதங்கமாகச் செய்து கொள்ள வேண்டும். அதனைக் கொடுக்க லோக தோடம் நீங்கும்.

10. பேய்த்தும்மட்டி வேர், அழிஞ்சில் வேர், கற்றாழை இவற்றைச் சேர்த்து மத்தித்துக் கொள்க. அதனைக் காடி சேர்த்துக் கழுவி இடிக்கல்லில் போட்டு பதங்கமாகச் செய்து வங்க தோடத்திற்குக் கொடுக்க தீரும்.

11. மரிவேளைவேரினைக் கற்றாழையில் சேர்த்து நன்கு மத்தித்து காடி சேர்த்து அரைத்துப்பதங்கமாக்கிக் கொள்க. அதனை வன்னி தோடத்திற்குக் கொடுக்க தீரும்.

12. சித்திரமூலவேர், இலவம், கற்றாழை இவற்றைச் சேர்த்தரைத்து காடி சேர்த்து கழுவி பதங்கமாக எடுத்து ~~[illegible]~~ சொல்லிய தோடத்திற்குக் கொடுக்க இணமாகும்.

13. கருமத்தம்வேர்ரையும் கற்றாழையையும் சேர்த்து அரைத்து காடியில் கழுவி பதங்கமாகச் செய்துகொள்க. அதனுடன் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் சேர்த்து விச தோடத்திற்குக் கொடுக்க அது தீரும்.

14) சுக்கு, மிளகு, திப்பிலி, கற்றாழை இவற்றை எடுத்து அரைத்துக் காடியில் கழுவி பதங்கமாகச் செய்து இரும தோடத்திற்குக் கொடுக்க தீரும்.

15. கல்லுப்பையும் சமமாக எடுத்து கற்றாழைச் சோறு விட்டு மூன்று நாள் அரைத்துப் பதங்கமாகச் செய்து கொடுக்க ஏழுவகை தோடம் கரம் நீங்கும்.

இரசசுத்தி

1. இரசம் மூன்றரை கிலோ, கந்தகம் 350 கி எடுத்து மந்திரித்துப் பூசை செய்து சுத்தி முறைகளைத் தொடங்குவாயாக.

2. குழிக்கல்லில் இரசத்தை விட்டு மஞ்சள் தூளினைச் சேர்த்து அடங்கும் வரை அரைத்து ஒட்டரையைக் கலந்து வெய்யிலிலே வைத்து பின் எடுத்து துணியில் முடிகட்டிக் கொள்க.

3. வழிகட்டிய அதனைச் சிம்பிழிச்சை, செம்முருக்கம்பட்டை, பலாசின் பட்டை, பாகலிலை, நாகவல்லி,

4. பனை, கொடிவேலிவேர், கையாந்தகரை, வேலிப் பருத்தியிலை, சாரணையிலை ஆகியவற்றால் தனித்தனியே மூன்று மணிநேரம் அரைக்க இரசம் சுத்தியாகும்.

கெந்தக சுத்தி

5. நெல்லிக்காய்க் கெந்தகத்தை இரும்புப் பாத்திரத்தில் போட்டு ஆமணக்கெண்ணெய், நெய்யை விட்டு ஒரு விறகால் எரிக்க கெந்தகம் சுத்தியாகும்.

அரிதார சுத்தி

6. மடலரிதாரம், மனோசிலையையும் எடுத்துத் துணியில் கட்ட காடியில் அல்லது வண்ணிச்சாற்றில் மூன்று நாள் எரிக்கச் சுத்தியாகும்.

7.

வெள்ளைப்பாடாண சுத்தி

வெள்ளைப்பாடாணத்தைப் பொடித்து இரட்டை மடிப்புள்ள துணியில் போட்டு கட்டிக்கொள்க. சுண்ணாம்பு நீரினைக் கலந்து அதில் இக்கட்டினைத் தூக்கி தோலேந்திரமாகக்கட்டிப் போட சுத்தியாகும்.

கௌரிசுத்தி

8. கௌரியினைச் செம்பருத்தியின் சாற்றில் அரைத்து உருண்டையாகச் செய்து 35கி அளவு எடுக்க. அதனை கட்டி இரண்டு மடிப்புள்ள துணியில் வைத்துக் கொள்க. கற்சுண்ணத் நீற்றை நீரில் கரைத்து அதில் ஆறு மணிநேரம் ஊற வைக்க சுத்தியாகும்.

9. தொட்டிப்பாடாணம்சுத்தி

புதிய ஓட்டில் தொட்டிப்பாடாணத்தைப் போட்டுக் கட்டிக்கொள்க. எருமை நாத்தொட்டியையும் சேர்த்து கோமயத்தை ஊற்றி அதில் கோலேந்திரமாகக் கட்டி மூன்று நாள் எரிக்க சுத்தியாகும்.

மயில்துத்தம்

10. மயில் துத்தத்தைப் பசுந்தயிர் விட்டு இடைவிடாது அரைத்து அடைதட்டி ஓட்டில் வைத்து ஒரு புடத்தில் வைக்க சுத்தியாகும்.

பால்துத்தம்

11. பால்துத்தத்தைப் பொடித்துச் சீலையில் கட்டிக் கொள்க. சுண்ணநீரில் அதனைத் தோலேந்திர-மாகக் கட்டி எரிக்க சுத்தியாகும்.

கற்பாத்தை (கற்பூரம்)

12. கற்பாத்தை எனப்படும் கற்பூரத்தை ஒரு சிறுநீற்றில் ஆறு மணிநேரம் ஊறவைத்துக் கொள்க. கழுதை நீரில் தோலேந்திரமாகக் கட்டி எரித்தால் சுத்தியாகும்.

13. ## நிமிளை

காடி, வாசனைமிக்க நீர், செம்மறிநீர் இவை ஒவ்வொன்றிலும் நான்கு (நாள்) தோலேந்திரமாக எரிக்க நிமிளை தாமரை மலர் போலும் பொன் நிறமாகவும் ஆகும். சுத்தி பெறும்.

மாட்சிகம்

14. பொன்நிறமாகவும் தாமரை நிறமாகவும் உடைய மாட்சிகத்தைத் தேனில் அரைத்து உருட்டிச் சீலையில் கட்டி கொள்ளுநீர், காடி, கோமயம் இவற்றில் தோலேந்திரமாகக் கட்டி பன்னிரெண்டு மணிநேரம் எரிக்க சுத்தியாகும்.

15. ## வெண்காரம்

வெண்காரத்தைப் பொரித்து எலுமிச்சம்பழச்சாறு, காடி, இவை கிரண்டினாவது, தனித்தாவது அரைத்து தாளைக் கரண்டியிலிட்டு எரிக்க நெய் போன்று பொங்கும். அப்போது சுத்தியாகும்.

சங்குபாடாணம்

16. சங்கு பாடாணத்தைத் தேனில் மூன்று மணிநேரம் எரித்தால் சுத்தியாகும். கெந்தகத்துடன் ஆட்டுப் பாலை விட்டுக் கொள்க. அதனிடையில் சங்கு பாடாணத்தை வைத்து வேகவைக்க சுத்தியாகும்.

நேர்வாளம்

17. நேர்வாளத்தைப் பசுஞ்சாணத்தில் வேகவைத்துக் கொள்க. பின்பு கோமயத்தில் வேகவைத்துக் கொள்க. நெய்யில் வாட்டிக்கொள்க.

மைசாட்சி

18. எலுமிச்சந்தோல், சீந்தில், புடோல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கோரைக்கிழங்கு ஆகியவற்றைச் சமனெடுத்து அச்சாற்றில் ஒருநாள் மைசாட்சியைக் கட்டி தோலேந்திரமாகக் கட்டி எரிக்க சுத்தியாகும்.

பஞ்சலவணம்

19. இந்துப்பில் காடியைத் தெளித்து வெயிலில் வைக்க சுத்தியாகும். ~~[illegible]~~ ஆட்டின் சிறுநீரை விட்டு கொதிக்க வைக்க சுத்தியாகும்.

20. சிவந்த உப்பான கோமியத்தினை ஊற்றி எலுமிச்சம்பழச் சாற்றினையும் ஊற்றி வெயிலில் வைக்க சுத்தியாகும். விரட்டியுப்பு பொட்டியுப்பு இவற்றைப் பசுநீரிலும் மோரிலும் ஊற வைத்து வெயிலில் வைக்க சுத்தியாகும்.

21. கல்லுப்பை சூட்டிற் போட்டு வறுக்க சுத்தியாகும். வளையலுப்பைப் புளியிலையின் சாற்றில் ஊறவைத்து வெயிலில் வைக்க சுத்தியாகும்.

சாரசுத்தி

22. காடி, பசுநீர் விட்டு சத்தியசாரத்தை நன்கு அரைக்க வேண்டும். அரிசி கழுவிய தண்ணீரில் வெடிசாரத்தை அரைத்துக் காய வைத்து எடுக்க சுத்தியாகும்.

கற்பூரசிலாசத்து – போளம்

23. கற்பூர சிலாசத்தைத் தாமரை வளையம், நெய்தல் கிழங்கு, கிரசம் இவற்றைச் சேர்த்தரைக்க சுத்தியாகும். போளத்தை கார்போளத்தை வெயிலில் வைக்க வேண்டும்.

பெருங்காயம் - திப்பிலி

24. பெருங்காயத்தை வசம்பைச் சாறு விட்டு மூன்று மணி நேரம் அரைத்தெடுக்க சுத்தியாகும். திப்பிலியைக் காடியிலும் செம்மறியாட்டின் சிறுநீரிலும் அரைக்க சுத்தியாகும்.

துத்தூரம், எட்டிவிதை

25. துத்தூர விதையை, எலுமிச்சஞ்சாற்றில், மோரில் மூன்று மணி நேரம் வேகவைத்தெடுக்க சுத்தியாகும். எட்டி விதையைத் தேற்றான் சாற்றில் வேகவைக்க சுத்தியாகும்.

மிளகு

26. கொடிவேலியின் சாற்றில் திப்பிலியை ஊறவைத்துக் கொள்க. மிளகில் தேவையான அளவு மோரை ஊற்றி ஊறவிட்டு நிழலில் உலர்த்திக் கொள்க. பின் அதனை எடுத்து சட்டியில் இளவறுவலாய் வறுக்க சுத்தியாகும்.

ஓமம் - சீரகம்

27. ஓமத்தைச் சுண்ணநீரில் மூன்று மணி நேரம் ஊற வைத்து பின் உலர்த்திக் கொள்ள சுத்தியாகும். நற்சீரகம், கருஞ்சீரகம் இரண்டையும் சுண்ணநீரில் மூன்று மணி நேரம் ஊறவைத்து பின் எடுத்து இள வறுவலாய் வறுக்க சுத்தியாகும்.

அரப்பொடி

28 அரப்பொடியைக் காரெண்ணெயில் போட்டு எரித்து ஆறியபின் எடுத்துக் கழுவிட அரப்பொடி சுத்தியாகும். கருவேலம்பட்டைச் சாற்றில் அரப்பொடியைப் போட்டு எரித்து ஆறியபின் எடுத்து வெய்யிலில் வைத்து உலர்த்த சுத்தியாகும்.

29. அரப்பொடியை, நெல்லிக்காய்ச்சாறு, முருங்கை, நாவல் பட்டைச் சாறு, புளியிலைச்சாறு, ஆகிய சாறுகளைச் சேர்த்து அதில் வேக வைக்க சுத்தியாகும்.

லோகபற்பம்

30. நெல்லிக்காய்ச்சாறு, முருங்கை, நாவல் இவற்றின் பட்டைச் சாறுகள், புளியிலைச்சாறு ஆகிய இவற்றில் தனித்தனியே அரைத்து அடையாய் தட்டி காய வைத்துக் கொள்க. பின் அதனை அகலில் வைத்து இருசீலை மண் செய்து இரண்டு முழு அளவு புடம் போட பற்பமாகும்.

31.

செந்தூரம்

திரிபலை (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்)க் குடிநீரில் லோகத்தை நன்கு அரைத்துக் கொள்க. அதனை உலர்த்தி இருபத்திரண்டு புடம் போடவும்.

32. ஆலம் பாலில் வைத்து பதினொன்று புடமும்
எருக்கம்பாலில் வைத்து பத்து புடமும் வைத்து
எடுத்து அரைத்து மீண்டும் நாற்பத்து மூன்று
புடம் வைத்து ஆறிய பின் எடுத்துக்கொள்க.

33. அதனை மறுபடி அரைத்துத் தண்ணீரில் கலந்து
குகையில் வைத்து சீலைமண் சுற்றி ஓட்டில்
வைத்து உலையிற் துருத்தியால் ஊத
குற்றங்கள் நீங்கி செந்தூரமாகும்.

வங்கசுத்தி

34. காடி, கோமயம், மோர், கொள்ளுச்சாறு
இவற்றால் வங்கநாகத்தைத் தனித்தனியே
உருக்க சுத்தியாகும்.

35. கருநாகத்தைச் சட்டியில் போட்டு மூன்று விரகால்
எரித்து எடுத்து வைத்துக் கொள்க.
அடுக்கிக் கொடுத்து மேலே தெளிக்க சாம்பலாகும்.

36. மேற்கூறப்பட்ட சாம்பலை வாகையிலைச்
சாற்றாலும் கொட்டைக் கரந்தையிலைச் சாற்றிலும்
கலந்து ஓமக்குடிநீரிலும் வைக்கி ஒன்பது மணிநேரம்

அரைத்து புடம் வைக்க பற்பமாகும். இப்

37. பற்பத்தைத் தாம்பூலச் சாற்றிலரைத்து ஆயிரம் வரட்டியில் புடம் போட்டு ஐந்து கழித்து எடுத்துப் பார்க்க செந்தூரமாகும்.

வெள்ளீயம் பற்பம் செந்தூரம்

38. தூய்மையாக்கப்பட்ட வங்கத்தை இருசட்டியில் போட்டு எரித்து உருக்கிக் கொள்க. நாயுருவிச் சாம்பலை அதன்மேல் போட்டு நன்கு வறுக்க அவ் உருவும் சாம்பல் நிறமானதாகும். ~~பின் அதனை எலுமிச்சந்~~

39. பின் அதனை எடுத்து எலுமிச்சஞ்சாற்றால் அரைத்து புடம் போட வேண்டும். மூன்று முறை புடம் போட்டு முன் உருவம் மாறி வெந்து அடங்கின பிறகு எடுத்து வைக்க செந்தூரமாகும்.

தாமிர பற்பம் சுத்தி - செந்தூரம்

40. தாமிரத்தைத் தகடாகத் தட்டிக் கொள்க.

நெல்லி, கற்றாழை, மோரையும்

இவற்றின் சாறுகளையும் எடுத்துக் கொள்க. கொல்லன் உலையில் வைத்து சாறுகளைக் காய்ச்சி ஏழு முறை தகட்டைத் தோய்த்தெடுத்துக் கொள்க.

41. செந்தூரத்தை எருக்கம்பால் விட்டரைத்து மேற்
கூறப்பட்ட தகட்டின் பூசிக் கொள்க. அதனை
இரண்டு சட்டியினுள் வைத்து மூன்று சீலை
மண் செய்து கொள்க.

42. அதனை உலர்த்திய பின் ஆயிரம் வரட்டியில் புடம்
போடுக. ஒரு புடத்திலேயே பற்பமாகி விடும்.
அதனைப் பசும்பால், கடுக்காய், நெல்லிக்காய்,
தான்றிக்காய் சேர்ந்த இடிநீர், கற்றாழை
நீர்

43. ஆகியவற்றில் விடாமல் அரைத்து ஆயிரம்
வரட்டியில் புடம் போட வேண்டும். இவ்வாறு
நாற்பத்திரண்டு மணி நேரம் எரிக்க சாம்பலாகி நீறிப் போகும்.
அதனுடன் எருக்கம் பாலையும் செருப்படியின்
சாற்றையும் சேர்த்தரைத்துக் கொள்க.

44. வரட்சுண்டி,

இவற்றையும் சேர்த்தரைத்து ஆயிரம் வரட்டியில்
புடம் போடுக. இவ்வாறு ஏழு முறை போட
செந்தூரமாகும்.

45. சிவப்பான செந்தூரத்தை நன்கு ஒன்று
சேரக் கலந்து தகுந்த அனுபானத்துடன்
நோயாளி உட்கொண்டால், சுவையின்மை,
வாந்தி, நீர்வேட்கை, மயக்கம், மாந்தம், குன்மம்,
ஆகிய நோய்கள் தீரும்.

அரிதார பற்பம்

46.
அரிதாரத்தைப் பத்து பங்கு எடுத்துக் கொள்க.
அதனுடன் எருக்கம்பால், எலுமிச்சம்பழச்சாறு
கருநொச்சிச்சாறு, ஆகிய சாறுகளை
ஊற்றி ஒவ்வொன்றிலும் வகைக்கு மூன்று
மணி நேரம் அரைத்து சிறு அடைகளாகத்
தட்டிக் கொள்க.

47. ஒரு சட்டியில் அரசம்பட்டைச்சாற்றை
ஊற்றி அதன் மேல் சட்டியை வைத்து மேற்
குறிப்பிட்ட வில்லைகளைப் போட்டு அடுப்பத்து
மூன்று மணி நேரம் எரிக்க வேண்டும். பற்பமாகும். ஆறிய பின்
பதத்துடன் இறக்கக் ~~[illegible]~~ கொள்ள வேண்டும்.

48. 350கி அரிதாரத்தைக் கல்வத்தில் போட்டுக் கொள்க. தும்பைச் சாற்றை விட்டு அரைத்து அடைகளாகத் தட்டி சட்டியில் போட்டு சட்டியினால் மூடி வைக்க.

<u>49 — 52 பாடல்கள் ஏடு சேதமாயுள்ளதால் எழுதப் பெறவில்லை.</u>

53. தூய்மையான பொன் தகட்டை எலுமிச்சம் பழச் சாற்றால் அரைத்து இரண்டு அகல்களின் நடுவில் வைத்து சீலைமண் செய்து புடம் போட பற்பமாகும்.

54. எருக்கம்பால் விட்டரைத்து நன்கு தூளாக்கி, பூனைக்காலிச்சாற்றைச் சேர்த்தும் பாதரசத்தையும் சேர்த்து வகைக்கு நான்கு மணி நேரம் விடாமல் அரைத்துக் கொள்க.

55. அதனை வழித்து சிறிய அடைகளாய்த் தட்டி நிழலில் உலர்த்தி அகலுக்குள் வைத்து மூடிக் கொள்க. நீளமான துணியை எடுத்து சீலை மண் செய்து கொள்க. ஆயிரம் வறட்டியில் வைத்து ஐந்து முறை புடம் போட பொன் செந்தூரமாகும்.

தங்கபற்பம்

56. தங்கத்தைத் தகடாக வெட்டி வைத்துக்கொள்க. கெந்தகத்துடன் கருப்பஞ்சாறு சேர்த்தரைத்து தகட்டின் மீது பூசி ~~வைக்க~~. வெயிலில் வைத்து எடுத்துக் கொள்க. இவ்வாறு ௫ முறை பூசி வெயிலில் வைத்து எடுத்து அகலுள் வைக்க. சீலை மண் செய்து கொள்க.

57. அதனை ஆயிரம் வரட்டியில் புடம் வைத்து ஆறிய பின் எடுத்துக் கொள்ள வேண்டும். கெந்தகம் நான்கு பங்கு இரசத்தையும் சேர்த்து தகட்டின் மீது பூசி அகலில் வைத்துக் கொள்க.

58. ஆயிரம் வரட்டியில் புடம் போடுக. இவ்வாறு மூன்று முறை போட குற்றம் நீங்கி பற்பமாகும். அதனை எடுத்துத் தக்க அனுபானத்துடன் கொடுக்க சயம், நீண்ட சுவாசம் காசம், பாண்டு ஆகிய நோய் தீரும்.

வெள்ளிபற்பம் — செந்தூரம்

59. வெள்ளியைக் காய்ச்சிய பழுபாகல் சாற்றில் தோய்த்தெடுக்க சுத்தியாகும். தூய்மை செய்ததைத் தகடாகத் தட்டிக் கொள்க.

60. துகை நீற்றைத் தாய்ப்பாலில் அரைத்து மேற்கூறப்பட்ட தகட்டின் மீது பூசி வெயிலில் வைத்துக் கொள்க. குகையில் வைத்து சீலை மண் செய்து கொள்க.

61. ஆயிரம் வரட்டியை அடுக்கி அதனுள் குகையை வைத்து எரிக்க பற்பமாகும். இப்பற்ப அளவுக்குச் சமமாக சாதிலிங்கத்தைச் சேர்த்து பால் விட்டு அரைத்துக் கொள்க.

62. கருவேல் பட்டை, வெள்வேலம்பட்டை, ஆலம் பால், வெள்ளெருக்கம் பால் செருப்படிச்சாறு ஆகியவற்றில் தனித்தனியே அரைத்து புடத்தில்
63. வைத்தெடுக்க. இவ்வாறு ஏழு முறை புடம் போட செந்தூரமாகும். இதனை அளவறிந்து அநுபான -மறிந்து கொடுக்க பல நோய்கள் தீரும்.

வெண்கலசத்தி- பற்பம், செந்தூரம்

64. வெண்கலத்தை நன்கு உருக்கி புளியிலைச் சாற்றில் சாய்க்க சத்தியாகும். அதனை ரம்பத் -தாள் ராவிய பொடியாக்கிக் கொள்க. அதற்குச் சமமாக கெந்தகத்தைச் சேர்த்து எருக்கம்பாலை ஊற்றிக் கொள்க.

65. பின் அரைத்து வெயிலில் வைக்கவும். இவ்வாறு ஏழு முறை செய்து வச்சிர மூசையில் வைத்து சீலை மண் செய்து கொள்க. ஆயிரம் வரட்டியில் புடம் வைத்துக் கொள்க. இவ்வாறு ஏழுமுறை செய்க. பற்பமாகும்.

66. மேற்கூறிய வெண்கல பற்பத்திற்குப் பாதி இலிங்கம் அதற்குப் பாதி கெந்தகமும் அதில்பாதி இரசம் சேர்த்து கல்வத்தில் போட்டுக் கொள்க. அதனுடன் எலுமிச்சம்பழச்சாறு, ஆலம்பால் ~~[illegible]~~.

67. பூனைக்காலிவேர்க் குடிநீர் அரசம்பட்டைக் குடிநீர் கருவேலம் பட்டைக்குடிநீர் முருக்கம்பட்டைக்குடிநீர் ஆகிய ~~[illegible]~~ ஒவ்வொன்றினாலும் ஒவ்வொருநாள் அரைத்துக் கொள்க. இவ்வாறு ஏழு நாள் அரைத்து ஆயிரம் வரட்டியில் புடமிடுக. இவ்வாறு ஏழு முறை புட ~~மிடு~~ வைத்தெடுக்க செந்தூரமாகும்.

68. அவ்வாறு முடியாவிட்டால் அம்மருந்தைக் குகை - யிலிட்டுக் கொல்லன் உலையில் வைத்து ஊதினால் சூரியன் போன்று செந்தூரமாகும்.

காந்த சத்தி – பற்பம், செந்தூரம்

69. காடி, எலுமிச்சங்காய்ச்சாறு, மோர் ஆகியவற்றில் [illegible] முறையே காந்தத்தை ஊறவைத்து வெயிலில் வைக்க. ஆறுமணிநேரம் கழித்துப் பார்க்க காந்தம் சுத்தியாகும்.

70. சுத்தியான காந்தத்துடன் நாலிலொரு பாகம் கெந்தகத்தைச் சேர்க்க. எருக்கம்பால், அரசம்பட்டை, சிறுபூனை வேர் இவற்றைச் சேர்த்தரைத்து [illegible] களயத்தில் வைத்து சீலை மண் செய்து புடம் வைக்க. இவ்வாறு மூன்று புடம் வைக்க.

71. ஆறிய பின் எடுத்துப் பார்க்க பற்பமாயிருக்கும். அதில் பாதி சாதிலிங்கத்தைச் சேர்க்க. பூனைக்காலி வேரைச் சேர்த்து மண் குகையில் வைத்து சீலைமண் செய்து மூன்று புடம் வைக்க செந்தூரமாகும்.

பவளசுத்தி – பவளபற்பம்

72. பவளத்தை எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்று மணி நேரம் ஊறவைத்து தேய்த்தெடுத்து வெந்நீரில் கழுவ சுத்தியாகும். [illegible] மறுபடியும் எருக்கம்பாலில் மூன்று நாள் ஊறவைத்து பின் எடுத்து குகையில் வைத்துக் கொள்க.

73. சீலை மண் செய்து நன்கு குகையை மூடி வைக்க. குகைக்கேற்ற குழியை வெட்டி அதில் குகையை வைத்துப் புடம் போட பவளம் பற்பமாகும்.

வயிரக்கல் சுத்தி - பற்பம்

74. வயிரக்கல்லினைக் குதிரையின் சிறுநீரில் மூன்று நாள் ஊற வைத்து பின் எடுத்து நன்கு அரைத்து குகையில் வைத்து சீலை மண் செய்து தக்க புடம் போட பற்ப நிறமாகும்.

மரகத சுத்தி - பற்பம்

75. நிலக்குமிழின் வேரை அரைத்து அதற்குள் பச்சைக்கல்லினை வைத்து உருட்டி மேலே சீலை மண் செய்து கொள்க. அதைப் பத்து வறட்டியில் புடம் வைத்தெடுக்க மரகதம் எனும் பச்சைக்கல் சத்தியாகும்.

76. தூய்மை செய்யப்பட்ட பச்சைக்கல்லினைச் சிறுபீளைச் சாறு சேர்த்தரைத்து அகலில் வைத்து சீலை மண் செய்து மூடிக் கொள்க. ஆயிரம் வறட்டியில் புடம் போட பச்சைக்கல் பற்பமாகும்.

நீல சுத்தி பற்பம்

77. நீலக்கல்லினைக் கழுதை சிறுநீரில் போட்டு ஒருநாள் முழுதும் வெயிலில் வைக்க சுத்தியாகும். வச்சிரமான குகையில் வைத்து கொல்லன் உலையில் வைத்தூத நீலக்கல் பற்பமாகும்.

மாணிக்க பற்பம்

78. மாணிக்கத்தை மூன்று நாள் ஊற விட்டு வெய்யிலில் வைத்து பின் எடுத்து வெந்நீரிற் கழுவி முலைப்பாலில் மூன்று நாள் ஊற வைத்துக் கொள்க.

79. ஊறிய பின் எடுத்து அகலில் வைத்து சீலை மண் செய்து கொள்க. மூன்று முறை புடமாக வைத்து ~~அவ்வின~~ எரித்தெடுத்து ஆறிய பின் எடுக்க பற்பமாகும்.

புட்பராக பற்பம்

80. புட்பராகத்தை அமுரி நீரில் ஊறவைத்து பின் வெயிலில் வைத்து எடுக்க வேண்டும். பின் அதனைச் சிறு பீளையின் சாற்றில் ஊறவைத்து குகையில் வைத்து கொல்லன் உலையில் வைத்தூத புட்ப-ராகம் பற்பமாகும்.

கோமேதகம்

81. கோமேதகத்தைக் குதிரையின் சிறுநீரில் மூன்று நாள் ஊற வைத்துக் கொள்க. பின் எடுத்து குமிழ்நீரில் ஒரு நாள் ஊற வைத்துக் கொள்க. சுத்தியானதை எடுத்து குகையில் வைத்து ஒரு நாள் கொல்லன் உலையில் வைத்தூத கோமேதகம் சுத்தியாகும்.

வைடூரிய பற்பம்

82. வைடூரியத்தைக் குதிரையின் சிறுநீரில் போட்டு ஒரு நாள் வெயிலில் வைத்து எடுத்துக் கொள்க. அடுத்தநாள் தேனை ஒத்த பூசணிக்காய்ச் சாற்றில் போட்டு வைக்க வைடூரியம் சுத்தமாகும்.

முத்து பற்பம்

83. முத்தினைச் சிறுபீளைச் சாற்றில் ஊற விட்டுக் கொள்க. பின் எடுத்து குகைக்குள் வைத்து சீலை மண் செய்து கொள்க. மூன்று புடம் வைத்து கொல்லன் உலையில் வைத்தூத முத்து பற்பமாகும்.

84. தாம்பூரத்தை மேற் சொல்லப்பட்ட சிறுபீளைச்சாற்றில் இரண்டு நாள் ஊற வைத்து எடுக்க சுத்தியாகும். வெண் முள்ளிச் சாற்றாலான குகையைச் செய்து சுத்தி செய்த தாம்பூரத்தை அதற்குள் வைத்து மண் குழியில் வைத்து புடம் வைக்க பற்பமாகும்.

இரசகற்பூர பற்பம்

~~[illegible]~~

85.
செம்பைச் சுத்தி செய்து நன்கு தகடாக்கிக் கொள்க. பின் ~~[illegible]~~ கெந்தகம், இரசம் இவற்றைச் சமன் எடுத்து சேர்த்து நொச்சிச் சாற்றைச் சேர்த்து அரைத்து அந்தத் தகட்டின் மேல் பூசி சீலைமண் செய்து கொள்க.

86. அத்தகட்டை உப்பு நிறைந்த சட்டிக்குள் போட்டு மேலும் உப்பினைப் போட்டு மூடி சீலைமண் செய்து அடுப்பிலேற்றி தீயிடுக.

87. அதிகமான தீயெரித்து எட்டு மணி நேரம் எரித்த பின் எடுத்துக் கொள்க. ஆறிய பின் எடுத்துப் பொடியாக்கி செம்புச் சிமிழில் அடைத்து சிறிய அளவில் புடம் வைத்து எடுக்க பற்பமாகும்.

88. பத்து நாள் கழித்து பற்பத்திலிருந்து 488 மி.கி எடுத்து திப்பிலிச் சூரணத்தையும் தேனையும் சேர்த்து கொடுக்க எட்டு வகைக் குன்மம் தீரும்.

89.

செம்பு பற்பம்

செம்பைத் தகடாய்த் தட்டி மெல்லியதாக்கிக் கொள்க. எலுமிச்சம் பழச்சாறு, வசம்பு சுட்ட சாம்பல் இவற்றைச்

சட்டியில் போட்டு எரித்துக்கொள்க. பின் முருக்கிலைச் சாற்றினை மேல் வாட்டு எரித்து ஆறிய பின் கருவி எடுத்துக் கொள்க.

90. சோற்றுக் கற்றாழையின் மடலில் மேற்கூறப்பட்ட எரித்த தகட்டினை அறுத்து நடுவில் வைத்துக் கொள்க. பின் அதனை எடுத்து அகலில் வைத்து மேல் மூடியால் மூடி மெல்லிய ~~துக~~ சீலைமண் செய்து ஒரு புடத்தில் வைத்து எரித்துக்கொள்க.

91. சுத்தியான செம்பினை எடுத்து அந்த எடைக்குக் கெந்தகம், இரசம் இவற்றைச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து தகட்டின் மேல் பூசி சீலைமண் செய்து கொண்டு மணல் வாலுகா இயந்திரத்துக்குள் வைக்க.

92. வைத்து ஆறுமணிநேரம் எரித்துக் கொள்க. ஆறிய பின் எடுத்துப் பொடியாக்கிக் கொள்க. அவ்வெடைக்குச் சமமாக நாபி, கெந்தி சேர்த்து 1.3வி இஞ்சிச்சாறு வார்த்தரைத்துக் கொள்க.

93. அரைத்ததனைச் சட்டியில் போட்டு எரித்துக் கொள்க. ஆறிய பின் எடுத்துப் பொடியாக்கிக் கொள்க. அதனைத் திப்பிலிச் சூரணம், தேன், பசு நெய், மோர் ஆகிய அனுபானங்களில் கலந்து கொடுக்க சூரியனைக் கண்ட பனிபோல் நோய்கள் தீரும்.

94. 120 மி.கி கொடுக்க பாண்டு, குன்மம், சோகை, சூலை, சூலை வாய்வு, ஆகிய நோய்களுக்குத்தக்க அனுபானத்தில் கொடுக்க குணமாகும் என்று தன்வந்திரி உரைத்துள்ளார்.

தாம்பூரபற்பம்

95. செம்பைத்தகடாக அடித்து நன்கு வளைத்து மெல்லிய தாய் தட்டி பருத்திச்சாறு விட்டு மூன்று நாள் அரைத்து பின் இஞ்சி, கொட்டைக்கரந்தையினைச் சாறு விட்டு கழுவிக் கொள்ள வேண்டும்.

96. கறியுப்பினைச் சிரட்டையில் மாலையில் வைக்கத் தண்ணீராய் விடும். கெந்தகம் 35கி, அயம் 18கி இவற்றை மேற் சொன்ன நீரால் அரைத்துக் கொள்க.

97. அவ்விழுதினைச் செம்புத் தகட்டின் மீது பூசி காய வைத்துக் கொள்க. அதனைச் சிறிய கலசத்தில் போட்டு மேல் மூடியை மூட வேண்டும். மூன்று மணிநேரம் எரித்துப் பற்பம் பக்குவமானவுடன் எடுத்துச் சிமிழில் பத்திரப்படுத்திக் கொள்க.

98. பக்குவப்பட்ட பற்பத்தை 130 மி.கி அளவெடுத்து தேனில் கலந்து கொடுக்க எட்டு வகைக்குன்மம் பாலவாயு, குமட்டல், வாந்தி, சூலை வகைகள் மூன்று ஆகிய நோய்கள் குணமாகும்.

அயசெந்தூரம்

99. அரப்பொடியை 1500 கி எடுத்து அதில் வேப்பம்பழச்சாற்றை ஊற்றி ஒரு நாள் ஊற வைத்து கழுவி எடுத்துக் கொள்க. பிறகு கற்றாழைச் சாற்றில் ஒரு நாள் அரைத்து வைத்துக் கொள்க. எலுமிச்சம் பழத்தோலைச் சேர்த்து ஒரு நாள் அரைத்துக் கொள்க.

100. இரசம், கெந்தகம் இவற்றை வகைக்கு 35 கி எடுத்து முருக்கிலைச் சாற்றைச் சேர்த்து நன்கு அரைத்துக் கொள்க. அயப்பொடியையும் கெந்தகத்தையும் சேர்த்து மாதுளைச் சாற்றை அதனுடன் சேர்த்துக் கொள்க.

101. மூன்று மணிநேரம் தனித்தனியே அரைத்து அடை போல் தட்டி [illegible] உலர்த்தி வைத்துக் கொள்க. பெரிய சட்டியில், வெப்பம்பட்டையை இடித்து கீழ் போட்டு அதன் மீது மேற்கூறிய வில்லைகளை வைத்து மேலும் அப்பட்டையையே போடுக. சட்டியை மூடி சீலைமண் செய்து கொள்க.

102. அடுப்பேற்றி சீலைமண் செய்த சட்டியை வைத்து மூன்று நாள் எரித்து பக்குவமானவுடன் இறக்கிக் கொள்க. பின் அதனைக் [illegible] கற்றாழைச்சாற்றில் அரைத்துக் கொள்க. அவ்விழுதைக் கற்றாழைச்சாறு போடப்பட்ட சட்டியில் வைத்துக்கொள்க.

103. ஆயிரம் வறட்டியில் புடம் வைத்தெரிக்க செந்தூர —மாகும். 130 மி.கி எடுத்து அதனுடன் திரிகடுகினைச் சேர்த்துத் தேனில் கலந்து நாற்பது நாட்களுக்குக் கொடுக்க பல நோய்கள் தீரும்.

104. சயம், இருமல், உளைமாந்தை, காசம், அவாசம்
105. பதினெட்டு எலிகடி, எட்டு வகை வாதம், எட்டு வகைக் குன்மம், பித்தம், ஐயம், அதனால் தோன்றும் பல நோய்கள், இவற்றிற்குத் தக்க அநுபானங்களில் கொடுக்க குணமாகும்.

கரிசாலைச் சாற்றில் கொடுக்க காமாலை, பாண்டு, விடக்கடிகள் தீரும்.

106. பேய்க்குமட்டிக் காய்க் குழம்பில் மருந்தினைக் கலந்து கொடுக்க நீராமை, மகோதரம், தீரும். அயச் செந்தூர மென்னும் இச் செய்முறை பல பிணிகளை நீக்கும்.

செந்தூரம்

107. ராவிய அயப்பொடியை தண்ணீர் விட்டு நன்கரைத்துக் கொண்டு சட்டியில் ஒன்றரை மணிநேரம் வைத்துப் பின்பு வதக்கி மீண்டும் நன்கரைத்துக் கொள்க.

108. இவ்வாறே ஐந்து முறை செய்ய வேண்டும். எலுமிச்சந் தோலை நெல்லிக்காய்ச் சாற்றில் ஊற வைத்து ஐந்து முறை அரைத்துக் கொள்ள வேண்டும்.

109. எலுமிச்சஞ்சாறு, கற்றாழைச்சாறு, நிற்குண்டிச்சாறு அரசிலைச் சாறு இவற்றில் ஒவ்வொன்றிலும் தனித்தனியே மேற்சொன்ன விழுதினை அரைத்துக் கொள்க.

110. தேகம் [illegible] பலமும்

110. ரசதம் 35கி, 17½கி கெந்தியும் எடுத்துக் கொள்க. பொரிகாரம், மடலரிதாரம், நவச்சாரம், தாளகம், மனோசிலை இவற்றை வகைக்கு 35கி எடுக்க.

111. எலுமிச்சம், சோற்றுக்கற்றாழை, மிளகு இவற்றின் சாறு சேர்த்து மேற்சொன்ன கடைச்சரக்குகளை அரைத்துச் சட்டியில் போட்டு ஆறுமணி நேரம் எரித்துக் கொள்ள வேண்டும். பின் கொம்மட்டிச் சாறிட்டு வதக்கிக் கொள்க.

112. மேற்கூறிய மருந்துச் சரக்கினைச் சட்டியிலிட்டு சீலை மண் செய்து வாலுகையிலிட்டு எரித்துக் கொள்க. பன்னிரெண்டு மணி நேரம் எரிக்க செந்தூரமாகும். பக்குவத்துடன் எடுத்துத் தக்க அனுபானத்துடன் கொடுக்க நோய்கள் நீங்கும்.

அயச்சத்துச் செந்தூரம்

113. அயப்பொடியை மூன்று நாள் எலுமிச்சம் பழச் சாற்றில் ஊற வைத்துக் கொள்க. பின் அதனை எடுத்து அதனுடன் நவச்சாரம், இரசம் இவற்றை வகைக்கு 9கி யும் கட்டுப்பு 35கி யும் எடுத்து சேர்த்துக்கொள்க.

114. துருசு, துத்தம், வீரம், வெண்காரம் இவற்றைச் சமனை எடுத்து வெடியுப்புச் செயநீர் விட்டு பதினைந்து மணிநேரம் அரைத்து அதனை ஐந்து பங்காக்கிக் கொள்க.

115. ஒரு பங்கினை மட்டும் எடுத்து குகையில் போட்டு அதன் வாயினை மூடி அடுப்பில் வைத்து எரிக்க மருந்து உருகி உடையும்.

116. மேலே ஒரு பங்கினைச் செய்தது போலவே ஐந்து பங்கினையும் குகையிலிட்டு அடுப்பெரித்து உருக்கிக் கொள்க. இரசம், பரி எனும் குதிரைப் பாஷாணம், இவற்றை வகைக்குச் சம அளவு எடுக்க.

117. இவை இரண்டின் அளவிற்கு இரட்டிப்பாகக் கெந்தகத்தைச் சேர்த்து பொற்றலைக் கையாந்தகரைச் சாறு சேர்த்தரைத்து விழுதினை மாத்திரைகளாகச் செய்து சட்டியிலிட்டு மணல் மறைபுடத்தில் வைக்க.

118. கெந்தகத்தைச் சேர்த்துச் செய்த இந்த செந்தூரம் சூரியனின் நிறத்தை ஒத்து இருக்கும். இதுடன் தக்க அநுபானம் சேர்த்துக் கொடுக்க கயம் சுவாசம் போகும்.

காந்தச்சத்து

120. காந்தத்தைச் சிறுநீரிலே அரைத்துக் கொள்க. பின் குதிரை புடமிட்டு எடுத்துக் கொள்க. அதனைப் பாம்பின் தோலில் குருதிக் கொழுப்பினைச் சேர்த்து நெல் குழியில் வைக்க.

121. மொச்சை, கோதும்பை, உளுந்து, குன்றி, செந்நெல், பாளிதம் எனும் கண்டசர்க்கரை, காரெண்ணெய் இவற்றை வகைக்குச் சமமாக (ஒரு பங்கு) எடுத்துக் கொள்க.

122. துருசு இரண்டுபங்கு, நவச்சாரம் அரைபங்கு, வெண்காரம் ஐந்து பங்கு இவற்றை வெள்ளாட்டின் இரத்தத்தை விட்டரைத்து ஐந்து பங்காய் பிரித்து குகையில் வைக்க.

123. குகையின் மீது வச்சிரமூசை செய்து நிழலில் உலர்த்திக் கொள்க. பத்து பங்கு காந்தத்தில் பிசறி குகையில் வைத்து கரியில் வைத்து ஊத வேண்டும்.

124. அவ்வாறு வைத்து ஊதி உருக்கிக் கொள்க. ஆறிய பின் பொடித்து மறுபடியும் உருக்கிக் கொள்க. அதனுடன் 5கி தங்கத்தையும் ஈயத்-தையும் சேர்த்துக் கொள்க.

125. செந்தூரத்தை பத்திலொரு பாகத்தை எடுத்துப் பொற்றலைக் கையாந்தகரைச் சாறு விட்டரைத்து வில்லைகளாய்ச் செய்து செப்பில் போட்டுக்கொள்க. அகலினை மேலே மூடி நிழலில் வைத்துக் கொள்க.

126. அப்பாத்திரத்தினை அவ்வாறே எடுத்து மணல்புடத்தில் வைத்து குறிப்பிட்ட காலளவிற்குப் பிறகு எடுத்துப் பார்க்க செந்தூரமாகும். 488மி.கி அளவு

127. எடுத்துத் தேனில் கலந்து இருபது நாட்கள் கொடுக்க சயம், காசம், தீரும்.

128.

காரீய பற்பம்

காரீயத்தை உருக்கிக் கற்றாழைத் தோலைச் சேர்த்து கரண்டியால் கிளறி பதினைந்து மணி நேரம் எரிக்க பற்பமாகும்.

129. காரியம் 35கி எடுத்து காசுக்கட்டி, அபின், வசுவாசி, பெருமரத்தோல், சாதிக்காய் இவற்றை வகைக்கு 17½கி எடுக்க. அவ்வெடைக்குச்
130. சமமாய் கற்றாழை மடலை எடுத்துத் தாவி சட்டியில் போட்டு இண்டிக் கொள்க. மூன்று மணி நேரம் எரித்து வெந்தவுடன் பக்குவத்துடன் எடுத்து வைத்துக் கொள்க. அதனை அளவறிந்து கொடுக்க கிராணி, ~~[illegible]~~ தீரும்.

131. 35கி காரியத்துடன் சுட்டத் திருப்பி ஆவாரை, இவையிரண்டையும் சேர்த்துக் கொள்க. தேன் 17½கி ~~[illegible]~~ தாவி சிறிது சிறிதாகச் சேர்த்து வறுக்க செந்தூரமாகும்.

132. சிவப்பான இம்மருந்துடன் சீரகம், சர்க்கரை, வெண்ணெய் இவற்றைச் சேர்த்து 130 மி.கி அளவு உட்கொள்ள கிரிச்சரம் தீரும். இருபது நாட்கள் இதனை முறைப்படி உட்கொள்ள கல்லடைப்பு குணமாகும்.

வெள்ளிய பற்பம்

133. பத்து பங்கு பொன், சூதம் வங்கம் பன்னிரெண்டு பங்கு எடுத்துக் கொள்க. முத்திரை உருக்கிக் கொள்க. வச்சிரவல்லியின் சாற்றில் கிச்சரக்கு -களை அரைத்துக் கொள்க. அஞ்சபாதி எனும் புள்ளாடியின் சமூலத்தை அரைத்துக் குகையாகச் செய்து அதனுள் மேற்சொல்லப்பட்ட அரைத்த மருந்தை வைத்துமூடுக.

134. சில்லிட்டு மூடி சீலை மண் செய்து 1000 எருக்கு உதிய அறட்டியில் புடம் வைத்தெரித்து நேரத்தில் பக்குவ மானவுடன் ஆறிய பிறகு எடுத்து தக்க அநுபானத் -துடன் நோயாளிக்குக் கொடுக்க பல பிணிகள் தீரும்.

வங்க பற்பம்

135. 35கி வங்கத்தை எடுத்து உருக்கிச்சட்டியில் போட்டுக் கொள்க. அதனுடன் வெங்கலம், திமினை, வெடிஉப்பு, பொன் இவற்றைத் நன்கு பொடித்துச் சட்டியில் தூவி கிண்டிக் கொள்க. அதனைப் பக்குவத்துடன் எரிக்க பற்பமாகும்.

136. தக்க அநுபானத்துடன் வங்கபற்பத்தை உட்கொண்டால் துன்மாங்கிஷம், இளைப்பு, மேகம், குன்மம், சுவி, சூலை, கெந்தி, புண், வாயு தீரும்.

வங்கத்தாமிரம்

137. 70கி தாமிரத்தைத் தகடாகத் தட்டிக் கொள்க. வெளிப்படுத்திச் சாற்றை வார்த்து குகையில் வைத்து உருக்கிக் கொள்க. வங்கத்தையும் 70கி எடுத்து குகையில் வைத்து உருக்கிக் கொள்க.

138. உருக்கிய வங்கத்துடன் 70கி இரசத்தையும் உருக்கிச் சேர்த்து இரும்புச் சலாகையினால் கிண்டி விட பற்பமாய் விடும். இதுவே வங்கத் தாமிரமாகும்.

139. ஈனமான வங்கத்தைத் தகடாக்கிக் கொள்க. காரெள்ளின் பிண்ணாக்கைக் காடி விட்டரைத்துக் கொள்க. இரண்டு பங்காய் எடுத்து அதில் ஒன்றின் தகட்டைப் பொதித்து வைத்து வாயினை மூடிக் ~~கொள்க~~ சீலை மண் செய்க. நாற்பது எருவில் புடம் போட வேண்டும்.

140. பற்பத்தைக் குழிக் கல்லில் போட்டு 4கி சூதத்தையும் சேர்த்து அரைத்துக் கொள்க. அரைத்ததை நன்கு மத்தித்து 488 மி.கி அளவு உட்கொள்ள தாக பிரமேகம் தீரும்.

141. தகட்டின் எடைக்குச் சமமாக அரசம் பட்டைத் தூளை எடுத்துச் சேர்க்க. எள்ளுப் புண்ணாக்கைக் கவசமாய் செய்து புடம் வைத்தெடுக்க பற்பமாகும்.

செந்தூரம்

142. வங்கத்தை உருக்கி எடுத்து அதில் மூன்றில் ஒரு பங்கு இரசத்தையும் உருக்கி சேர்க்க. மூன்று பங்கு பொன் கெந்தியைச் சேர்த்து மத்தித்து கிண்ட பற்பமாகும்.

143. 35 கி வங்கத்தை உருக்கிக் கொள்க. சட்டியில் புளிப் பரணியின் சாம்பலைப் போட்டு வறுத்துக் கொள்க. 10 கி இரசம், கெந்தகத்தைச் சேர்த்துக் கொள்க.

144. அனைத்தையும் சேர்த்து மத்தித்து கிண்டிக்கொள்க. உருண்டையாய் திரண்ட பிறகு வெயிலில் வைத்து அரைத்துக் கொள்க. இரசம் செந்தூரமாகும். பத்து நாழிகை கழித்து எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

145. 488 மி.கி அளவெடுத்து உட்கொள்ள குணமாகும்.

செவ்விளாநீரினை எடுத்து சீவி உள்ளே பொன்னினை வைத்துப் புடம் வைக்க. பற்பமாகும். அதைப் பிரமேகத்திற்குக் கொடுக்கலாம்.

146. அரிசித் தகட்டை — காயவளவு
அரைத்துத் தகட்டை அதிலுள் பொதிந்துக் கொள்க. நீர்ப்பூலா இலையை எடுத்து நன்கரைத்து அதில் பொதிந்து வைக்க அத்தியாகும்.

147. நாறு வரட்டியில் மேற் சொன்னதைப் புடம் வைத்தெடுக்க பற்பமாகும். அதனைத் தக்க அநுபானத்தில் கொடுக்க நோய்கள் நீங்கும். எருமை வெண்ணெயில் கலந்து கொடுக்க பிரமேகம் தீரும்.

148. கெந்தக பற்பம்

வீரம், காரம், இரசம், பொட்டிலுப்பு இவற்றை வகைக்குச் சம அளவு எடுத்துக் கொள்க. முட்டைக்குள் வைத்து இரவில் அவ்வாறே ஊறட்டு வைக்க.

149. 35கி கெந்தகத்தில் தண்ணீர் விட்டு மூன்று நாள் இழுக்கல்லில் அரைத்து அதனுடன் 4கி நீலத்தைச் சேர்த்தரைத்து வெயிலில் வைத்து உலர்த்திக் கொள்க.

150. அவ்வாறு உலர்த்தப்பட்ட வில்லைகளை ஆறை முதுகோட்டில் வைத்து சீலை மண் செய்து கொள்க. இதனை மணல் வாலுகா இயந்திரத்தில் வைத்து எரிக்க சரியான தருணத்தில் எடுக்க கெந்தக பற்பமாகும்.

151. இப்பற்பத்தைத் தக்க அநுபானங்களில் கொடுக்க நோய்கள் நீங்கும். குட்டம், கிரந்தி ஆதியான புண், சுணை, எட்டு வகைக் குன்மம் தீரும்.

பூநாகத் தாமிர பற்பம் — ?

152. முன் வைத்த பற்பப் பொடிக்கு, சமபங்கு பொன்னைச் சேர்த்துக் கொள்க. கெந்தக பற்பத்துக்குச் சமமாக இரசத்தைச் சேர்த்து தண்ணீர் விட்டரைக்க வேண்டும்.

153. மூன்று நாள் அவ்வாறு அரைக்க மெழுகாகும். 130 மி.கி அளவு எடுத்துச் சாப்பிட துன்பத்தைத் தரும் வாதசுரம், பித்தசுரம், சன்னி சுரம் ஆகிய பல வகைச் சுரங்கள் தீரும்.

அரிதாரபற்பம்

154. மடல்துத்தம் 16கி, மிளகு 4கி, இந்துப்பு, வெண்ணெய் இவற்றை வகைக்கு 1கி எடுத்து மென்மையாகும் வரை நன்கு அரைக்கவும்.

155. அரைத்த பொடியைப் பாதி எடுத்து செப்புப்பாத்திரத்தில் போட்டு அதன் மீது அரிதாரத்தை வைத்து அதன் மீது மறுபடியும் அப்பொடியைப் போட்டுக்கொள்க. இதனால் மூடி சீலைமண் செய்து அடுப்பில் வைத்து தீயிடுக.

156. ஒன்றரை நாள் எரித்த பின் பக்குவத்துடன் எடுக்க அரிதாரம் பற்பமாகும். ஆறிய பின் எடுத்து 1கி அளவெடுத்து நெய்யில் கொடுக்க வேண்டும்.

157. தேன், வெல்லம் இவற்றை அனுபானமாகக் கொண்டு இப்பற்பத்தை உட்கொள்ள இருமல், உணமாந்தை, சூலை, புண், சுர நோய்கள் தீரும்.

158. துருசு அரிதாரம், கல்சுண்ணம் இவற்றைச் சேர்த்தரைத்து வில்லைகளாய்ச் செய்து கொள்க. மண் அரைத்த சீலை மண்செய்து ஆறு எருவில் புடமாக வைத்தெடுக்க பற்பமாகும். தக்க அனுபானத்துடன் கொடுக்க நோய் அகலும்.

159. அரிதாரத்தையும் சுண்ணாம்பையும் சம அளவெடுத்து அரைத்து 130 மி.கி அளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து கொள்க. அதனைக் கடுக்காய் ஊறிய நீரில் இழைத்துக் கொடுக்க சுரம், மாறல்சுரம் தீரும்.

அப்பிரகத்தின் வகைகள்

அப்பிரக பற்பம்

160. பார்வதியின் மலைகளிலும் இடங்களிலும் கிடைக்கக்கூடிய அப்பிரகம் நான்கு வகைப்படும். அவை மண்டூகம், நாகம், வயிரம், பினாகம். அவற்றின் குணங்களைக் கீழ்க் காண்போம்.

161. பினாக அப்பிரகம் உருக்கினால் உருகும் தன்மையுடையது. வயிர அப்பிரகம் உருகாது. புகையாமல் இருக்கும். மண்டூக அப்பிரகம் கொல்லன் உலையில் வைத்து உருக்க தவளையைப் போல் குதித்து விடும். நாக அப்பிரகம் நல்ல பாம்பு போல் சீறும் தன்மையுடையது.

162. பினாக அப்பிரகம் வாதத்தைப் போக்கும். மண்டூகம் நோயையுண்டாக்கும். நாக அப்பிரகம் சிலேத்துமத்தை உண்டாக்கும். வயிர அப்பிரகம் எந்த நோயையும் போக்கும் திறன் படைத்தது.

163. வயிர அப்பிரகத்தினால் உட்டிணம், உடம்பின் மேலூறல், கபம், வாதம் இவற்றைப் போக்கும். எவ்வகைப் பிணியையும் போக்கும் திறன் உடையது.

164. அப்பிரகத்தை மூன்று நாட்கள் அகலில் போட்டு வைத்து இடித்துப் பொடித்தவுடன் எடுத்து வைத்துக் கொள்க. அதனுடன் காடியைச் சேர்த்து மூன்று நாள் வைத்திருக்க.

165 அக்கலவையுடன் அவ்வளவிற் பாதியளவு செந்நெல்லைச் சேர்த்து பெரிய தாழியில் போட்டுக்கொள்க. தாழியின் வாயில் துணியைக்கட்டி மேலும் காடியைச் சேர்த்து தீயிட்டெரிக்க அப்பிரகம் மெல்ல அசைந்து உருகத் துவங்கும்.

166. காடியின் வரும் தெளிவை அம்மியில் வைத்து அரைத்து வெண்ணெயைப் போல் வழித்தெடுத்துக் கொள்க. அதனுடன் கொள்ளச் சாற்றையும் எருக்கம்பாலை -யும் சேர்த்து ஆயிரம் வறட்டியில் வைத்து எரித்துக் கொள்க.

167. துளசி, நாயுருவி, நெருஞ்சி, செந்நெருஞ்சில்
பலாசு, நன்னாரி, சீதையின் கொட்டை, கரந்தை
தண்ணீர் விட்டான், சிற்றரத்தை,
168 கற்றாழை, நொச்சி, ஆடாதோடை, சிங்கம்,
மூக்கிரட்டை, பேராம்பல், நெய்தல், நிலக்குமிழ்,
169 முருங்கை, சாரணை, சிந்தில் ஆகிய மூலிகைகளின்
பால், பட்டை, வேர், கிழங்கு, இவையின் சாறு
இவையனைத்தையும் ஒன்றாய்ச் சேர்த்தரைத்து
1000 வரட்டியில் புடம் போட பற்பமாகும்.

170. இஞ்சியின் சாறு, அண்டச்சாறு, எலுமிச்சம் சாறு
எருக்க, கோரைக்கிழங்கு, தாது வளை, ஆலம் விழுது
இவற்றுடன் சாறு சேர்த்தரைக்க.

171. ஆனித்தனியே அரைத்து உலையில் வைத்து மூடி
சீலை மண் செய்து கொள்க. அறுபது எருவில்
புடம் வைத்தெடுக்க சிந்தூரமாகும்.

172. கருமை நிறமுடைய அப்பிரகம் கோமயத்தில்
ஏழு முறை ஊறவைத்தெடுக்க சுத்தியாகும்.
சுத்தி செய்த பின்னர் எடுத்தரைத்து எருக்கவிலையின்
சாறு சேர்த்து கலந்து குகையில் வைக்க.

173. குகையின் வாயை மூடி சீலை மண் செய்து கொள்க. பின்னர் உலையில் வைத்து ஊத பற்பமாகும். இதனை இரச மருந்துடன் சேர்த்து மருந்து செய்முறையில் பயன்படுத்தலாம்.

இரச செந்தூரம்

174. சுத்தி செய்த இரசம் ஒரு பங்கு கெந்தகம் ஒருபங்கு நவச்சாரம் நாலில் ஒரு பங்கு, எடுத்து மூன்று நாள் அரைத்து குப்பியில் வைக்க.

175. குப்பியின் வாயை மாக்கல்லினால் மூடி ஏழு சுற்று சீலை மண் செய்து காய வைத்துக் கொள்க. உப்பினைப் பரப்பி அதன் மீது குப்பியை வைத்து சுற்றியும் உப்பினை வைத்து மணலை மேலே பரப்பி தாழியினை மேலே மூடுக.

176. மேலே மூடியுள்ள கலத்துக்கு மூன்று சீலை மண் செய்து இரு விறகுத் தீயால் எரிக்க. இவ்வாறு முப்பத்தாறு மணி நேரம் எரிக்க செந்தூரமாகும்.

177. இரசத்தையும் கெந்தகத்தையும் சம எடை எடுத்து செருப்படையின் சாற்றில் இருபத்து நான்கு மணி நேரமரைத்து உருண்டை செய்து உலர்த்திக்

கொள்க. அவற்றைக் குப்பியிலிட்டு வாயினை
மாக்கல்வைத்து மூடிக் கொள்க.

178. குப்பிக்கு ஏழு சீலை மண் செய்து உலர்த்திக்
கொள்க. தாழியின் உப்பினைப் பரப்பி அதன்
மீது குப்பியை வைத்து மேலே அகல் வைத்து
மூடுக. சீலை மண்ணை நன்கு செய்க.

179. மூன்று மணி நேரம் இரு விறகு கொண்டு எரிக்க
தக்க தருணத்தில் எடுத்துப் பார்க்க செந்தூரமாகும்

180. ஆறிய பின் செந்தூரத்தை எடுத்து பத்திரப்படுத்திக் கொள்க. நாவி, கறிமிளகு
இவற்றை ஆறில் ஒரு பாகமாக எடுக்க. சூரணித்துக்
கொள்க.
130 மி.கி அளவு செந்தூரத்தை எடுத்து
சூரணத்தின் இடையில் வைத்து உட்கொள்ள
எவ்வகைப்பட்ட பிணியும் தீரும்.

181. இரசம், கெந்தி இவற்றை வகைக்கு 4 கி.யும்
மனோசிலை 8 கி.யும் எடுத்து கற்றாழைச்சாறு
விட்டு அரைத்து குப்பிக்குள் வைத்துக் கொள்க.

182. குப்பியின் வாய் மூடி சீலைமண் செய்து கொள்க,
வாலுகா எந்திரத்தில் வைத்து பன்னிரெண்டு மணி
நேரம் எரிக்க செந்தூரமாகும். பச்சைக்கற்பூரத்தை
8 கி எடுத்து அதனுடன் சேர்த்துக் கொள்க.

183. அரைத்த விழுதை 130 மி.கி அளவுள்ள மாத்திரை -களாக உருட்டிக் கொள்க. அதனைத் தக்க அனுபானங்களில் கூட்டிக் கொடுக்க பல வகைச் சுரங்கள் சன்னி தோடம், இவை சூரியனைக் கண்ட பனி போல நீங்கி விடும்.

184. இரசம் பத்து பங்கு, கெந்தி ஐந்து பங்கு, மனோசிலை ஒரு பங்கு எடுத்து சோற்றுக் கற்றாழைச் சாறு விட்டு நன்கரைத்து குப்பிக்குள் விட்டு மணைப் பரப்பி வைக்க. பின் வாலுகா இயந்திரத்தில் வைத்து ஒரு விறகால் எரிக்க.

185. இவ்வாறு ~~[illegible]~~ ஒன்பது மணி நேரம் ஒரு விறகால் எரித்துக் கொள்க. பின் மூன்று மணி நேரமும் அதன் பிறகு ஆறு மணி நேரமும் எரித்துக் கொள்க. வெள்ளாரி போன்ற வடிவாகும். தக்க அனுபானத்தில் கொள்ள நோய்கள் நீங்கும்.

186. சாதிக்காய், மிளகு, குங்குமப்பூ, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம் இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து பொடித்து அதனுடன் 488 மி.கி அளவெடுத்து உட்கொள்ள பல நோய்கள் தீரும்.

செந்தூரம்

187. இரசம், கெந்தகம், இலிங்கம், அரிதாரம், காந்தம், [illegible] கௌரி, வெள்ளைப்பாஷாணம் இவற்றை வகைக்கு 4கி எடுத்து பசரிச் சாற்றில் அரைத்து சட்டியில் வைத்து மூடி சீலை மண் செய்து கொள்க.

188. சட்டியை அடுப்பில் வைத்தெரித்து ________ மணி நேரம் சென்றவுடன் எடுத்திறக்கி வைத்துக் கொள்க. சூரியன் உதயத்தின் போது மருந்தினை 488மி.கி அளவெடுத்து குமட்டிச் சாற்றில் கலந்து கொடுக்க மகோதரம் தீரும்.

189. பீலிகை, எட்டு வகை [illegible], நீராமை, நீர்க்கோவை, [illegible]ப்புருதி, ஆகிய நோய்களை நீக்குவதுடன் இரத்தத்திலுள்ள ஒழியாத பல நோய்களையும் தீர்க்கும்.

190. அப்பிரகச் செந்தூரத்தையும் கெந்தகத்தையும் [illegible] சம அளவெடுத்து ஊமத்தஞ் சாற்றில் அரைத்து 65மி.கி அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க. தக்க அனுபானங்களில் கொடுக்க.

191. தீராத சிலேத்துமம், சுரம், சூலை, குன்மம், குட்டம், ஆகிய நோய்கள் இச்செந்தூரத்தால் தீரும். இம் மருந்தை உட்கொள்ள உடல் வலுக்கும்; பருக்கும், நோயும் தீரும்.

192. இரசம் 125கி, கெந்தகம் 40கி, அரிதாரம் 20கி, எடுத்துப் பொடித்துக் குப்பியில் போட்டு பிட்டு மண்ணை இடித்துக் குப்பியின் வாய்க்குச் சீலை மண் செய்து கொள்க.

193. சீலை மண் செய்த குப்பியை வட்ட வடிவமான பாத்திரத்தில் வைத்து வாலுகா எந்திரத்தில் வைத்து குப்பியின் மேல் மணலைப் போட்டு மேலே மூடி கொண்டு மூடி சீலை மண்ணும் செய்து கொள்க.

194. உலையெருவில் வாலுகா எந்திரத்தை வைத்து இரவு முழுவதும் எரித்து விடியும் போது முருகனைப் பூசை செய்து எடுத்து வைத்துக்கொள்க.

195. இச் செந்தூரத்துடன் 10கி நாபியைச் சேர்த்து நன்று கலந்து இஞ்சிச்சாற்றில் கலந்து குடிக்க நோய்கள் தீரும். முந்நூற்று அறுபதுக்கும் மேற்பட்ட நோய்களுக்கேற்ற அனுபானங்களில் இம்மருந்தைக் கொடுக்கவும்.

196. இரசம், கெந்தகம் இவற்றை வகைக்கு 35கி எடுத்து ஊமத்தை இலை, செங்கழுநீர் இலை இவற்றின் சாறு ஊற்றி நன்கு அரைத்துப் பொடியாக்கி நீருள்ள குப்பியில் போட்டுக் கொள்க.

197. உமிக்கரியையும் பூவிதை நத்தையின் மையையும் கரையான் மண்ணையும் எடுத்து கோழிமுட்டைச் சாறு விட்டு அரைத்துக் கொள்க. கருப்பட்டி,

198. அண்ணரம்பு, கடுக்காய், மூன்றும் கட்டி வெல்லம் இவற்றைச் சேர்த்து குப்பியின் வாய்க்குச் சீலை மண் செய்து கொள்க. அதனை வாலுகத்திற்குள் வைக்க. மணல் கொட்டி அதன் மீது வாலுகா இயந்திரத்தை வைத்து மேலும் மணல் கொட்டி மூடி பூசையுடன் அடுப்பேற்றுக.

199. ~~[illegible]~~ முப்பத்தாறு மணிநேரம் தீயிட்டு எரித்த பிறகு வன்னியின் நிறம் போன்று செந்தூரமாயிருக்கும். தக்க அனுபானத்துடன் கொடுக்க முந்நூற்றுப் பத்துக்கும் மேற்பட்ட வியாதிகள் தீரும்.

இரசபூபதி

200. எட்டு முறை சுத்தி செய்த இரசம், அரப்பொடி நாபி, கெந்தி, மிளகு, இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து புள்ளடிச் சாறு விட்டரைத்து உலர வைத்து குப்பியில் போட்டு உருக்கிக் கொள்க.

201. ஏழுமுறை சீலை மண் செய்து கொள்க. வாலுகா இயந்திரத்தினுள் வைத்து வாயினை மூடி முப்பத்தாறு மணிநேரம் இருவிறகால் எரிக்க செந்தூரமாகும்.

202. ஆறிய பிறகு குப்பியைத் திறந்து, செந்தூரத்தை எடுத்தரைத்துப் பொடித்து இஞ்சிச் சாற்றில் கலந்து கொடுக்க வாதசுரம், பித்தசுரம், சன்னி இவை தீரும்.

நவலோக அக்கினிக்குமாரன்

203. சுத்தி செய்யப்பட்ட இரசம், பொன், வெள்ளி இரும்பு, வெண்கலம், வங்கம், நாகம், அப்பிரகம், காந்தபற்பம் இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து அரைத்துக் கொள்க.

204. அரைத்த மருந்தைக் குப்பிக்குள் வைத்து வாயினை மூடி சீலை மண் செய்து கொள்க. வாலுகா இயந்திரத்தினுள் குப்பியை வைத்துக் கொள்க. ஆறு மணிநேரம் இரு விறகினால் எரிக்க.

205. தக்க நேரத்திற்குப்பிறகு ஆறிய செந்தூரத்தை எடுத்து குறிப்பிட்ட அளவு இம்மருந்தைக் கொடுக்க பிணிகள் பல தீரும்.

206. தக்க அனுபானங்களில், 130மி.கி அளவு கொடுக்க அதிகசுரம், ஆமசுரம், சன்னிபாத சுரம், மாறல்சுரம், (வெப்பு) தாந்திரிக சுரம், தொந்த சுரம் ஆகியவைதீரும்.

207. சுத்தி செய்த இரசம், நவரத்தினம் இவற்றை வகைக்கு ஒரு பங்கெடுத்து மாவிலிங்கச் சாற்றால் அரைத்துக் குழப்பிக் கொள்க.

208. அரைத்த விழுதைக் குப்பிக்குள்ளிட்டு அதனை வாலுகா இயந்திரத்தினுள் வைத்து மேல்மூடி விடாமல் குறித்த நேரம் எரித்து ஆறிய பின் எடுத்துக் கொள்க.

209. எடுத்த மருந்தினை 130 மி.கி அளவு தக்க அனுபானத்
-துடன் உட்கொண்டால் சன்னி வாத சுரம்,
அனைத்தும் தீரும். இம் மருந்திற்குப் பத்தியம்
ஏதும் இல்லை.

210. சுத்தி செய்யப்பட்ட இரசம், கெந்தகம், காரம்,
நாபி, எடுத்து எருக்கிலைச் சாற்றை விட்டு
அரைத்து உருண்டை செய்து காய வைத்துக்
கொள்க. கனமான சீசையில் அவற்றை யிட்டு
சீலை மண் செய்து கொள்க.

211. இச்சீசையை மணல் பரப்பி அதில் புதைத்து மறுபடி
சீலை மண் செய்து கொள்க. ஆயிரம் வறட்டியை
அடுக்கிப் புடம் போடுக. தக்க நேரம் எரித்து
ஆறிய பின் எடுத்துப் பார்க்க அக்கினி
குமாரன் தயாராய் இருக்கும்.

212. அம் மருந்தில் 130 மி.கி அளவு எடுத்துத் தக்க
அனுபானத்தில் உட்கொண்டால் சுரம்,
வாத சன்னி, பித்த சன்னி, திரிதோட சன்னி,
சீத சன்னி ஆகிய நோய்கள் தீரும்.

வடவக்கினிக்குமாரன்

213. இரசம், மனோசிலை, தாளகம்,
கெந்தகம் இவற்றை வகைக்குச் சமஅளவு
எடுக்க. செருப்படிச்சாறு சேர்த்து அரைத்துக் குப்பிக்
-குள் வைத்து மணல் பரப்பி அதனுள் வைக்க.

214. பதினெட்டு மணிநேரம் இருவிறகு கொண்டும்
மே[illegible] விறகு கொண்டும் எரித்து உரியநேரத்
-திற்குப் பிறகு எடுத்துப் பார்க்க செந்தூரம்
ஆகும். 130 மி.கி அளவெடுத்து தக்க அநுபானங்களிற்
கொடுக்க சன்னிசுரம் தீரும்.

மகாவன்னிக்குமாரன்

215. அரிதாரம், தாமிரம், அப்பிரகம், துத்தநாகம், இரசம்,
எலிப்பாடாணம், கெந்தகம் இவற்றை வகைக்குச்
சமஅளவெடுத்து ஒரு நாள் முழுவதும் அரைத்துக்
கொள்க. நிழலில் உலர்த்தி குப்பிக்குள் வைக்க.

216. மணல் பரப்பி அதனுள் குப்பியை வைத்து
ஒரு நாள் எரித்து பின் ஆறவைத்தெடுத்து அகலில்
வைத்துப் பொடித்து தக்க அளவு, அநுபானத்தில்
கொடுக்க மாந்தகணம், பிளவு, சன்னி நீங்கும்.

பிரதாபவக்கினி.

217. எவட்சாரம், நாபி, இரசம், சுக்கு, படிகாரம், சத்திச்சாரம், உப்பு, குறுமிளகு, இவற்றை வகைக்குச் சமமாய் எடுத்துக் கொள்க. இஞ்சிச்சாற்றை எடுக்க.

218. மேற்சொன்ன சரக்குகளை இஞ்சிச்சாற்றினால் ஒரு நாள் அரைத்து நிழலில் காய வைத்துக்கொள்க. அதனைக் குப்பிக்குள் வைத்து மணல் பரப்பி அதன் மேல் குப்பியை வைத்து மூன்று விறகால் ஒரு நாள் முழுதும் எரித்து ஆறிய பின் எடுத்துக் கொள்க.

219. எடுத்ததனை நன்கு பொடித்துக் கொள்க. அதில் 130 மி.கி அளவு எடுத்து இஞ்சிச் சாற்றில் கலந்து கொடுக்க சன்னி சுரம் போகும். பிரதாப அக்கினி என்று இம் மருந்துக்குப் பெயர்

220. அப்பிரகம், நாபி, கெந்தகம், இரசம் இவற்றைச் சம அளவு எடுத்து பற்படகச் சாறு வார்த்து பகல் முழுதும் அரைத்துச் செப்பின் வைத்து சில்லினால் மூடி சீலை மண் செய்து கொள்க. குழி ஒன்று வெட்டி மணலிட்டு அதனிடையிற் செப்புவினை வைக்க.

221. புடம் வைத்து உரிய காலம் வரை வைத்திருந்து எடுத்துப் பார்க்க செந்தூரமாகும். பிரணாக்கினிக் குமாரனாகிய இம்மருந்தினை உட்கொள்பவர்க்குச் சன்னி தீரும்.

திவ்வியாக்கினிக் குமாரன்

222. சுத்தி செய்யப்பட்ட இரசம், நாபி இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து கொடிவேலிச் சாறு விட்டரைத்து குகையில் வைத்துக் கொள்க. வாலுகையில் வைத்து அதனுள்ளே மணல் போடுக. இரு தோண்டி அதில் வாலுகா இயந்திரத்தை வைத்துப் புடம் போடுக.

223. நாபி ஒரு பாகம் எடுக்க. திரிகடுகையும் (சுக்கு, மிளகு, திப்பிலி) சேர்த்து சின்னி, மின்னை இவற்றின் சாற்றையும் உடன் சேர்த்து ~~உருண்~~ 130 மி.கி அளவுள்ள உருண்டைகளாக உருட்டிக் கொள்க.

224. திவ்வியாக்கினி போன்ற மருந்து மக்களுக்கு வேறேதும் இல்லை. தக்க அநுபானங்களில் கலந்து கொடுக்க சன்னி தீரும். வெப்பும் நீங்கும்.

உத்தமாக்கினிக்குமாரன்

225. அப்பிரகத்துடன் காந்த பற்பத்தைச் சேர்த்து செருப்படையின் சாறு சேர்த்து ஒரு நாள் முழுதும் அரைத்து குப்பிக்குள் வைத்து சீலைமண் செய்து கொள்க.

226. மணலுள் குழிதோண்டி குப்பியை அதற்குள் வைத்து இருபத்து நான்கு மணிநேரம் எரித்து இறப்பிட்ட காலத்திற்குப் பிறகு எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அதனை 65மி. கி அளவு உட்கொள்ள அனைத்துப் பிணிகளும் நீங்கும்.

227. வகையாக இம்மருந்தைக் கொள்ள வாதபித்தம், சன்னி சுரம் இவை தீரும். இச்சாபத்தியத்தைக் கைக்கொள்ள வேண்டும். தாகமெடுத்தால் கரும்புச் சாற்றைக் குடிக்க.

பூவனேசுர ரசம்

228. நேர்வாளம், சாதிலிங்கம், நாபி, கெந்தகம் இவற்றைக் குறிப்பிட்ட அளவு எடுத்து வன்னியின் சாற்றை ஊற்றி அரைத்து துணியில் முடிந்து கொள்க. அதனைக் கொடிவேலிச் சாற்றில் மூழ்க விட்டு தொங்க விடுக.

229. ஒரு நாள் முழுதும் அவ்வாறே வைத்திருக்க. ஆறிய பிறகு எடுத்து கெண்டை மீனின் பித்து, கள்ளிப்பால் இவற்றைச் சேர்த்து மூன்று மணி நேரம் அரைத்துக் கொள்க. ~~உருண்டைகளாக~~ மாத்திரைகளாக உருட்டிக் கொள்க. 65மி.கி

230. இஞ்சிச்சாற்றில் கொள்ள வைப்பும் எருக்கம் வேர்க் குடிநீரில் உட்கொள்ள சன்னியும் நீங்கும். இச்சாபத்தியம் மேற்கொள்க. தாகமெடுத்தால் தயிரைக் குடிக்க.

திரிபுராந்தரசம்

231. இரசம், கெந்தகம், அப்பிரகம், இவற்றைச் சமமாக எடுத்து கையாந்தகரையினைச் சாறுவிட்டு நன்கு அரைத்து இலைகளில் வைக்க. மணலில் குழி தோண்டி இலையை வைத்து பத்து வறட்டியில் புடம் போடுக.

232. மருந்தினை ஆறிய பிறகு எடுத்து கெண்டை மீன், காட்டுப் பன்றியின் பித்து, சேர்த்து அரைத்து 130 மி.கி அளவுள்ள உருண்டைகளாகச் செய்து கொள்க. இதற்குத் திரிபுராந்தம் எனும் பெயர்.

233. மாத்திரையை இஞ்சிச்சாற்றில் வாத, பித்த, சிலேத்துமம், போகும். நீரா சுரம், தோடங்கள் சன்னி முதலான நோய்கள் தீரும். பத்தியம் காக்க. மோர் சாதத்தை உட்கொள்ளல் நன்று.

காளகண்ட ரசம்

234. ஊமத்தை விதை, நாபி, மனோசிலை, வெண்காரம் இரசம், கெந்தகம் இவற்றைச் ~~சம~~ சம அளவெடுத்து விட்டரைத்து நன்கு அரைத்துக் கொள்க.

235. அரைத்த விழுதினை அகலில் போட்டு சீலை தணைச்சுட்டு சீலை மண் செய்து கொள்க. பத்து வரட்டியில் புடம் போடவும். ஆறிய பின் எடுத்து வச்சிரபாண மீனின் பித்து சேர்த்து மூன்று மணிநேரம் அரைக்க.

236. அரைத்து 130மி.கி அளவுள்ள குளிகைகளாய் உருட்டி தக்க அனுபானங்களில் கொடுக்க கண்டமாலை சுரம், சன்னி சுரம், நீங்கும். இச்சா பத்தியம் காக்க. பருப்புச் சோறு சாப்பிடலாம்.

தாம்பவீரசம் ~~காசகண்ட ரசம்~~

237. கெந்தகம், நேர்வாளம், கௌரி, கடுகு, சுக்கு, இவற்றின் விதைகள், ஆமணக்கு, வெண்காரம், இரசம் இவற்றை எடுத்து செம்பீரச் சாறு சேர்த்து மூன்று நாள் அரைத்து அகல் மேல் வைத்து மூடி வைக்க.

238. சீலை மண் செய்து பத்து வரட்டியில் புடம் வைத்து எடுக்க. பத்திலொரு பாகம் தூய்மை செய்த நாபியைச் சேர்த்து ஆமணக் கெண்ணெய் விட்டு நன்கு அரைத்து உருண்டை செய்து 130 மி.கி அளவுள்ள உருண்டை செய்து கொள்க.

239. அதனை இஞ்சிச் சாற்றில் கொடுக்க சுரம், வெப்பம், சிலேத்துமம் தீரும். மோர்ச்சோறு பத்திய —மாய்க் கொள்க.

240. சுக்கு, மிளகு, திப்பிலி, நாபி, கெந்தகம், இரசம் வெண்காரம், அப்பிரகம், ஊமத்தை விதை இவற்றைச் சம அளவெடுத்து பொடித்து குகையில் வைத்து சீலை மண் செய்து கொள்க. மண் இயந்திரத்தில் வைக்க.

241. ஆறுமணி நேரம் எரித்து தக்க நேரங்கழித்து எடுத்துப் பார்க்கவும். பின் பித்தினைச் சேர்த்தரைத்து 65 மி.கி அளவுள்ள உருண்டை செய்து தக்க அனுபானங்களில் கொடுக்க ஊன் வெப்பு, சன்னி தீரும்.

242 பச்சை நாபி, கௌரி, பாதரசம், நேர்வாளம் அப்பிரகம் மனோசிலை இவற்றைச் சமனெடுத்து சிறு பாகல் இலை சாற்றில் அரைத்துக் கொள்க. இவ்வாறு மூன்று நாளரைத்து அகலிலிட்டு மூடிக் கொள்க.

243. பத்து வரட்டியில் புடம் வைத்து ஆறு மணி நேரம் எரித்து பொடியான பிறகு எடுத்து 130 மி.கி அளவு மாத்திரைகளாய் உருட்டி திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) குடிநீரில் உரைத்துக் கொடுக்க எவ்வகைப்பட்ட சுரங்களும் தீரும்.

சுரமார்த்தின் குமாரம்

244. நவச்சாரம், ஐந்துப்பு, நாபி, அரிதாரம், வெடியுப்பு (வெட்சாரம்), அப்பிரகம், இரசம், இலவங்கம், சாதிக்காய், நெல்லி விதை, நவலோக பற்பம் எடுத்துக் கொள்க.

245. நேர்வாளம், கெந்தகம், ஒட்டறை இவற்றை வகைக்குச் சம அளவு எடுத்துக் கொள்க.

246. உள்ளி, ஆடாதோடையிலை முருங்கைவேர், எருக்கு இவற்றை வகைக்குச் சம அளவெடுக்க. கொடிவேலியின் சாற்றால் ~~அரைத்து~~ மூன்று மணிநேரம் அரைத்துக் கொள்க.

247. அரைத்த விழுதினைக் குப்பியில் போட்டு சீலை மண் செய்து கொள்க. வாயினை மூடிக் கொள்க. வாலுகா இயந்திரத்தில் ~~வைத்து~~ குப்பியைத் தலைகீழாய் வைத்து அதன்மேல் சட்டியைக் கவிழ்த்துக் கொள்க.

248. கவிழ்த்த சட்டி நகராமல் இருக்க சட்டியின் வாய்க்குச் சீலை மண் செய்து ஒரு விறகினால் ~~எரித்து~~ ஒரு நாள் முழுவதும் எரித்துக் கொள்க. மற்றொரு நாள் இரண்டு விறகாலும் அடுத்தநாள் மூன்று விறகாலும் எரித்துக் கொள்க.

249. தக்க காலம் ஆனபிறகு ஆறியவுடன் எடுத்துக்கொண்டு நான்காம் நாள் குழிக்கல்லில் வைத்தரைத்துக்கொள்க.

நாவினையும் மிளகையும் சேர்த்து ஒரு நாள் அரைத்துக் கொள்க.

250. அரைத்த பொடியின் 130மி.கி அளவை எடுத்துக் கொடுக்க சன்னி பதின்மூன்று வகைகள், ஐம்பது வகை மூலம், சுவாசகாசம் தீரும்.

251. பெரும்பூசணிச் சாற்றில் பொடியைக் கலந்து கொடுக்க சுரதாபம், மாந்தை, வாதகுன்மம் தீரும். வெற்றிலை இஞ்சிச் சாற்றில் கலந்து கொடுக்க ஜன்னி முதலிய பிணிகள் தீரும்.

252. அப்பிரகம், இரதம் இவற்றைச் சமனாய் எடுத்து ஒரு நாள் சங்கு நீரினால் அரைத்துக் கொள்க. குப்பியில் வைத்து ஆறு மணிநேரம் வைத்து எரிக்க வேண்டும்.

253. ஆறிய பிறகு எடுத்து மயில், கோழி இவற்றின் பித்தினைச் சேர்த்து மூன்று மணி நேரம் அரைத்துக் கொள்க. இச்சி நீரில் அதனைக் கலந்து கொடுக்க சுரம் தீரும்.

254. கெந்தகம், இரசம், நாபி, நேர்வாளம், இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து ஒரு நாளரைத்து உருட்டிக் கொள்க. அதனுடன் எருக்குக்குடி நீரினைச் சேர்த்து மூன்று மணி நேரம் அரைத்து 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய்ச் செய்து கொள்க.

255. நாரத்தைக் குடிநீரில் மாத்திரையை இழைத்துக் கொடுக்க கொடுஞ்சுரம் தீரும்.

256. அப்பிரகம், இரசம், அரிதாரம், சாதிலிங்கம், நாபி இவற்றைச் சம அளவெடுத்து செருப்படிச் சாறு சேர்த்து அரைத்து மாத்திரையாக உருட்டி அகலில் போட்டுக் கொள்க. எட்டு சீலை மண் செய்து பத்து வறட்டியில் புடம் போட்டெடுக்க.

257. எடுத்து செருப்படை, ஆவாரைச் சாறு சேர்த்து அரைத்து பத்து வறட்டியில் புடமிட்டெடுக்க.
பன்றி மீன், இவற்றின் பித்தினைச் சேர்த்து ஒரு நாள் அரைத்து 65 மி.கி அளவு உருண்டையாய் உருட்டிக் கொள்க.

258. தக்க அனுபானங்களில் கொடுக்க சுரம் தீரும். இச்சா பத்தியத்தை மேற்கொள்க. பால், இளநீர் தேன் இவற்றைப் பத்தியமாய்க் கொள்க.

259. சாதிலிங்கம், நாபி, இரசம், காரம், கெந்தகம், இந்துப்பு, அப்பிரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இவற்றைச் சம அளவெடுத்து ஒரு நாள் அரைத்துக் கொள்க.

260. அரைத்த விழுதினை அகலிலிட்டு சீலைமண் செய்து கொள்க. பத்து வரட்டி அடுக்கி புடம் வைக்க. அதனை எடுத்து அரைத்து

நாராயணரசம்

261. கெந்தகம், நேர்வாளம், இரசம் இவற்றைச் சம அளவு எடுத்து அரசன் தோல் சாற்றைச் சேர்த்து நன்கு அரைத்துக் கொள்க. உலர்த்தி ஒரு சட்டியில் தொங்க விட்டு மூன்று மணி நேரம் எரித்துக் கொள்க.

262. பின் அதை அரைத்து 130 மி.கி அளவு எடுத்து தக்க அனுபானங்களில் குழைத்துக் கொடுக்க சுரம் நீங்கும்.

263. கெந்தகம், அப்பிரகம், கடுகுரோகிணி, சுக்கு, மிளகு, திப்பிலி, தாளகம், இவற்றை வகைக்குச் சமஅளவு எடுத்து ______ 1.3லி விட்டு ஆறு மணிநேரம் அரைத்து குகையில் வைக்க.

264. குகையின் மீது மண்ணினைப் பூசி மண் பரப்பி புடமிட்டு பின்பு எடுத்துக் கொள்க. நந்தி மீன் இவற்றின் பித்தினைச் சேர்த்து வெற்றிலைச் சாற்றில் இரண்டு நாள் ஊற வைத்து எடுக்க. அதனை அளவறிந்து கொடுக்க சன்னி நீங்கும்.

வயிரவிரசம்

265. சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகிணி, இரசம், வசம்பு, தூய்மை செய்த நாபி, இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து கொடிவேலிக் குடிநீரில் மூன்று மணிநேரம் வேகவைத்துக் கொள்க. பின் அதனை எடுத்தரைத்துக் கொள்க.

266. விழுதினை 65 மி.கி அளவுள்ள உருண்டை-களாய்ச் செய்து கொள்க. இஞ்சிச்சாற்றில் இழைத்துக் கொடுக்க சன்னி சுரம் தீரும். புராண சுரம், தொந்த சுரம் இவையும் இம் மருந்தால் தீரும்.

லட்சுமிநாராயணரசம்

267. துருசு, கெந்தகம், அரிதாரம், வெண்காரம் இவற்றை வகைக்குச் சமமாய் எடுத்துக் கொள்க. நாரணைச் சாறு சேர்த்து ஒன்பது மணிநேரம் அரைத்து ஆறவிட்டு 130 மி.கி அளவுள்ள மாத்திரை -களாய் உருட்டிக் கொள்க.

268. தக்க அநுபானங்களில் கலந்து கொடுக்க வாத பித்தம் சிலேத்துமம், சுரதோடம் ஆகியவை தீரும். எப்பிணி -யையும் நீக்கக் கூடியது லட்சுமிநாராயணரசம் என்னும் இம்மருந்து.

இரணிய கெர்ப ரசம்

269. அரிதாரம், பொன், செம்பரிதாரம், மனோசிலை, கெந்தகம், சூதம், பவளம், கடுகுரோகிணி, இவற்றை வகைக்குச் சம அளவெடுக்க. வெள்ளாட்டுப்பால் விட்டு ஒரு -நாள் அரைத்துக் கொள்க.

270. அரைத்த விழுதினைக் குகையில் வைத்து சீலை மண் செய்து கொள்க. புடம் அடுக்கி எரித்துக் கொள்க. ஆறிய பின் எடுத்து நன்கு பொடித்து தக்க அநுபானத்தில் கொடுக்க ஐயம், வாத பித்தம் தீரும்.

271. சன்னி வகைகள் அனைத்தும் நீங்கும். தெளிவும் ஞானமும் வந்தெய்தும். இம் மருந்திற்கு எவ்வித பத்தியமுமில்லை.

கமலஇரசம்

272. காந்தம், இரசம், அப்பிரகம், தாமிரம் இவற்றைச் சமமாக எடுத்து வேப்பிலைச் சாற்றினால் ஒரு நாள் அரைத்து மாத்திரைகளாக உருட்டி குப்பியில் வைத்துக் கொள்க.

273. குப்பியின் வாய்க்குச் சீலை மண் செய்து கொள்க. அதனை வாலுகா இயந்திரத்தில் வைத்து பதினெட்டு மணிநேரம் எரித்து ஆறிய பின் எடுத்துக் கொள்க. அதில் 65 மி.கி அளவு எடுத்து உட்கொள்ள சன்னி தீரும். கமல இரசம் என்று இதற்குப் பெயர்.

274. இங்கிலிகம், நாபி, இரசம், பழமையான இட்டம், கடுகுரோகிணி, தாமிரம், இரும்பு இவற்றை வகைக்குச் சமமாய் எடுத்துக் கொள்க. எருக்கின் வேர் நீரைச் சேர்த்து அரைத்துக் கொள்க.

275. அரைத்த விழுதினைக் குப்பிக்குள்ளிட்டுக் கொள்க. கொதிக்கும் தண்ணீருக்குள் ஊசலாகத் தொங்கவிட்டு ஒன்பது மணிநேரம் எடுத்து தக்க பக்குவத்தில் இறக்கிக் கொள்க.

276. வெந்த பிறகு வேரினை எடுத்து 130 மி.கி அளவுள்ள மாத்திரையைச் சேர்த்துக் கொடுக்க எவ்வகைச் சுரமும் தீரும்.

பார்வதிரசம்

277. நாவி, இரதம், கெந்தகம், அப்பிரகம், இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து கரந்தைச் சாறு விட்டு ஒரு நாள் அரைத்து உருட்டி வைத்துக் கொள்க. அதனைக் குகைக்குள் வைத்து பத்து வரட்டியில் புடம் போடுக.

278. அம்மருந்தினை உளர் குருவியின் பித்தினைச் சேர்த்து இரண்டு நாட்கள் அரைத்து 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொள்க. அதனை தக்க அனுபானத்துடன் கொடுக்க தோடசுரம் தீரும்.

கல்லியாணரசம்

279. தாளகம், கெந்தகம், சுங்கி சுட்ட நீர் இவற்றை எலுமிச்சம் பழச்சாறு சேர்த்தரைத்து குப்பியில் போட்டு ஊத்தாரக்கத்தொங்கவிட்டு மூன்று மணி நேரம் எரிக்க. வெந்த பிறகு எடுத்து 65 மி.கி அளவுள்ள உருண்டைகளாய் உருட்டிக் கொள்க.

280. கலியாணரதம் எனும் இம் மருந்தின் பெயரைக் கேட்டவுடன் சுரம், சன்னி, அனைத்தும் எங்கி ஒளிந்து கொள்வோம் என்று இனை தடுமாறி கடவுள் புகுந்து கொள்ளும்.

சர்வசுரரசம்

281. வெண்காரம், சாதிலிங்கம், இரசம், கெந்தகம் நாபி, இவற்றைச் சமமாய் நிறுத் தெடுத்து கொடிவேலிக் குடிநீர் ஊற்றி அரைத்து குப்பிக்குள் வைத்து சீலை மண் செய்து கொள்க.

282. சீலை மண் செய்து முடித்து குப்பியை ஆற்று மணலின் நடுவில் வைத்து ஆறு மணிநேரம் எரித்து பின்பு அதனை 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய்ச் செய்து கொள்க. அதனைத் தக்க அனுபானத்துடன் கொடுக்க கொடிய சுர தோடம் தீரும்.

283. எட்டி விதை, நாபி, இரசம், இந்துப்பு, பாதரசம், பெருங்காயக்கட்டி, வெண்காரம், இவற்றை வகைக்குச் சம அளவெடுத்துக் கொள்க. திப்பிலி மூலத்தையும் சேர்த்துப் பொடித்துக் கொள்க.

284. திப்பிலி மூலக் குடிநீரில் மேற்சொன்ன பொடியை ஊசல் போல் கட்டி தொங்கவிட்டு எரித்து ஆறவிட்டு எடுத்துக் கொள்க. ஆறிய பின் அதனுடன் பன்றியின் பித்தினைச் சேர்த்தரைத்து 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய்ச் செய்து தக்க அனுபானங்களில் கொடுக்க தோடம், சுரம் தீரும்.

285. <u>உன்மத்தகேசரி ரசம்</u>

முத்து, மரகதம் வயிரம், மாணிக்கம் ஆகியவற்றின் பற்பங்களை எடுத்துக் கொள்க. அப்பிரகச் செந்தூரம் பொன், வெள்ளி, வங்கம், வெங்கலம், காந்தம் ஆகிய
286. இவற்றின் பற்பங்களையும் எடுத்துக் கொள்க. நீனக்காரம், வெண்காரம், சத்திச்சாரம், வெட்சாரம் இவற்றை வகைக்குச் சம அளவு எடுத்துக் கொள்க. அதனைக் கல்வில் இட்டு அரைக்க.

287. வாகை, முசுமுசுக்கை, செங்கழுநீர், செப்புநெருஞ்சில் இவற்றின் சாற்றையும், புடலின் சாற்றையும் சேர்த்து மேற்கூறிய சரக்குகளை அரைத்துக் கொள்க. அரைத்த விழுதினைக் குப்பிக்குள் போடுக.

288. குப்பிக்குச் சீலை மண் செய்து வாலுகா இயந்திரத்திற்குள் வைத்து ஆறு மணி நேரம் எரித்துக் கொள்க. ஆறிய பின் ஆட்டுக்கால், மீனின் பித்து, வெற்றிலைச்சாறு சேர்த்து விழுதினை 130 மி.கி அளவாய் உருட்டிக் கொள்க.

289. அதிமதுரம், சதுர்மலி, முந்திரி, நெய், சர்க்கரை, பால் இவை ஏதேனுமொன்றை அனுபானமாய்க் கொண்டு கிடைத்த உட்கொள்ள பித்தம், தலையின் வரும் பித்தம் தீரும்.

290. இரத்த பித்தம், பலவகை பித்தம், உன்மத்தம் ஆகிய பலவகை பித்தங்களும் தக்க அனுபானத்துடன் கலந்து கொடுக்க தீரும்.

சர்வேசுரன் தாம்பிரபூபதி

291. அரிதாரம், மனோசிலை, இவற்றை நான்கு பங்கு எடுத்துக் கொள்க. வெண்காரம், இரசம் இவற்றை வகைக்கு ஒரு பங்கும் எடுத்து ஆடாதோடைச் சாறு விட்டு ஒரு நாள் அரைத்துக் கொள்க.

292. அரைத்த விழுதைக் குப்பியில் போட்டு சீலை மண் செய்து கொள்க. வாலுகா இயந்திரத்தில் வைத்து ஆறு மணி நேரம் எரித்து தக்க காலம் வந்த பிறகு எடுத்து 130 மி.கி அளவு தக்க அனுபானத்துடன் கலந்து கொடுக்கவும். இம் மருந்தின் பெயர் சர்வேசுரன் என்பதாகும்.

293. இம் மருந்தினைத் தனியே உட்கொள்ள நோய்கள் வராது. வாதகாசம், பித்தகாசம், சிலேட்டுமகாசம், இரத்த காசம், தொந்த காசம் ஆகிய காச வகைகள் ஐந்தும் சூரியனைக் கண்ட பனி போல நீங்கும். உடலிற்கு நல்ல ஒளியைத் தரும்.

294. வெண்காரம் ஏழு பங்கு, இரசம் எட்டு பங்கு, கெந்தகம் அரிதாரம் வகைக்கு ஆறு பங்கு, நான்கு பங்கு எடுத்துக் கொள்க.

295. நேர்வாளம் நாபி எட்டு பங்கு, நான்கு பங்கு பூர பற்பத்தைச் சேர்த்து துளசி மேனி தும்பை இவற்றின் சாறுகளைத் தனித்தனியே எடுத்துக் கொள்க.

296. சாறுகள் ஒவ்வொன்றிலும் தனித்தனியே சரக்குகளை அரைத்துக் குப்பியில் வைத்து வாலுகா இயந்திரத்தில் வைத்து மூன்று மணிநேரம் எரித்து இறக்கிக் கொள்க. இஞ்சிச்சாறு, தேன், பனை வெல்லம் இவற்றை அநுபானமாகக் கொள்க.

297. அஸ்திசுரம், தாபசுரம், விடசுரம், சயம், காசம், உளமாந்தை, வாதம், சன்னிசுரம் ஆகிய பிணிகள் தாம்பூர பூபதியை உட்கொண்டால் தீரும்.

பூபதி

298. இரசம், கெந்தகம், நாபி, தாமிர பற்பம், தாளகம் இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து செருப்படையின் சாறு சேர்த்து இரண்டு நாட்கள் அரைத்துச் அண்டைக்காயளவு உருண்டை - களாய் உருட்டிக் கொள்க.

299. உருண்டைகளைக் காயவைத்து குப்பிக்குள் வைத்து மாக்கல்லால் குப்பியின் வாயினை அடைத்து சீலைமண் ஏழு முறை சுத்தி வெய்யிலில் உலர வைத்துக் கொள்க.

300. உலர்ந்ததும் வாலுகா இயந்திரத்தினுள் வைத்து வாயினைச் சீலை மண்ணினால் சுத்தி அடுப்பில் வைத்து பன்னிரெண்டு மணி நேரம் எரித்துக் கொள்க.

301. ஆறிய பின் குறிப்பிட்ட நேரங் கழித்து எடுத்து நாளில் ஒரு பங்கு நாபியைச் சேர்த்துக் கொள்க. மிளகினையும் அதே அளவு சேர்த்து செருப்படைச்சாறு ஊற்றிக் கொள்க.

302. சரக்குகளை மேற்படிச்சாறு சேர்த்தரைத்து 130 மி.கி. அளவுள்ள உருண்டைகளாய் உருட்டிக் கொள்க. இது 'பூபதி' என்றழைக்கப்படும். இதனைத் தக்க அநுபானங்களில் கலந்து கொடுக்க சன்னிபாதம், எழுவகை தோடம், சுவாசகாசம், சீதசயித்தியம் ஆகிய நோய்கள் தீரும்.

சிந்தாமணி

303. வெள்ளி, தங்கம், சங்கு, முத்து, செம்பு அரிதாரம், இரசம், செம்மையான பவளம், மனோசிலை, அப்பிரகம், இரும்பு, வைரம் கெந்தகம் இவற்றின் பற்பங்களாய்ச் சம அளவு எடுத்துக் கொள்க.

304. சித்திர மூலக்குடிநீர் எருக்கம்பால், கள்ளிப் பால், காட்டுக் கருணை வேர்ச் சாறு இவற்றில் சேர்த்து தனித்தனியே மேற்குறிப்பிட்ட பற்பங்களை ஏழு, மூன்று, ஒன்று நாட்களாக அரைத்துக் கொள்க.

305. அரைத்த விழுதினைப் பொன்னாலான ஒரு குக்க பாத்திரையிலே அடைத்துக் கொள்க. இந்த வெண்காரத்தை எருக்குடன் சேர்த்தரைத்த விழுதினை அதின் வாயில் பூசி அடைத்துக் கொள்க.

306. உலை மூடியினுள் நேர வைத்து வாய் மூடி ஏழு சீலை மண் செய்து கொள்க. வெயிலில் வைத்து காய வைத்து ஆயிரம் வறட்டியில் புடம் வைத்தெடுக்க. ஆறிய பின் எடுக்க

307. ஆறியதுடன் பலகறையையும் சேர்த்தரைத்துக்
கொள்க. அவ்வெடைக்குச் சமமாக இரச
பற்பத்தைச் சேர்த்துக் கொள்க. இப்பற்பத்திற்கு
நாலிலொரு பாகம் ? வைத்து முருங்கை
வேரையும் எடுத்துக் கொள்க.

308. முருங்கை வேர்க் குடிநீரில் ஏழுமுறை வேக
வைத்து பின் எடுத்துப் பொடித்துக் கொள்க.
வெண்காரம், நாபியைச் சமமாக எடுத்து சேர்த்துக்
கொள்க.

309. நாபிக்குச் சமமாக மிளகைச் சேர்த்துக் கொள்க.
சுக்கு, சாதிக்காய், வாய்விடங்கம், கட்டுக்
கடுக்காய் இவற்றை நாபியின் எடையில்
நாலிலொரு பாகம் எடுக்க.

310. அனைத்தையும் மாதுளங்காய்ச்சாறு, இஞ்சிச்சாறு
இவற்றில் வைத்தரைத்து நான்கு கிராம் அளவு
உருண்டையாய் உருட்டி தக்க அனுபானங்களில்

311. கொடுக்க சுவாசகாசம், சயம், தோடம், சன்னி
பாதசுரம், ஆகிய நோய்கள் நீங்கும். இம்மருந்திற்கு
'சிந்தாமணி' 'தெய்வீக சஞ்சீவி' என்றும் பெயர்.

312. தங்கம் ஒரு பங்கு, இரசம் எட்டு பங்கு, கெந்தகம் பதினெட்டு பங்கு, எடுத்துக்கொள்க. சங்குநீர் செம்பரத்தம்பூ, கற்றாழை இவற்றின் சாற்றால் ஒவ்வொரு நாள் அரைத்துக் கொள்க.

313. இதனை மணியாய் செய்து உலர்த்திக்கொள்க. காசிக்குப்பியில் போட்டு வாயினை மூடி சீலைமண் செய்து கொள்க. ஏழு முறை சுத்திக் கொள்க. வாலுகா இயந்திரத்தில் வைத்து மூன்று மணி நேரம் எரித்துக் கொள்க.

314. தக்க நேரம் கழித்துக் குப்பியைப் பார்க்கும் போது மாமரத்தின் துளிர் போன்ற வண்ணமாயிருக்கும். 'பூரண சந்திரோதயம்' எனும் பெயரையுடைய இம்மருந்தைச் சாப்பிட சயசுரம் போகும்.

315. அனல் வெட்டை, தாது விருத்தி, தேக வன்மை, பெண்களின் மேல் இச்சை, ஆகியவை உண்டாகும். தக்க அநுபானங்களில் கொடுக்க பல நோய்கள் தீரும்.

வசந்தகுசுமாகரம்

316. பொன், வெள்ளி, பற்பம் இவற்றை வகைக்கு இரண்டு பங்கு எடுத்துக் கொள்க. மின்காந்தம், வங்க பற்பம் இவற்றை வகைக்கு மூன்று பங்கு அப்பிரகம், முத்து இரசம் பவள பற்பம் இவற்றைச் சமமாக எடுத்துக் கொள்க.

317. கருவேம்பு, பூக்கள் நிறைந்துள்ள செண்பகப்பூ, செவ்வந்திப்பூ, மஞ்சள், வெட்டிவேர், தண்ணீர் விட்டான்

318. கிழங்கு, முத்தக்காசு, மரமஞ்சள் இவற்றைச் சம அளவெடுத்து சுத்தி செய்து மேற்சொன்ன சரக்குடன் சேர்த்தரைத்துக் கொள்க.

319. அரைத்து மாத்திரைகள் செய்து கொள்க. நன்னாரி நெருஞ்சி நரிப்பயறுகள், இலுப்பைப் பூதேன்,

320. பேரீஞ்சு, சிற்றீஞ்சு, நிலப்பனை, சர்க்கரை, வாழைக்கிழங்கு, கிலவம்பிசின், முந்திரிக்கனி கொடுக்காப்புளி ஆகியவற்றை எடுத்துக்கொள்க.

321. அச்சரக்குகளைத் தண்ணீரில் ஊற வைத்து பனியில் வைத்துக் கொள்க. அந்நீரை எடுத்து சரக்குகளை அரைத்து கல்தாமரி நீரையும் கலந்து கொள்க.

322. அரைத்த விழுதினை 4கி அளவு உருண்டைகளாய்ச்
செய்து கொள்க. இன்னிதோடம், சுரம், மேகம்
ஆகிய நோய்களை நீக்கும் 'வசந்தகுசுமாகரம்'
என்னும் பெயரையுடைய இம்மாத்திரை நலன்
பயக்கக் கூடியது.

இராசமிருகாங்கம்

323.
வைரம் ஒரு பங்கு, அரிதாரம் இரு பங்கு, இரசம்
மூன்று, கோமேதகம் நான்கு பங்கு, தாளகம் ஐந்து
324. பங்கு, இந்திர நீலம், காந்தம், லோகம் (இரும்பு)
அப்பிரகம், பவளம், மரகதம், கெருடப்பச்சி
ஆகிய சரக்குகளைப் பற்பமாகும் வரை
325. அரைத்து செம்பீரத்தின் சாற்றில் நன்கு அரைத்துக்
கொள்க. பின் அவ்விழுதினைத் உருண்டை
செய்து துணியில் முடிந்து அகலில் வைத்துக்
கொள்க.

326. பானையில் காடியை ஊற்றி அகலினைத்
தோலாயந்திரமாகக் கட்டி மூன்று மணிநேரம் எரித்து
ஆறிய பின் எடுத்து உலர வைத்துக் கொள்க.
வேறு ஒரு பானையில் இரு விரல் அளவு உப்பினைப்
போடுக.

327. மருந்தைப் பொட்டணமாய் கட்டி உப்பின் மேல் போட்டு மூடியினால் மூடி ஏழு சீலை மண் செய்து கொள்க. பின் ஒரு நாள் எரித்துக் கொள்ள வேண்டும்.

328. ஆறிய பின் மருந்தினை எடுத்து எலுமிச்சம் சாற்றால் அரைத்து 4கி அளவுள்ள உருண்டை செய்து நோய்களுக்கேற்ற வாறு அனுபானங்களை மாற்றி கொடுக்கவும்.

329. காசம், சுவாசம், க்ஷயம், சன்னிபாதம், தோடம், ஆகியவை தீரும்.

சொர்ணமாலை வசந்தன்

330. பொன் ஒரு பங்கு முத்து பற்பம் தாமரையின் நான்கு மடல், துத்தம், சாதிலிங்கம், இவற்றை எடுத்துக் கொள்க. இருபது மிளகுகளை எடுத்துக்கொள்க. எலுமிச்சம் சாற்றினைச் சேர்த்தரைத்துக் கொள்க.

331. அரைத்த விழுதுடன் வெண்ணெயைக் கழற்சிக் காய் அளவு சேர்த்து 4கி அளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து கொள்க.. அதில் 130 மி.கி அளவு எடுத்து உட்கொள்ள அத்தி சுரம், சன்னி தோடம் தீரும்.

332. எவ்வகைப்பட்ட காய்ச்சலும் குழந்தைகளுக்கு
வரும் வெப்பும் தீரும். சுவர்ணமாலை
வசந்தன் என்றும் பெயர் இதற்கு.
இம்மாத்திரையினுடையது.

<u>கஸ்தூரிமாத்திரை</u>

333. கஸ்தூரி ஒரு பங்கு,
கோரோசனை மூன்று பங்கு எடுத்து தாய்ப்பால்
விட்டரைத்து 130 மி.கி அளவு உருண்டை-
-களாகச் செய்து கொள்க.

334. உருண்டைகளைத் தக்க அநுபானங்களில்
கலந்து கொடுக்க சன்னிபாதம், பித்த சிலேத்தும
சுரம், வாயு, ஆகிய நோய்கள் தீரும்.

<u>மகாசன்னிபாதவயிரவன்</u>

335. அப்பிரகம், இரும்பு, தாமிரம், காந்தம், செம்பு,
கெந்தகம், வெண்காரம் நாபி, சாதிலிங்கம்
வெட்சாரம் இவற்றை வகைக்கு 4கி
எடுத்துக் கொள்க.

336. சூதம் பகி எடுத்து கொடிவேலி, எருக்கு இவற்றின் சாறுகளை விட்டு ஒவ்வொரு நாளும் அரைத்து 130 மி.கி அளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து கொள்க.

337. இவ்வுருண்டையைத் தக்க அனுபானங்களிற் கொடுக்க பதிமூன்று வகை சன்னி, எழுவகை தோடம் ஆகியவை தீரும். இதன் பெயர் 'மகாசன்னி பாத வயிரவன்' ஆகும்.

வாதராட்டம்

338. கெந்தகம் எட்டு பங்கு, இரசம், இரும்பு எட்டுபங்கு, நாபி ஐந்து பங்கு, சாதிலிங்கம், வெண்காரம் இவற்றை வகைக்கு இரண்டு பங்கு. மனோசிலை, காந்தம் இவற்றை வகைக்கு ஒரு பங்கு எடுக்க.

339. கொடிவேலிக்குடிநீர் விட்டு சரக்குகளை ஒரு நாள் அரைத்து 65 மி.கி அளவாக உருட்டி நிழலில் காய வைத்துக் கொள்க.

340. இம்மாத்திரையை இஞ்சிச்சாற்றில் இழைத்துக் கொடுக்க வாயுவும் தேனில் இழைத்துக் கொடுக்க சிலேத்துமமும் தீரும். தக்க அநுபானத்தில் கொடுக்க சுரம், தோடம் சன்னி ஆகியவை தீரும்.

341. இத்தகு சிறப்பான மருந்தை வானத்தின் அமுது எனலாம். 'வாதராட்சம்' என்று இவ்வுலகில் இதன் பெயரைக் கூறுவர்.

வாதராட்சம்

342. பாதரசம், வெண்காரம், கெந்தகம், மனோசிலை இவற்றைச் சம அளவெடுத்துக் (3½ கி) கொள்க. சாதிலிங்கம் 28 கிராம், குறிப்பிட்ட அளவு நாபி எடுத்து கொடிவேலிச்சாறு விட்டு அரைத்துக் கொள்க.

343. மறுநாள் இஞ்சிச்சாற்றிலும் எலுமிச்சஞ்சாற்றிலும் முத்துச் சுத்தியும் முறையே அடுத்தடுத்த நாட்களுமாய் முறையே அரைத்து 325 மி.கி அளவுள்ள உருண்டைகளாய் உருட்டிக் கொள்க. தக்க அநுபானத்தில் கொடுக்க வாய்வு, நச்சு சன்னி தோடம் தீரும்.

344. சுரம், தாகம், இவை தக்க அனுபானங்களில் தீரும். சுரங்களைப் போக்கும் இம்மருந்தின் பெயர் 'வாதராட்டம்' என்பதாகும்.

ஸ்ரீ ராமச்சந்திரபாணம்

345. கௌரி, வெள்ளைப்பாடாணம், கெந்தகம், வெண்காரம், அரிதாரம், மனோசிலை, நாபி, காந்தம், துத்தம், துருசு, அப்பிரகம், சுத்தி செய்யப்பட்ட நேர்
346. -வாளம் இவற்றை வகைக்கு 4 கி எடுத்துக் கொள்க. இரண்டுவகை ~~வங்கம், செம்பு~~ வங்கங்களான கருவங்கம், வெள்வங்கம், செம்பு இவற்றை வகைக்கு 4 கி எடுத்துக் கொள்க. அனைத்தையும் ஒன்று சேர்த்தரைத்து கிண்ணியாகச் செய்து கொள்க. ஒரு சட்டியை எடுத்து அதில் மணலைத் தூவிக் கொள்க.

347. சட்டியினுள் கிண்ணியை வைத்து 40 கி இரசத்தை வைத்து தீயெரித்துக் கொள்க. பின் கஞ்சாயிலைச் சாற்றை அதில் பிழிந்து விடுக. அப்போது இரசம் இறுகி விடும்.

348 திண்ணீயிலுள்ள சோம்பிய இரசத்துடன் கையாந்தகரைச் சாற்றை விட்டு அரைத்து உருட்டிக் கொள்க. கலசத்தினுள் உருட்டியதை வைத்து வாய் மூடியை சீலை மண் செய்து மூடுக.

349. உலர்ந்த பிறகு, மணலில் குழியை வெட்டி அதில் வைத்து மணலை மேல் போட்டு பத்து வரட்டியில் புடம் போடுக. ஆறிய பின் எடுக்க.

350. மேற் கூறப்பட்ட கலசத்தில் வைத்த மருந்தினைப் பாதரசத்தால் அரைத்து 130 மி.கி அளவு உருண்டையைச் செய்து கொள்க. ஸ்ரீராமச் சந்திர பாணம் என்ற பெயர் கொண்ட இம்மருந்தால் இரணம் தீரும்.

351. சன்னி பாத சுரம், சிலேத்தும சுரம், சீத சுரம், மலக்கட்டு, மந்தம், மாறல் சுரம், தொந்த சுரம், வாத சுரம், தோச சுரம் ஆகிய சுரங்கள் மேற்கூறிய இராமச்சந்திர பாணத்தால் தீரும்.

சாம்பவிரசம்

352. வெள்வங்கம், கருவங்கம் இவற்றைச் சுட்டியிட்டு உருக்கிக் கொள்ள வேண்டும். இரசத்தைப் போட்டு உருக்கிக் கொள்க. மடல் துத்தத்தையும் சேர்த்து எலுமிச்சஞ் சாற்றை ஊற்றி அரைத்துக் கொள்க.

353. அரைத்த விழுதினை 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொள்க. இவற்றினைத் தக்க அனுபானங்களில் கொடுக்க பொங்குசுரம், காந்தும் சன்னி, பொருமல், வெப்புமாந்தம் ஆகிய நோய்கள் நீங்கும்.

ஆனந்தவயிரவன்

354. சாதிலிங்கம், வெண்காரம், நாபி, நாகம் இவற்றை வகைக்கு 35 கி, மிளகு 105 கி எடுத்து எலுமிச்சம் பழச் சாற்றை விட்டரைத்துக் கொள்க.

355. மை போன்ற அவ்விழுதினை 130 மி.கி அளவு உருண்டைகளாய்ச் செய்து தக்க அனுபானத்தில் கொடுக்க தோடசுரம், சீதசுரம், தோடசன்னி, பாதசுரம், வெப்பு ஆகியவை தீரும்.

356. சிறு குழந்தைகளுக்கும் இம்மாத்திரையை அளவறிந்து கொடுக்கலாம். இதன் பெயர் ஆனந்த பைரவன் என்பதாகும்.

அமுர்தரசம்

357. கெந்தகம், சூதம் இவற்றை வகைக்கு ஒருபங்கு எடுத்து சாற்றில் அரைத்து அட்டில் வைத்துக் கொள்க. அனல் மூட்டி வறுத்து பதத்தில் எடுத்துக் கொள்க சாறு விட்டரைத்துக் கொள்க.

358. அரைத்த விழுதினை 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொள்க. ஒரு உருண்டையை எடுத்துத் தக்க அனுபானத்துடன் கலந்து கொடுக்க தொட்ட சுரம், சன்னி, எழுவகை தோடம்,

சீதபஞ்சரி.

359. துருசு, படிகாரம், கெளரி, இவற்றைச் சமனாக எடுத்துக் கொள்க. உத்தாமணி, முசுமுசுக்கை இவற்றின் சாற்றில் முறையே தனித்தனியே ஒவ்வொரு நாளும் அரைத்துக் கொள்க. விழுதினை மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொள்க.

360. மேற்குறிப்பிட்ட உருண்டையில் ஒரு உருண்டை எடுத்து வெற்றிலையிலுள் வைத்து கொடுக்க குளிர் சுரம், முதலான பல வகை சுரங்களும் தீரும்.

சீதஜ்சுர சஞ்சீவி

361. மேற்குறிப்பிட்ட மாத்திரைக்கான பத்தியங்கள் இங்குக் கூறப்பட்டுள்ளன. உப்பு போட்ட முருங்கைச் சாற்றில் அன்னத்தை உண்டு வர வேண்டும். இச்சாபத்தியம் காக்க வேண்டும்.

பூதேசுரசம்

362. இரசம், கெந்தகம், நாபி, சாதிலிங்கம், நேர்வாளம், இவற்றைச் சம அளவாய் எடுத்துக் கொள்க. கொடிவேலிக் குடிநீரை ஊற்றி மேற்கூறிய சரக்கினை மை போல் அரைத்துக் கொள்க. 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டி வெய்யிலில் வைக்க.

363. உலர்ந்ததை எடுத்து பத்திரப்படுத்திக் கொள்க. அதில் ஒரு மாத்திரையை எடுத்துத் தக்க அனுபானங்களில் கொடுக்க சீதசுரம், வாதசுரம், பித்த சுரம், ஆகியவை தீரும்.

சுயமக்கினி

364. . . . . அரப்பொடியையும் சேர்த்து சோற்றுக்கற்றாழைச் சாற்றில் அரைத்துக் கொள்க.

365. ஒரு நாள் அரைத்துப் பின்பு பொன்னாலான கலசத்திற்குள் வைத்து வேறு கலத்தினை மேல் மூடிக் கொள்க. வெயிலில் வைத்து புகை எழும் வரை வைக்க. பக்குவமாகும் வரை வைத்துப்பின் எடுத்துப் பத்திரப் படுத்திக் கொள்க.

366. 488மி.கி பற்பத்தைத் தேனில் கலந்து கொடுக்க குன்மம் தீரும். தக்க அனுபானத்தில் கலந்து கொடுக்க குட்டம், கிராணி, காமாலை, மகோதரங்கள் அனைத்து வாயு, கட்டி, ஆகியவை
367. போகும். சுயமக்கினி எனும் பெயருடைய இம்மாத்திரையை உலகில் உள்ள வைகும் அறிந்து புகழ்ந்துரைப்பார்கள்.

பிரதாபமார்த்தாண்டம்

368. சாதிலிங்கம் அப்பிரகம் இவை இரண்டையும் சமனாய் எடுத்துச் சூரணமாய்ச் செய்து கொள்க.

நாவல் பட்டைக் குடிநீரில் மேற்குறிப்பிட்ட சூரணத்தை மூன்றுமணி நேரம் ~~[illegible]~~ அரைத்துக் கொள்க. அரைத்த விழுதினை 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொள்க. அவ்வாறு பன்னிரெண்டு மாத்திரையை உருட்டிக் கொள்க.

369. அம்மாத்திரையைச் சர்க்கரையிற் கரைத்துக் கொடுக்க தாபசுரம், தீரும். பால், தயிர் இவை பத்தியமாய்க் கொள்ளலாம்.

மகாபிரதாப மார்த்தாண்டம்

370. வெண்காரம், நேர்வாளம், நாபி, ~~[illegible]~~, இவற்றை வகைக்குச் சம அளவெடுத்துக் கொள்க. அதற்கு இரட்டிப்பாக சாதிலிங்கத்தை எடுத்துக் கொள்க. கருவேப்பிலை, கையாந்தகரை இவற்றின் சாறுகளைச் சேர்த்து அரைத்துக் கொள்க.

371. அரைத்த விழுதினை 32 மி.கி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொள்க. வெல்லச்சாற்றில் ஒரு உருண்டையை உரைத்துக் கொடுக்க தாபசுரம், நீங்கும்.

372. இந்த மாத்திரையை இஞ்சிச்சாற்றில் இழைத்துக் கொடுக்க சீதசுரம் தீரும். விடம், சுரம் இவற்றிற்கு நொச்சிச்சாற்றில் கொடுக்க இணை -மாகும்.

373. பித்தத்திற்குச் சீரகத்திலும், சர்க்கரையிலும் கொடுக்க தீரும். பாண்டு, சயத்திற்கு நெய்யிலும் கொடுக்கவும்.

374. சுவாசகாசத்திற்குத்திப்பிலி சூரணம் கலந்த தேனிலும் தூசிகள வாய்விற்கு மிளகு. ஆமணக்குக் குடிநீரிலும் சயகாசத்திற்குத் திப்பிலி நெய்யிலும் கொடுக்க இணைமாகும்.

கிராணி கபாடம்

375. சாதிக்காய், அப்பிரகம் சாதிலிங்கம், வெண்காரம் நாபி, சுக்கு, மிளகு, திப்பிலி மிள்ளிலவின் பிசின், உளமத்த விதை இவற்றைச் சம அளவாக எடுத்துக் கொள்க. எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு அரைத்துக் கொள்க.

376. கஞ்சா இலைச்சாறு, சடைச்சி இலைச்சாறு உளமத்தஞ் -சாறு இவற்றில் ஒன்றைத் தனித்தனியே ஒவ்வொரு நாளும் விட்டரைத்துக் கொள்க.

அரைத்த விழுதைக் குன்றிமணியளவாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்க.

377. மாத்திரையைத் தக்க அநுபானங்களில் கொடுக்க கிராணி, இரத்தக் கழிச்சல், வெப்பு சேர்ந்த கிராணி, மூலகைத்தோடம், ஆகிய நோய்களை நீக்கும். இதன் பெயர் 'கிராணி கபாடம்' ஆகும்.

378. சீரகம், வேர்க்கொம்பு, அதிக்காய், கிராம்பு, ஏலம் இந்துப்பு, சாதிலிங்கம், கழற்சி, உமத்தை விதை ஆகிய அனைத்துச் சரக்குகளையும் வறுத்துக் கொள்க. எலுமிச்சம் பழச்சாறு, வெந்நீர் ஆகிய இரண்டிலொன்றினால் அரைத்துக் கொள்க.

379. அரைத்த விழுதினை மாதுளம்பழத்துள் வைத்து சீலைமண் செய்து கொள்க. தக்க எருவில் புடம் வைத்தெடுத்து அந்த மாதுளையை தயிருடனே சேர்த்தரைத்து 65 மி.கி அளவுள்ள மாத்திரையாய் உருட்டிக் கொள்க.

380. மாத்திரையைத் தக்க அநுபானங்களில் கொடுக்க பொங்கு சுரம், அதிசாரம், கிராணி, கழிச்சல், ஆகிய நோய்களைத் தீர்க்கும் இம்மாத்திரையின் பெயர் 'கிராணி கபாடம்' என்பதாகும்.

கோடாசூரிக்குளிகை.

381. பொன்னரிதாரம், கௌரி, கெந்தகம், சூதம் சாதிலிங்கம், நாபி, வெங்காரம், கந்தம் அதிவிடையம், நிர்விடங்கள், சாத்திரபேதி, தான்றி.

382. கொத்துமல்லி, சாதிக்காய், நெல்லிமுள்ளி, வங்கம், வாய்விளங்கம், கோட்டம், திரிமஞ்சள், மிளகு, ஏலம்,

383. கடுகுரோகணி, அதிமதுரம், கடுகு, ஓமம், காட்டுச் சீரகம், கருஞ்சீரகம், இவற்றை வகைக்குச் சமமாய் எடுத்துக் கொள்க. இவ் வெடைக்குச் சமமாய் நேர்வாளம் எடுத்துக் கொள்க. கையாந்தகரை சாறு விட்டரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாய் உருட்டிக் கொள்க. நிழலில் உலர்த்தி சுக்கு சாற்றில் இழைத்துக் கொடுக்க சீத சுரம் நீங்கும்.

384. தாய்ப்பாலில் இழைத்துக் கொடுக்க பித்த சுரம் நீங்கும். சுக்கு, கண்டங்காலி சாரணை வேர், ஆகியவற்றின் குடிநீரில் இழைத்துக் கொடுக்க சன்னி தீரும். துளசி, கண்டங்காலி சாரணை வேர் சேர்ந்த குடிநீரில் இழைத்துக் கொடுக்க நோய் தீரும்.

பிரதாபகேசரம்

385. இரதம், அப்பிரகம், கெந்தகம், இந்துப்பு இரும்பு, சங்கு பற்பம், கருநாபி இவற்றை இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பத்து, பன்னிரெண்டு, பதினான்கு, பதினாறு என்ற அளவாக எடுத்துக் கொள்க.

386. மேற்குறிப்பிட்ட சரக்குகளை நொச்சி, இஞ்சிச் சாறு இவற்றை உவற்றி ஒவ்வொருநாள் அரைத்து 130 மி.கி அளவாக உருட்டிக் கொள்க.

387. உருட்டிய மாத்திரையைத் தக்க அநுபானத்துடன் கொடுக்க சன்னி, பாதவெப்பு, தோடவெப்பு, அசீரணம், அரங்கன்,

கிருவையாதரசம்

388. கெந்தகம் 70கி, இரதம் 35கி, உலோக பற்பம் 50கி, தாமிர பற்பம் 50கி எடுக்க.

389. சித்திரமூலக் குழிநீரை மேற்குறிப்பிட்ட சரக்குகளில் விட்டு அரைத்துத் திரட்டிக் கொள்க. இரும்புக் கிண்ணத்தில் வைத்து கீழேயும் மேலேயும் மந்தியிலையை அடுக்கி வைத்து நடுவில் அரைத்துத் திரட்டிய

மருந்தினை வைத்துக் கொள்க.

390. மருந்தினை எடுத்து வெய்யிலில் வைத்து ஆறு மணிநேரம் கழிந்த பிறகு எடுத்துக் கொள்ள வேண்டும். 488. மி.கி இம் மருந்தினையும் 1கி இந்துப்பினையும் சேர்த்துக் குடிக்கக் கொடுக்க வேண்டும்.

391. மாமிசம், பணியாரம், போன்றவற்றை அதிகமாக சாப்பிட்டாலும் உணவுப் பொருட்கள் நன்கு செரித்து வரும். நல்ல பசி எடுக்கும்.

392. சீழ்க்கட்டு, கண்டத்தில் வரும் நோய், தலை நோய், கபாலச்சூலை, குன்மம் ஆகிய நோய்கள் மாறும்.

393. பீனிசம், கட்டி கிரந்தி, வாய்வு, ஆகிய நோய்கள் நீங்கும். உடலிலுள்ள குற்றங்கள் குறைந்து உடல் நலம் பெறும்.

394. இருவையாத ரசமாகிய இம் மருந்தினை, யோகி சொன்ன இம்மருந்தினை உடல்நலம் பெறக் கொள்வாய்.

சங்கத்திராவகம்

395. பொட்டிலுப்பு, சீனக்காரம் இவற்றைச் சம அளவு எடுத்துக் கொள்க. அன்னபேதியை, துத்தநாகத்தையும் சம அளவெடுக்க.

396. வளையலுப்பு, சவுந்தலவணம், கல்லுப்பு, கறியுப்பு இவற்றைச் சம அளவெடுத்து பொடிசெய்து நிழலில் உலர்த்தி குப்பியில் போட்டுக் கொள்க. அதன் வாயினை அடைத்துக் கொள்க.

397. குப்பியைச் சுற்றி சீலை மண் செய்து பக்குவமாக அதனை வாலுகா எந்திரத்தில் வைத்து மூன்று விறகினால் எரிக்கவும்.

398. எரித்ததின் பிறகு சொட்டும் நீரினைப் பீங்கானில் எடுத்து வைத்துக் கொள்க. அதனை அளவறிந்து கொடுக்க இன்பம் தீரும். சங்கத்திராவகம் என்பது இதன் பெயர்.

லோகத்திராவகம்

399. சங்கத்திராவகத்தை எடுத்து அதற்குள் பத்தில் ஒரு பாகம் பரங்கிப்பாடாணத்தைச் சேர்த்துக் கொள்க. பின் அதனை எந்திரத்திற்குள் வைக்க.

400. எந்திரத்திற் போட்டபின் அளவான தீயில் எரிக்கத் புகைந்து நீரானது விடும். அந்நீருடன் நவலோகத்தையும் பொடித்து சேர்த்துக் கொள்க. இம் மருந்தின் பெயர் லோகத் திராவகம் என்பதாகும்.

401. கெந்தகம், நாபி, சுக்கு, மிளகு திப்பிலி மனோசிலை துருசு, அரிதாரம், வெண்காரம் சூதம் ஆகிய பத்து சரக்குகளைச் சமமாக எடுத்துக் கொள்க. நன்கு பொடித்து 488 மி.கி அளவு மூன்று நாள்
அருந்து பூச்சாறு, இஞ்சிச்சாறு இவற்றில் கலந்து கொடுக்க சன்னி, சூலை, இன்மம், சீதவாதம், காசம், கோழை, சேட்டும ரோகம், ஆகிய நோய்கள் தீரும்.

மகாபூரணச் சந்திரோதயம்

402. [illegible], [illegible], [illegible], இரசம் 20 கிராம் [illegible] கெந்தகம் 20 பங்கு பொன்னியும் பவளம், மாணிக்கம் 5 பங்கு பொன்னியும்
403 வெள்ளி மூன்று பங்கு பொன்னியும் பங்கமாகும். இப்பற்பங்களை முருக்கிலையின் சாற்றில் நன்கு அரைத்துக் கொள்க.

மகாபூரணச்சந்திரோதயம்

402. இரசம் 44கி, கெந்தகம் 80கி, தங்கம், பவளம், மாணிக்கம் 20கி, வெள்ளி 12கி. எடுத்துக் கொள்க. (பற்பம்)

இவற்றைக்
கரிசாலை, கத்தன்குதம்பை இவற்றின் சாற்றிலும்
தனித்தனியே மூன்று மணி நேரம் அரைத்துக்
கொள்க.

404. அரைத்த விழுதினை க் குப்பியில் போட்டு
அதன் வாயினை மூடி அரைத்த மண்ணைச்
சீலை மண் செய்து கொள்க. மணலினாலான
வாலுகா எந்திரத்தில் வைத்து ஆறு மணி நேரம்
எரிக்க வேண்டும்.

405. தக்க நேரம் கழித்து ஆறிய பின் எடுத்துக்
கொள்க. இதன் பெயர் மகாபூரணச் சந்தி
-ரோதயம் என்பதாகும்.

406. இம் மருந்தினைச் சாதிக்காய், சமுத்திர சோகி விதை,
கஸ்தூரி ஆகிய அநுபானங்கள் இவற்றில்
கலந்து கொடுக்கவும்.

407. 488 மி.கி அளவு இப்பற்பத்தைத் தாம்பூலத்தில் கலந்து கொடுக்க
வேண்டும். கைப்பு, புளிப்பு பால், நெய்,
உறைந்து, உப்பு ஆகியவற்றை நீக்க வேண்டும்.

சூசிகாபரணம்

408. அப்பிரகம், பொன், வெள்ளி, அயக்காந்தம், வெள்வங்கம், கருவங்கம் இவற்றின் பற்பங்களை வகைக்கு 4கி எடுக்க. கெந்தகம், நாபி இவற்றை வகைக்கு 4கி எடுக்க.

409. ஊமத்தை, ஆடாதோடை, கொடிவேலி, நொச்சி, கரிசாலை, கற்றாழை, துளசி, சீந்தில், கொட்டைக் கரந்தை யிலை எலுமிச்சஞ்சாறு, வட்டத்திருப்பி இஞ்சி ஆகிய மூலிகைகளின் சாற்றை விட்டரைத்து கலத்திற்குள் போட்டு வாயினை அடைத்து சீலை மண் செய்து மணல் வாலுகா எந்திரத்தில் வைத்துக் கொள்க

410. 12 மணிநேரம் எரித்து தக்க நேரம் ஆன பிறகு வாலுகா எந்திரத்திலிருந்து எடுத்து கோழி, கடும் பாம்பு, மீன், பன்றி, தாரா, தவளை இவை ~~[illegible]~~ ஒவ்வொன்றிலும் தனித்தனியே அவ்வொருநாளும் அரைத்துக் கொள்க.

411. அரைத்த விழுதினை ஊசிமுனை போல உருட்டிக் கொள்க. இஞ்சிச்சாறு, வெற்றிலைச் -சாறு ஆகிய அனுபானங்களில் கலந்து கொடுக்க ~~குசிகாபரணம் [illegible]~~. காசம், சயம் ஆகிய வையும் இன்னும் பல நோய்களும் தீரும்.

மகாகுசிகாபரணம்

412. காந்தம், தங்கம், இரசம், அப்பிரகம் அய செந்தூரம் இவற்றை வகைக்கு 5 பங்கு எடுத்துக் கொள்க. அதில் பாதி கெந்தகத்தை உடன் சேர்த்து அரைத்துக் கொள்க.

413. துளசி, அசுவகெந்தி எனும் அமுக்கிரா, மணித்தக்காளி, காக்கணம் ஆகிய இவற்றின் சாற்றில் மேற்கூறிய சரக்குகளை மும்மூன்று மணிநேரம் சேர்த்தரைத்து வெய்யிலில் வைத்துக் கொள்க.

414. வெய்யிலில் வைத்ததை மறுபடி அம்மியில் வைத்து அரைத்து உருண்டை செய்து கொள்க. அதனை மேற்குறிப்பிட்டது போன்று இஞ்சிச்சாறு, வெற்றிலைச் சாறு ஆகியவற்றில் உரைத்துக் கொடுக்க சயகாசம் குணமாகும்.

பஞ்சாமிர்தம்

415. செம்புச் செந்தூரம், காந்தம், இரும்பு, அப்பிரகச் செந்தூரம் இவை நான்கையும் சம அளவு எடுத்துக் கொள்க. 20கி சாதிலிங்கம் எடுத்துக் கொள்க.

416. மேற்கூறிய சரக்குகளைக் கொடிவேலிச் சாற்றில் அரைத்து உருட்டிக் கொள்க. முன் சாமத்தில் தக்க அனுபானங்களுடன் கலந்து கொடுக்க பல பிணிகள் இணையாகும்.

கெருடருத்திரரசம்

417. அப்பிரகம், சுக்கு, கெந்தகம், சாதிலிங்கம், திப்பிலி, நாபி, இரசம், இந்துப்பு, கிராம்பு இவற்றை வகைக்குச் சம அளவெடுத்துக் கொள்க. செருப்படி -யின் சாற்றில் ஒரு நாள் அரைத்துக் குகையில் வைக்க.

418. குகைக்கு மேல் சீலை மண் செய்து பத்து வறட்டியில் புடம் வைக்கவும். தக்க நேரம் கழித்து எடுத்துப் பார்த்து தக்க அனுபானங்களில் கொடுக்கவும். சுரம், சன்னி, பல பிணிகளும் கெருடருத்திரரசம் எனும் பெயருடைய இம்மருந்தால் தீரும்.

பார்கவிரசம்

419. கௌரி மூன்று பங்கு, சாதிலிங்கம் இரண்டு பங்கு எடுத்து முருகைக் கிழங்கின் சாற்றைச் சேர்த்தரைத்து இலையில் போட்டுக் கொள்க. வாய்க்கு சீலை மண் செய்து மூன்று வரட்டியில் புடம் வைத்து எடுக்க. தக்க சமயத்தில் எடுத்துப் பார்த்து ஆறியபின் சிமிழில் வைக்கவும்.

420. மருந்தினைச் சுக்கு, மிளகு, திப்பிலி சேர்ந்த சூரணத்தில் கொடுக்க வாதசுரமும் துளசிச் சாற்றில் கொடுக்க பித்த சுரமும் சீரகக் குடிநீரில் கொடுக்க சீதசுரமும் முருங்கைச் சாற்றில் கலந்து கொடுக்க வாத சன்னியும் தீரும்.

421. 60 மி.கி அளவு சாறுகளில் கலந்து கொடுக்க ~~சீரண~~ தெரியாமை நீங்கி சீரணமுண்டாகும். இஞ்சிச் சாற்றில் கொடுக்க தாப சுரம் குணமாகும்.

ரம்பாவிரசம்

422. இரசம், கெந்தகம், கௌரிப்பாடாணம், சுக்கு, நேர்வாளம், ஆமணக்கு விதை, கடுக்காய் இவை அனைத்தையும் சமமாய் எடுத்து கற்றாழைச்சாறு விட்டரைத்து உலையில் வைத்து வாயினை மூடுக.

423. அவ்வுலையின் சந்து வாய்க்கு சீலை மண் செய்து கொள்க. பத்து வரட்டியில் புடம் வைத்தெடுக்கவும். தக்க நேரம் கழித்துப்பார்க்க வேண்டும். பின் அதனுடன் இரண்டு பங்கு மிளகையும் விளக் கெண்ணெயையும் சேர்த்து எரித்துக் கொள்க. பின் எடுத்து 130 மி.கி அளவுள்ள குளிகைகளாகச் செய்து கொள்க.

424. இஞ்சி, திப்பிலி சேர்ந்த குடிநீரில் கலந்து கொடுக்க சுரம், சன்னி தீரும். பல நோய்களையும் நீக்கும் சம்பாவிரசம் என்னும் குளிகை பாம்பு விசத்தையும் போக்கும் தன்மையுடையதாகும்.

சன்னி பாதரசம்

425. லிங்கம், அப்பிரகம், இரசம் நாபி அரிதாரம் ஆகிய இவையிரண்டையும் சம அளவெடுத்து சேர்த்தரைத்து செப்பில் போட்டு மூடி கொண்டு மேலுக்

426. குழி அளவு புடத்திற்குள் செப்பினை வைத்து தக்க அளவு எரித்து தக்க சமயம் கழித்து எடுத்து அரைத்துக் கொள்க. அதனை 65மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டி தக்க ~~அனு~~ பான

அனுபானங்களில் கலந்து கொடுக்க சன்னி பாதசுரம், தோசசுரம், சன்னி, ஆகியவை தீரும்.

கமலயணரசம்

427. இரதம், கெந்தகம், நாபி, வெண்காரம், திப்பிலி, ஊமத்த விதை, இவற்றைத் தகுந்த அளவெடுத்து செருப்படையின் சாறு சேர்த்தரைத்து செப்பில் போட்டுக் கொள்க. சீலை மண் செய்து வாயினை மூடிக் கொள்க.

428. குழியில் உலர்த்தி சிறிய புடத்தில் வைக்க. பத்து வரட்டியில் புடம் வைத்துப் பார்த்து எடுத்துக் கொள்க. ஆறவைத்தெடுத்து வச்சிரப் பாலில் அரைத்துப் பின் வரால் மீனின் பித்தில் அரைத்து 130 மி.கி அளவு உருண்டைகளாய்ச் செய்து கொள்க.

429. கஞ்சியில் உரைத்துக் கொடுக்க சுரதோடம் தீரும். கற்றாழை, முருங்கை, இஞ்சி, மருக்கின் தோல், வெற்றிலைச் சாறு எடுத்துக் கொள்க. வெண்காரம், திப்பிலி, இந்துப்பு இவற்றைப் பொடித்து எடுத்துக் கொள்க.

430. மேற்கூறப்பட்ட அனுபானங்கள் ஏதேனுமொன்றில் பிணிகளுக்கேற்ப கொடுக்க போகாத சுரங்கள், சன்னி, ஆகிய நோய்கள் தீரும்.

431. அப்பிரகம், சூதம், இலிங்கம், அரிதாரம், நாகம், கெந்தகம், நாபி, மனோசிலை, ஆகிய சரக்குகளைச் சமமாய் எடுத்துக் கொள்க.

432. மேற்கூறிய சரக்குகளைக் குழிக்கல்லில் விட்டு பாகலினைச் சாற்றில் அரைத்து மூசையினுள் வைத்து சீலை மண் செய்து கொள்க. மூன்று எருவில் புடம் வைத்தெடுத்துக் கொள்க. பின் அதனை எருமைப் பாலில் ஊற வைத்துக் கொள்க.

433. ஊறிய பின் இறுத்துப் பின் மூன்றுநாள் கள்ளிப்பாலிலும் ஊற வைத்து அரைத்து 130 மி.கி அளவுள்ள வலதுபக்கமாக உள்ள உருண்டைகளாய்ச் செய்து கொள்க. தாய்ப்பாலில் உரைத்துக் கொடுக்க சுரம் தீரும்.

434. இடதுபக்கமாக உள்ள தாய்ப்பாலில் இழைத்துக் கொடுக்க சுரம் தீரும். இஞ்சிச் சாற்றில் கொடுக்க பிணிகள் பலவும் தீரும்.

435. இன்மம், வயிற்று வலி, விக்கல், வயிற்றிரைச்சல், கிராணி, வாயு, ஆகிய பல நோய்கள் இக்குளிகையால் தீரும்.

வித்தியாதி கண்ட ரசம்

436. அப்பிரகச் செந்தூரம், இரச கெந்தகம் அசுவகெந்தி, தாமிரம், முத்தக்காசு, வெட்டிவேர், வெட்டிவேர், பற்பாடகம், ஆகியவற்றைச் சமமாய் எடுத்துக் கொள்க.

437. ஆடாதோடை, தாழை, கற்றாழை பற்பாடகம் ஆகிய மூலிகைகளையும் எடுத்து இடிச் சாற்றில் ஒரு நாள் ஊற வைத்து இடையின்றி போடுக. இடையின் வாய்க்குச் சீலை மண் செய்து கொள்க.

438. பத்து வறட்டியில் புடம் வைத்தெடுத்துக் கொள்க. பின் அதனை வெற்றிலையிட்டு கலக்கிக் கொடுக்க வாத பித்த வேர்வை, வைசூரி, பதினாறு வகை மூர்ச்சை ஆகிய நோய்கள் வித்தியாதி கண்ட ரசம் எனும் மருந்தால் தீரும்.

சிந்தாமணி ரசம்

439. இரசம், கெந்தகம், இந்துப்பு, வாளம் ஆகிய சரக்குகளைச் சமனெடுத்து கற்றாழைச்சாறு விட்டரைத்து கரும்பு வெற்றிலைக்குள் வைத்துக் கொள்க. பின் அதனை மண்குழியினுள் வைத்து மேலே மணலைப் போடுக.

440. மணலின் மேல் எருவினை அடுக்கிக் கொள்க. மூன்று விறகு கொண்டு எரித்து ஆறிய பின் எடுத்துக் கொள்க. வெற்றிலைச்சாறு விட்டரைத்து 130 மி.கி அளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து கொள்க. வெற்றிலையில் வைத்துக் கொடுக்க.

441. தக்க அனுபானங்களில் கொடுக்க வாதம், பித்தம், சிலேத்துமம், சுரம் ஆகிய நோய்கள் சிந்தாமணி ரசம் எனும் இக்குளிகையால் தீரும்.

சன்னிபாத வயிரவன்

442. இரசம், சாதிலிங்கம், மனோசிலை, அயச்செந்தூரம், நாவி, அமுதச்சத்து ஆகிய சரக்குகளை எடுத்து அரவின் குன்றினை மேல் வைத்து குழியாய் வைத்த மணலில் வைக்க.

443. மண்ணை மேலே போட்டு நன்று எருவில் புடம் வைத்துக் கொள்க. தக்க நேரம் கழித்து ஆறிய பின் எடுத்து கொடிவேலிச் சாற்றில் அரைத்து உருட்டிக் கொள்க. நோய்க்கேற்ற தக்க அனுபானங்களில் கொடுக்க.

444. சுரம், பலவகைச் சன்னி, குத்து வலி, ஆகிய நோய்கள் சன்னிபாத வயிரவன் எனும் மாத்திரையால் தீரும்.

சங்கேசுரி

445. இரசம், கெந்தகம், இவை இரண்டையும் சமனெடுத்து ஊமத்தைச் சாறு, கொடிவேலிச்சாறு சேர்த்தரைத்து சங்கில் அடைத்துக் கொள்க. சங்கின் வாய்க்குச் சீலை மண் செய்து மண்ணினாலான பாண்டங்களில் வைக்க.

446. மணலில் எருவடுக்கிப் புடம் வைத்துக் கொள்க. ஆறிய பின் எடுத்து அவ்வெடைக்குச் சமமாக நாபியைச் சேர்த்து 130 மி.கி அளவுள்ள குளிகைகளாகச் செய்து கொள்க. நெய்யில் குழைத்துக் கொடுக்க சுரம், அதிசாரம் தீரும்.

447. வாய்வுக் குன்மம், சூலை, குன்மம், சந்நி சுரம், ஆகிய நோய்கள் சிங்கேசுரி எனும் குளிகையால் தீரும்.

நாராயணரசம்

448. கஸ்தூரி, சந்தனம், அரிதாரம், வெண்காரம் ஆகிய சரக்குகளைச் சீரணை வேர்ச்சாற்றில் தனியே அரைத்துக் கொள்க. மூன்று மணி நேரமரைத்து மீண்டும்
449 ஒரு நாள் அரைத்து 130 மி.கி அளவு உருட்டிக் கொள்க. தக்க அனுபானத்தில் இழைத்துக் கொடுக்க. லட்சுமி நாராயணரசம் எனும் இக்குளிகையில் சுரங்கள் பல தீரும்.

அகோர சித்தரசம்

450. இரசம், கெந்தகம், துருசு, அரிதாரம், நெல் ஆகிய சரக்குகளைச் சமனெடுத்துக் கொள்க. அதே அளவு எருக்கம்பாலை எடுத்து அரைத்துத் துணியில் முடிந்து கொள்க. பசும்பால் 1.3 லி சேர்த்து அதில் மேற்கூறிய துணியினைப் போட்டு எரித்துக் கொள்க.

451. மண்புழுவின் பிச்சியினை அட்டரைத்து 130 மி.கி அளவுள்ள குளிகைகளாக உருட்டிக்கொள்க. எருக்கின் பாலைக் குளிகையுடன் சேர்த்தரைத்து இரசத்தையும் அதனுடன் சேர்த்துக் கொடுக்க சன்னி சுரம் தீரும்.

452. பொரிகாரம், மனோசிலை, கெந்தகம் அரிதாரம், ஆகிய சரக்குகளைச் சமமாக எடுத்துக் கொள்க. எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து எந்திரத்தில் வைத்து எரித்துக் கொள்க. பின் அதை எடுத்து மீன் பித்தில் சேர்த்து அரைத்துக் கொள்க.

453. விழுதினை 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொள்க. தக்க அனுபானங்களில் கொடுக்க பல நோய்கள் தீரும். சன்னி குறையும்.

பஞ்ச பாசாணச் செந்தூரம்

454. கௌரி, வெள்ளைப்பாடாணம், கெந்தகம் மனோசிலை சாதிக்காய், சாதிபத்திரி, தான்றிக்காய், ஆகிய மருந்துச் சரக்குகளைச் சம அளவெடுத்துக் கொள்க.

455. மதுக்கிழங்கு, அசுவகெந்தி ஆகிய மூலிகைகளை -யும் எடுத்து பொடுதலை, கரிசாலை, வேலிப் பருத்தி யிலை இவை மூன்றின் சாற்றில் அரைத்துக் கொள்க.

456. அரைத்த விழுதினை நன்கு இருப்பு சட்டியில் போட்டு எரித்து குழம்பாய் எடுத்துக் கொள்க. பின் அதனைக் குகையில் வைத்து ~~சீலைமண் செய்து~~ கொள்க. பிரமட்டைச் சாம்பலையும் உள் போட்டு சட்டியினை மூடிக் கொள்க.

457. பின் சட்டியின் வாய்க்குத்தனிச் சீலை மண் செய்து கொள்க. அடுப்பிலேற்றி எரியிட்டுக் கொள்க. நாற்பத்தெட்டு மணிநேரம் ஒரு விறகு கொண்டு எரித்து பூசை செய்து எடுத்து வைக்க.

458. ஆறிய பின் செந்தூரத்தை எடுத்து பத்திரப்படுத்திக் கொள்க. அதில் 488 மி.கி அளவு பனைவெல்லம், இஞ்சிச்சாற்றில் கலந்து கொடுக்கவும். இவ்வாறு ஒன்பது நாட்கள் இரண்டு நேரமும் உட்கொள்ள வேண்டும்.

459. உப்பில்லாத பச்சரிசிக் கஞ்சி உட்கொள்ளல் வேண்டும். தலை முழுக்கான நாளுக்குப் பின் சிற்றாமணக் கெண்ணெயைத் தேய்த்துத் தலை மூழ்கி குளிக்க. பத்தியமாக பசும்பால், நெய் உட்கொள்ளுதல் வேண்டும்.

460. ~~[illegible]~~ உப்பேற்றப்பட்ட கரித்துண்டு, வாழைக் கச்சல், ஆகிய இரண்டையும் பத்திய -மாகக் கொள்க. பஞ்சபாஷாணச் செந்தூரமாகிய இதற்கு இரணங்கள், இட்டம் தீரும்.

461. தனங்காகும் மெய்யச்சம். ௨௦ கி, காந்தம், சாதிலிங்கம் இவை இரண்டுக்கும் எடை அதைக்கு 5கி எடுக்க. நாக பற்பத்தையும் நான்கு சேர்க்க. அனைத்தையும் மோர் விட்டரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைக்க.

462. உருண்டையை மோரில் இழைத்துக் கலந்து கொடுக்க நீர்க்கட்டு தீரும். பிரமேகம் இணைமாகும்.

463. அசித்தி? தானாக் கற்றாழைச் சாற்றை விட்டு இரண்டியில் வைக்க நீராகும். கெந்தகத்தை நெய்யிலும் கற்றாழைச் சாற்றிலும் சுத்தத்துடன் ஏழு முறை சாய்க்க சுத்தியாகும்.

464. (~~[illegible]~~ ~~காரம்~~? கெந்தகத்தைப் பாலில் சுத்தி செய்து கொள்க. காரத்தை இளநீரில் சுத்தி செய்து கொள்க. பாலில் நெய்யில் கழுவி வாழை இலையில் வைக்க.

465. வாழையிலைவையைக் குவித்து அதில் கீழாநெல்லி
-யின் வேரைச் அருட்டி வைத்துக் கொள்க.
கீழ் இலையில் வெண்காரத்தை வைத்து
வெந்நீரின் மேல் வைக்க காரம் உருகும்.

466. பின் எடுத்து வெயிலில் வைத்தாலும் கற்பூரத்துக்கு
ஒப்பாகும். காந்தத்தைத் தூளாக்கி நாவல் மருது
ஆகிய மரத்துப் பட்டைச் சாற்றில் ஊறவைத்துக்கொள்க.

467. மறுநாள் சரக்கினை நன்கு அரைத்து 4கி அளவுக்கு
வில்லை செய்து கொள்க. அதனை நிழலில் காய
வைத்து பின் ஓட்டில் அடுக்கி வைத்துக் கொள்க.
புடம் வைக்க. அவ்வாறே ஏழு முறை செய்க.

468 எலுமிச்சஞ்சாற்றில் ஒரு முறையும் கோரக்கர்
மூலி சாற்றில் ஒரு முறையும் சாயவேர் சாற்றில்
மூன்று புடமும் தனித்தனியே எடுத்து ஆறவைத்து
எடுத்துப் பொடித்துக் கொள்க.

469. <u>கச்சனி மாத்திரை</u>

கெந்தகம், வெண்காரம், காந்தம் இவற்றைச்
சமனாய் எடுத்துக் கொள்க.

வாய்விடங்கம் சூரணத்தைச் சேர்த்து மாத்திரை
470. —களாகத் திரட்டிக் கொள்க. அதனைத் தக்க
அனுபானத்துடன் கொடுக்க கணை முதலிய
நோய்கள் தீரும்.

சந்திர சேகர ரசம்

471. இரசம், கெந்தகம், மனோசிலை காந்தம், தாமிரம்,
சாதிலிங்கம், தாளகம், முத்தக்கசு, சத்திச்சாரம்,
வெடிச்சாரம், நேர்வாளம், இந்துப்பு

472. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஆகிய
சரக்குகளை வகைக்குச் சம அளவு எடுக்க.
~~130 மி.கி அளவுள்ள~~ இஞ்சி கோடகசாலை
வெந்தோன்றி, பசலை, இவற்றின் சாறுகளை
473. எடுத்து மேற்கூறிய சரக்குகளை ஒவ்வொரு சாற்றிலும் தனித்தனியே ஒருநாள் வைத்து அரைத்துக் கொள்க.
130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி
நிழலில் உலர்த்தித் தக்க அனுபானங்களில் கொடு—
நோய்கள் போகும்.

474. வெற்றிலையின் சாற்றில் இழைத்துக் கொடுக்க
வாத சுரம் தீரும். வெல்லம், கழிநீர் ஒன்றில்
இழைத்துக் கொடுக்க ஐய சுரம் தீரும். மாணிக்கத்
பனிநீரில் உரைத்துக் கொடுக்க பித்தம் குணமாகும்.

475. அக்கில் கொடுக்க கணையும் முருங்கைக் குடிநீரில் திப்பிலியில் உண்ண தோசசுரமும் தீரும்.

476. எருக்கம் பட்டை அக்குநீரோங்கி சேர்த்து இழைத்துக் கொடுக்க பலவகை வாய்வும் இந்துப்புத்தூள் சேர்ந்த இஞ்சிச் சாற்றில் உரைத்துக் கொடுக்க திரிதோடம் குணமாகும்.

477. உள்ளிச் சாறு, அமுரி சேர்ந்த நீரில் குளிகையை இழைத்துக் கொடுக்க வலிப்புகள் தீரும். நொச்சிச் சாற்றில் எவச்சாரத்தைக் கலந்து அதில் இழைத்துக் கொடுக்க பஞ்ச வாய்வும் தீரும்

478. பசு கோமயத்தில் உரைத்துக் கொடுக்க மேகம் தீரும். கோஷ்டம், அதிமதுரம் சேர்த்த நீரில் இழைத்துக் கொடுக்க வாய்வு தீரும்.

479. காட்டு ஆமணக்கு இலைக் குடிநீரில் இழைத்துக் கொடுக்க பெருவயிறு தீரும். சந்திர சேகரத்தையும் சேர்த்துக் கொடுக்க பிறந்த நோய் தீரும்.

சந்திரப்பிரபாதிரசம்

இவை இரண்டையும் வகைக்கு நான்குபங்கு
480. மனோசிலை, பொன் ^ கெந்தகம், காந்தம் இவை
இரண்டும் சமபங்கு, திரிகடுகு எனும் சுக்கு மிளகு
திப்பிலி, இந்துப்பு கொடிவேலி எனும் இச்சரக்கு
-களை வகைக்கு 70 கி எடுத்துக் கொள்க.

481. கடுக்காய்ச் சூரணம் 140கி எடுத்து கக்கரி எனும்
வெள்ளரிச் சாற்றில் அரைத்து மாத்திரைகளாக உருட்டிக்
கொள்க. அதனைத் தேனில் குழைத்துக் கொடுக்க
எலும்புருக்கி குணமாகும். சந்திரப்பிரபாதி ரசம்
என்று இம்மருந்திற்குப் பெயர்.

சுவித்தியப்பிராபதிரசம்

482. வாய்விடங்கம் வேப்பிலை, வெலிப்பருத்தி,
இந்துப்பு கோட்டம், கொடிவேலி, சுக்கு, மிளகு,
திப்பிலி, சத்திச்சாரம், நாபி, ஆகிய சரக்குகளைச்
சமனாய் எடுத்துக் கொள்க. பசு, ஆடு
483. எனும் இரண்டின் சிறுநீரிலும் ஆறுமணிநேரம்
அரைத்து பெரிய கடலை போல் உருட்டிக்
கொள்க.

484. பசுமோரில் குழைத்துக் கொடுக்க கிராணி உஷ்ணம்,
தோசம் தீரும். நெய்யில் கொடுக்க விசசுரம் தீரும்.

தேனில் பித்தம் குணமாகும். வெந்நீரில் இழைத்துக் கொடுக்க சூலை, குன்மம் குணமாகும். நெய்யில் கொடுக்க காசம் தீரும். இம்மருந்-திற்குச் சயித்தியப் பிரவாதிரசம் எனும் பெயர்.

மகாபிரவாதிரசம்

486. இரதம், வெடியுப்பு, கற்பூரம், சீனக்காரம், இந்துப்பு, கறியுப்பு, வாய்விடங்கம், அஞ்சனி எனும் நாணற்புல், கெந்தகம், அக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம், கோரைக்கிழங்கு, கொடிவேலி, வெப்பிலை முசட்டை, தாமரைப்பூ, நாபி (வேபங்கு) இவற்றை எடுத்துக் கொள்க.

487. ஏ·ன்ற சிப்பியில்! (ஏ·ன்ற சின்யி) விட்டரைத்து 130 மி.கி அளவு உருண்டைகளாகச் செய்து கொள்க. செம்புக் கிண்ணியினுள் முசட்டை, தாமரைப்பூவைக்க நாபியையும் வைக்க.

488. சந்தனத்துடன் இழைத்துக் கொடுக்க சோதி பித்தம், அதிசாரம், ஆகிய நோய்கள் தீரும். மகாபிர-வாதிரசம் எனும் பெயர் மருந்திற்குடையது.

குட்ட குலாந்தரசம்

489. இரசம் கெந்தகம், இந்துப்பு,
வாளம் மனோசிலை சேங்கொட்டை கோரைக்
கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி நாபி, கொடி
வேலி இவற்றைக் குறிப்பிட்ட அளவு
எடுத்துக் கொள்க.

490. வெங்காரம் இரண்டும் எனும் ஆமணக்கு விதை,
அரிதாரம், இவற்றைச் சமமாய் எடுத்துக் கொள்க.
எருக்கம் வேர்க் குடிநீரிலும் பிச்சு நீரிலும்
அரைத்துக் ↑ ஒருநாள் வைத்துக் கொள்க.

491. சுண்டைக்காயளவு அரைத்த மருந்தை உருட்டிக்
கொள்க. வெந்நீர், நெய், மிளகு, சர்க்கரை
இவற்றோடு மாத்திரையைச் சேர்த்து உண்ண
பதினெட்டு வகைக் குட்டம் தீரும். குட்டத்
-தினை தீர்க்கும் இம்மருந்திற்குக் குட்ட குலாந்த
ரசம் என்பது பெயர்.

காச குலாந்தரசம்

492. லிங்கம், தாரம், மனோசிலை, சுக்கு, மிளகு, திப்பிலி,
வெண்காரம், நாபி இவற்றை வகைக்குச்
சம அளவெடுத்துக் கொள்க. இஞ்சிச்சாறு விட்டு
அரைத்து உளுந்தளவு 130 மி.கி அளவு செய்து
நிழலில் உலர்த்திக் கொள்க.

493. நெய்யுடன் சீரகத்தையும் சேர்த்து அனுபான
மாகக் கொண்டு இளிகையை கிழைத்துக் கொடுக்க
சயரோகம், சுவாசம் ஆகிய நோய்கள் தீரும்.
இக்குளிகையின் பெயர் காசகுளாந்தரசம்.

பயித்திய குளாந்தரசம்

494. அரிதாரம், சாதிலிங்கம், வெண்காரம், இவற்றைச்
சமமாய் எடுத்துக் கொள்க. எலுமிச்சம் பழச்சாறு
ஊற்றி அரைத்து 65 மி.கி அளவுள்ள உருண்டை
களாய்ச் செய்து கொள்க. தக்க அனுபானத்தில்
இடவும்.

495. கொடிவேலிச்சாறு இருசீரகம், எலுமிச்சம்பழச்சாறு
பூநாகம், சர்க்கரை, பூசணிக்காய்ச் சாறு ஆகிய
அனுபானங்களில் கொடுக்க நோய்கள் நன்றாகும்.

496. காலை, மாலை இரு வேளையும் கொடுக்க
பித்தகாசம் தீரும். இம் மருந்தின் பெயர்
பயித்திய குளாந்தரசம்.

பிரமேக குளாந்தரசம்

497. இரசம், காரீயம், காந்தம், கெந்தகம், ஆனி விதையின்
தோல், கொத்துமல்லி, வெள்ளைக் குன்றிப் பருப்பு

பூனைப்பட்டை, கிட்டம், கற்கடகசிங்கி

498. பச்சிசி, ஆரை, பஞ்சகம், சில்லவிதை சாதிக்காய் இவற்றை வகைக்கு 4கி எடுக்க கீழாநெல்லிக்காய்ச் சாறு விட்டு இரண்டு நாட்கள் அரைத்து மற்றொருநாள் பசுத்தயி
499. -ரோடரைத்து சில்ல விதையளவு உருண்டை செய்து கொள்க. அதனை நிழலில் உலர்த்தித் தக்க அநுபானத்துடன் கலந்து கொடுக்க

500. இரத்த சோகை, வெள்ளைச்சக்கிலம் மேகம் நீர் கிரிச்சரம் ஆகிய நோய்கள் பிரமேகக்குளாந்த -ரசம் எனும் பெயருடைய இம்மருந்தால் தீரும்.

சஞ்சீவிரசம்

501. நாபி, சாதிலிங்கம், இவை இரண்டையும் எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாள் அரைத்து 65 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டி தக்க அநுபானத்தில் கொடுக்க வேண்டும்.

502. குளிர்ந்த தண்ணீரில் இழைத்துக் கொடுக்க இன்னும் உள்ள சுரத்தின் வகைகள் சுரம், கள்ளச்சுரம், ஆகியவை 'சந்திரஹாரசம்' எனும் குளிகையால் குணமாகும்.

வாதகாதிரசம்

503. தாமிரம், பாதரசம், தாளிசபத்திரி, கெந்தி, அயச்செந்தூரம், திப்பிலிமூலம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வாய்விடங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, நாகம்

504. நாபி, ரேணுகம், ஆகிய மருந்துப் பொருட்களைச் சமமாய் எடுத்து தண்ணீரில் அரைத்து குளிகைகளாக உருட்டிக் கொள்க. வாதகாதிரசம் எனும் பெயருடைய இக்குளிகை தக்க அனுபானத்துடன் கொடுக்க பல பிணிகள் தீருமே.

505. பிரமேகம், விஷசுரம், மூத்திரக்கிரிச்சரம், உடல் வலிகள், சன்னி, வாதம், சுவாசம், க்ஷயம், இருமல் ஆகிய நோய்கள் வாதாதிரசம் எனும் குளிகையால் தீரும்.

506.

சூலகுலாந்தரசம்

506. பற்பம், நாபி, பெருங்காயம், உள்ளி சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இருவி, வட்டத்திருப்பி, கொடி வேலி, எனும் இரண்டு வகை

507. காரங்கள், அரிதாரம், குங்கணை, மருள், சிவதைவேர், கோட்டம், சிறுபீளைவேர், பப்பாளி பழத்தின் தோல், அப்பிரகபற்பம், கெந்தகம் இரண்டு பங்கு எடுத்து இஞ்சிச்

508. சாற்றில் மூன்று நாள் அரைத்துக் கொள்க அடுத்து கொடிவேலி சாற்றில் மூன்று நாள் அரைத்து, பின் கடலை அளவுள்ள இளிகை களாய்ச் செய்து கொள்க.

509. குளிகைகளைத் தக்க அனுபானங்களில் கலந்து கொடுக்க பெரு வயறு, மகோதரம், மேற்கவிசை அந்திர வைட்டு, குன்மம், அட்டவிகை, உந்தி சூலை, சுரம், பாண்டு, வெப்பு, பாவை ஆகிய நோய்கள் தீரும்.

வடவாக்கினி ரசம்

510. இரதம், கெந்தகம், தாமிரம், சுக்கு, மிளகு, திப்பிலி,

கொடிவேலி, ஆகிய சரக்குகளை வகைக்கு
5 கி, 10 கி கெந்தகத்தையும் எடுத்து கொடிவேலிக்
511. கிழங்கின் சாற்றில் அரைத்து சுண்டைக்காயளவு குளிகை
களாக உருட்டி நெய்யில் அல்லில் தேனில்
கிழைத்துக் கொடுக்க சுரம் தீரும்.

பஞ்சவிக்ரம ரசம்

512. இரதம், நாபி, மிளகு, வெண்காரம், இவற்றை
வகைக்குச் சமமாய் எடுத்துக் கொள்க. ஊமத்த
இலையின் சாற்றை விட்டு அரைத்து 130 மி.கி
அளவுள்ள குளிகைகளாக உருட்டிக் கொள்க.
தக்க அனுபானங்களில் கொடுக்கவும்.

513. சுக்கு, மிளகு, திப்பிலி சேர்ந்த சூரணத்தில்
குளிகையை இழைத்துக் கொடுக்க ஐந்து வகைச்
சன்னியும் பல வகை வாதமும் பல வகை சன்னியும்
தீரும். இம்மாத்திரைக்குப் பஞ்சவிக்ரம ரசம் என்று
பெயர்.

தாம்பிராதி மாத்திரை

514. இரதம், லோகச்செந்தூரம், இக்கில், நேர்வாளம்
இவற்றைச் சம அளவெடுத்து சிற்றாமணக்கின் நெய்விட்டு
விட்டரைத்து 130 மி.கி அளவு மாத்திரைகளாக
உருட்டிக் கொள்க. தக்க அனுபானத்திலிட்டுக்

515. சுயம், காசம், இருமல், சுவாசம், கஸ்ளாச் சுரம், அனல் ஆகிய நோய்கள் தாம்பிராதி மாத்திரையால் தீரும் என்று கூறப்பட்டுள்ளது.

குலாந்தக ரசம்

516. இரசம் 16 பங்கு, தாமிரம் 16 பங்கு, கெந்தகம் 8 பங்கு, இந்துப்பு, பொரிகாரம் 24 கி எடுத்து எலுமிச்சம்பழச் -சாறு விட்டரைத்து உருண்டையாய்ச் செய்து கொள்க.

517. 130 மி.கி அளவு உருண்டையை இஞ்சியில் இழைத்துக் கொடுக்க பாண்டு, சுயம், இன்மம், சுவாசம் தீரும். சுவாச குலாந்த ரசம் என்னும் மாத்திரையால் இப்பிணிகள் தீருமென நவமந்திரி யுரைத்தார்.

செக மோசன ரசம்

518. சூதம், நவலோகம் (பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், வங்கம், நாகம், குருந்தம், பித்தளை) இரத்தினம் ஆகியவற்றைச் சேர்த்து நீராக்கிக் கொள்க. நாபியையும் கூட சேர்த்து கோட்டம், அக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெட்சாரம், பொரிகாரம், கெந்தகம், மனோசிலை ஆகியவற்றைச் சமமாக எடுத்துக் கொள்க.

(கோழிப்)

519. மேற்குறிப்பிட்ட சரக்குகளைப் பிச்சியுடன் சேர்த்தரைத்து
கடுகளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து
வெற்றிலைச் சாற்றில் இழைத்துக் கொடுக்க
வாத சுரம் தீரும்.

520. பாற்சோற்றில் உரைத்துக் கொடுக்க பித்த சுரம்
தீரும். ஐய சுரம் தீரும். மேவகைச்
சுரங்களும் தக்க அனுபானங்களினிடை தீரும்.

521. கீழாநெல்லிச் சாற்றில் கொடுக்க ஒரு நாள் மாறலும்
துளசிப்பாலில் கொடுக்க மூன்று நாள் மாறலும்
முத்தெருக்கின் சாற்றையும் தேனையும் கலந்து அதில்
இக் குளிகையை இழைத்துக் கொடுக்க அபிகாத சுரம்
தீரும்.

522. முருங்கைத்தோல், வாழைச் சாற்றில் கொடுக்க
தோசசுரம், திரிதோசம், அனைத்துவகை சுரங்கள்,
தீரும்.

523. கோமயத்தில் இழைத்துக் கொடுக்க வாதம் தீரும்.
சோகை போகும். அனைத்துப் பிணிக்கும், கக்கஞ்
சாற்றிடத் தீரும்.

528. கவுதும்பைச்சாற்றுடன் வெல்லத்தையும் சேர்த்த
கலவையில் மாத்திரையை உரைத்துக் கொடுக்க
மேலும் கண்டங்கத்தரிச் சாற்றில் கொடுக்க மாலை.
(கழுத்தைச் சுற்றிவரும் வரும் நோய்) அக்கில்
இழைத்துக் கொடுக்க தலைவலியும் தீரும். அக்குநீரை
நசியமும் இடலாம்.

529. இஞ்சி நீரில் இழைத்துக் கொடுக்க செவிவலியும் நெய்யில்
கலந்து புண்களுக்குப் பூச இரணங்களும் புண்களும்
இல்லையாகும். மேற்கூறிய அனைத்து நோய்களும்
செகமோகனரசம் எனும் இக்குளிகையால் தீரும்.
இக்குளிகை காயசித்தியாயும் விளங்கும்

சந்திரகாலரசம் (வாம)

530.
இரசம், கெந்தகம் சுத்தி செய்த தாமிரம் இவற்றைச்
சம அளவு எடுத்து அதேஅளவு காரம் இட்டரைத்துக் கொள்க.
பின் சீதேவி செங்கழுநீர், அறுகம்புல், கற்றாழை,
தாழை, தண்ணீர் விட்டான்

531. மாதுளம்பழம், கோட்டக்கரணை, பற்பாடகம்
முத்தக்காசு இவற்றின் சாறுகளைத் தனித்தனியே
விட்டரைத்துக் கொள்க. பத்தாம் நாள் நிழலில்
உலர்த்திச் சூரணம் செய்து கொள்க.

532. சீந்தில் சர்க்கரை, கடுகுரோகிணி இலாமிச்சம் நன்னாரி, திப்பிலி, இவற்றைச் சம அளவெடுத்துச் சூரணம் செய்து மேற்கூறிய சூரணத்துடன் கலக்க.

533. முந்திரிகைக் குடிநீரில் இச்சூரணத்தை அரைத்து ரசிநாளான பின்பு நாது வளாங்காய் அளவு உருண்டை செய்து கொள்க. அதனைத் தேனில் இழைத்துக் கொடுக்க (கோதியட) நோய்கள் தீரும்.

534. விக்கல், பாண்டு, குருத்துவம், தாபசுரம், அக்கினி மந்தம், மூர்ச்சை, பித்தம், தொந்த இரத்த வாந்தி ஆகிய நோய்கள் 'சந்திரகாலனாமரசம்' எனும் இக் -குளிகையால் குணமாகும்.

திரிமூர்த்தி ரசம்

535. இரசம், கெந்தகம், இரும்பு தாமிரம் மனோசிலை தாளகம், நாகபற்பம், இலிங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, சவட்சாரம், அத்தித் திப்பிலி, திப்பிலிமூலம், பொரி காரம்,

536, இட்சவிதை ஊமத்தை சாதிக்காய், கொடிவேலி சீரகம், சிறுதேக்கு, சிலாசத்து நேர்வாளம், அதி விடையம், வாய்விடங்கம், கிராம்பு, வசம்பு,

537. நிலவேம்பு ஆகிய சரக்குகளைச் சமமாய் எடுத்துக் கொள்க. சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவியம், சித்திரமூலம் ஆகிய ஐந்து வித கோலச் சரக்குகளுடனும் வெற்றிலைச் சாற்றுடனும் கலந்து ஆறு மணி நேரம் மத்தித்து 130 மி.கி அளவுள்ள குளிகைகளாய்ச் செய்து கொள்க.

538. மூங்கிலில் அடைத்துப் புனல் புடத்தில் வைத்து ஆறு மாதம் கழித்து எடுத்துப் பார்க்க வேண்டும். அதனைச் சீரகத்தில் கலந்து கொடுக்க தாபசுரமும்

539. ஆடாதோடைச் சாற்றில் கொடுக்க ஐயசுரமும் இன்மழும் தீரும். [illegible] சாற்றில் கலந்து குடிக்க பதின்மூன்று வகைச் சன்னியும் தீரும்.

540. இலிங்கம் இரண்டு பங்கும் பச்சைநாபி ஒரு பங்கும் கடுகுரோகிணி நான்கு பங்கும் எடுத்துத் தண்ணீரில் அரைத்து 65 மி.கி அளவு மாத்திரைகளாய் உருட்டிக் அதனை நிழலில் உலர்த்திக் கொள்க.

541. பாற்சோறாகிய அனுபானத்தில் கொடுக்க தாபசுரங்கள் ஏழு வகையும் இளமாகும். மூன்று நாளில் சுரமனைத்தும் ஓடிப் போகுமென்று சொல்வர் பெரியோர்.

சஞ்சீவிரசம்

542. இலிங்கம், நாபி இவற்றைச் சமமாக எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து 65 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்க. சஞ்சீவியான இதனைத் தண்ணீரில், சர்க்கரையில், இஞ்சியில் உரைத்துக் கொடுக்க தாபசுரம் தீரும்.

கெச்சாங்கவண்ட ரசம்

543. இரசம், அப்பிரகம், நாபி, கெந்தகம், திப்பிலி இவற்றை வகைக்குச் சம அளவு எடுத்து அதனுடன் அயச்செந்தூரம் நாலு பங்கு சேர்த்து கொடிவேலி இலையின் சாற்றால் அரைத்து வழித்தெடுத்துக் கொள்க.

544. மருந்தினைச் சங்கில் போட்டு மூடிக் கொள்க. மண்பாண்டையில் சங்கினை வைத்து அதன் மேல் மணலினைப் போட்டு மேலே மூடி எருவக்கிப் புடம் வைத்துக் கொள்க.

545. புடம் ஆறிய பின் எடுத்துப் பொடித்துக் கொள்க. கெச்சாங்க வண்ட ரசம் எனும் இம்மருந்தைக் இஞ்சிச் சாற்றில் கலந்து கொடுக்க நச்சுசுரம், சன்னி இவை தீரும்

சங்கேசுர ரசம்

546. இரசம், கெந்தகம், இவை இரண்டையும் சம அளவெடுத்து ஊமத்தைச் சாறு விட்டரைத்துக் கொள்க. பிறகு கொடிவேலிச் சாற்றை விட்டரைத்துச் சங்கில் அடைத்துக் கொள்க. மேற்சொன்னது போல் புடம் வைத்துக் கொள்க. நாபி மட்டும் பாதி அளவாய் எடுத்துக் கொள்க.

547. புடம் வைத்து ஆறிய பின் எடுத்துப் பொடித்துக் கொள்க. பின் அதனை 130 மி.கி அளவுள்ள நெய்யில் கலந்து கொடுக்க வயிற்றுக் கடுப்பு, அதிசாரம், தீரும். சங்கேசுர ரசத்தைத் தேனில் கொடுக்க பல வகை நோய்கள் நீங்கும்.

தாளகேசரம்

548. பொன்னரிதாரம் மூன்று பங்கு, சுண்ணாம்பு நான்கு பங்கு, துருசு ஒரு பங்கும் சேர்த்து கற்றாழைச் சாறு விட்டு அரைத்து உருட்டி மாத்திரைகளாய்ச் செய்து கொள்க.

549. உருட்டி செப்பில் வைத்து அகலினால் மூடிக் கொள்க. வாங்கிச் சீலை மண் செய்து கொள்க. நிழலில் உலர்த்தி பத்து வரட்டியில் புடம் போட்டெடுத்துக் கொள்க. ஆறிய பின் எடுத்துப் பொடித்துச் சர்க்கரையில் கலந்து கொடுக்கவும்.

550. இளிர் காய்ச்சல், மாறல் சுரங்கள் ஆகியவற்றைத் 'தாளகேசரம்' எனும் இம் மருந்தால் தீரும் என்று மந்திரி சொன்னார்.

கண்டபேரண்டரசம்

551. கடுகுரோகிணி நான்கு பங்கும் நாபி ஒரு எடையும் சாதிலிங்கம் 1கி அளவு எடுத்துத் தண்ணீரிலே அரைத்து 130 மி.கி அளவுள்ள உருண்டைகளாய் உருட்டிக் கொள்க.

552. நிழலில் உலர்த்தி எடுத்து இஞ்சிச் சாற்றில் இழைத்துக் கொடுக்க சன்னி, சீதசுரம் இவை தீரும் என்று கூறுவர்.

அமிர்த சஞ்சீவிரசம்

553. கடுகுரோகிணி, நாபி, இரசம், கெந்தகம், சாதிலிங்கம் இவற்றை வகைக்குச் சம அளவெடுத்துக் கரிசாலைச் சாறு விட்டு மூன்று நாட்கள் அரைத்துப் பின், 65 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டிக் கொள்க.

554. இஞ்சிச் சாற்றில் உரைத்துக் கொடுக்க சன்னி சுரம், பதிமூன்று வகை சன்னி தீரும். இம் மருந்திற்கு அமிர்த சஞ்சீவி ரசம் என்று பெயர்.

555. ## அரமாந்திரசம்

அந்த கிரசம், டாங்கணம் ( ), அபின், கரி கெந்தகம், இவற்றை வகைக்குச் சம அளவெடுக்க. கெண்டையின் பித்தில் அரைத்துக் கொள்க. மூன்று நாள் அரைத்து ஊனை தனில் இடவுக.

556. இடவிய அவையை விளக்கில் காட்ட மெழுகு பதமாக வரும் போது அதனைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்க. அதனைக் கிராணி, அதிசார சுரம், தோசம் ஆகிய நோய்களுக்குக் கொடுக்க தீரும்.

சிவமாந்திரி

557. கெந்தகம், மிளகு, பாதரசம், பொரிகாரம் ஆகிய சரக்கு-களைச் சமமாய் எடுத்து கெண்டை மீனின்பித்தில் சேர்த்து மூன்று நாள் அரைத்துக் கொள்க.

558. 130 மி.கி அளவெடுத்து இஞ்சிச் சாற்றில் கலந்து கொடுக்க தாப சுரமும் கடுகு, சித்தரத்தை சேர்ந்த இஞ்சிச் சாற்றில் கொடுக்க சீதவாய்வு, மூர்ச்சையும் குணமாகும்.

559. பொரித்த வெண்காரத்துடன் பொற்றலைக் கையாந்தகரைக் குடிநீரைக் கலந்து அதில் சிவ மாந்திரியைக் கலந்து கொடுக்க நீர் இறங்கும்.

பருத்திக்காய், நெல்லி முள்ளி, எருமைப்பால், எலுமிச்சம் பழச் சாறு, கடுக்காய்ப்பட்டை ஆகியவற்றை ஒன்று சேர்த்தரைத்த சாற்றில்

560. மேற்கூறிய மருந்தைக் கலந்து உண்ண சொறி போகும். பத்திய சோதக்

[illegible]. தில் கொள்ளா. சன்னி ஒழியும்.

சீதமாதங்கசுரரசம்

561. கௌரிப்பாடாணம், அரிதாரம், மடல்துத்தம், சுண்ணாம்பு இவற்றைச் சமமாக எடுத்துக்கொள்க. செருப்படைச் சாறு விட்டரைத்து 130மி.கி அளவு மாத்திரைகளாய் உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்க.

562. வெல்லத்துடன் இக்குளிகையைக்கலந்து கொடுக்க சுரம், சன்னி குணமாகும். இம்மருந்தின் பெயர் சீதமாதங்க சுரரசம் என்பதாகும்.

563. துத்தம் 20கி எடுத்து எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துச் சிமிழில் வைத்துக் கொள்க. 540 மி.கி சர்க்கரையோடு சேர்த்துக் கொடுக்க.

564. சாதிலிங்கத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் ஒருநாள் அரைத்துத் தூளாக்கிக் கொள்க. 130 மி.கி அளவு எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் கலந்து கொடுக்க சுரம் தீரும்.

அசீரணகண்டரசம்

565. இரசம், கெந்தகம், நாபி இவற்றை வகைக்கு இரண்டு பங்கு.

முள்ளிப் பழச்சாற்றில் இருபத்தொரு நாளரைத்து 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய்ச் செய்து கொள்க.

566. இஞ்சி, இந்துப்பு இவற்றின் சாற்றில் இணைத்துக் கொடுக்க சுரம், சூலை, சீரண சுரம் தீரும். சீரணகண்டரசம் உட்கொள்ள செரிப்புத் தன்மை அதிகரித்து பசி உண்டாகும்.

வித்தியாதிரசம்

567. புளித்தோலினைச் சுட்டு சாம்பலை எடுத்து அதனுடன் சங்குபற்பம், சுக்கு, மிளகு, திப்பிலி வெண்காரம், நாபி, அரச மரத்தின் மேல் உளுமைய புல்லுருவி. இவற்றைச் சம அளவு எடுக்க.

அவ்வளவிற்குச் சமபாகம் இஞ்சிச் சாற்றையும் எடுத்து சரக்குகளை அரைத்து உருட்டிக் கொள்க.

568. உருட்டிய மாத்திரைகளை இஞ்சிச் சாற்றில் இழைத்துக் கொடுக்க வாத சன்னி பித்த சுரம் தீரும். வெற்றிலையின் சாற்றில் கொடுக்க சீதசுரம் போகும். திப்பிலி, இந்துப்பு, வெந்நீர்

569. இவற்றை ஒரு சேரக் கலந்து அதில் மாத்திரையை இழைத்துக் கொடுக்க பஞ்ச குன்மம் தீரும் பித்தோடிலைச் சாற்றில் இழைத்துக் கொடுக்க அவாசம் தீரும். வித்தியார்த்த ரசத்தினால் நோய்கள் போகும் என்று தன்வந்திரி யுரைத்தார்.

சீதபாஞ்சின ரசம்

570. சாதிலிங்கம், சுண்ணாம்பு, துருசு, பாஷாணம் அரிதாரம் இவற்றை வகைக்குச் சம அளவெடுக்க. அதனைக் கற்றாழைப் பாலில் ஊற வைத்து 32 மி.கி அளவு உருண்டைகளாய்ச் செய்து கொள்க.

571. உருண்டைகளைத் துளசிச் சாற்றில் இழைத்துக் கொடுக்க விடசீத சுரம், ஒன்றாம் மாறல், இரண்டாம் மாறல், மூன்றாம் மாறல் நான்காம் மாறல், ஆகிய பல்வகைச் சுரங்களும் சீதபாஞ்சின சுரத்தால் தீரும்.

ராமபாண ரசம்

572. அரிதாரம், கெந்தகம், மனோசிலை, சாதிலிங்கம்
துருசு, நிர்விசம், துத்தம், இரசம், சுக்கு, மிளகு
திப்பிலி, கடுகுரோகிணி, அப்பிரகம், பொரிகாரம்
இன்றி, மஞ்சள்

573. கௌரி, பச்சைநாபி, ஆகிய சரக்குகளைச்
சமனாய் எடுத்து இஞ்சிச் சாறு வார்த்தரைத்து
ஆடாதோடை இலைச்சாற்றில் அரைத்து
மிளகளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து
நிழலில் உலர்த்திக் கொள்க.

574. அதனைத் தக்க அநுபானத்தில் இழைத்துக் கொடுக்க
தோசம், வாதசுரம், சன்னிசுரம், தாபசுரம், சீதசுரம்,
பித்தசுரம், சயம், இன்மம் ஆகிய நோய்கள் தீரும்.

மார்த்தாண்டரசம்

575. இரசம், நாபி, சாதிலிங்கம் 5கி, நேர்வாளம் 10கி, 30கி
10கி, ஆகிய சரக்குகளை எலுமிச்சம் பழச் சாற்றில்
அரைத்துக் கொள்க.

576. அரைத்த விழுதினை 130 மி.கி அளவுள்ள மாத்திரை
-களாய் உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்க.
அதனைத் தக்க அநுபானத்தில் கலந்து கொடுக்க
அனித்த சுரம் தீரும்.

உதைய மார்த்தாண்ட ரசம்

577\. இலிங்கம் 4 பங்கு, மூன்று பங்கு, சிவபாக்கி, திருநாவி ஆகிய சரக்குகளை எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து உருட்டி 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாக்கிக் கொள்க.

578\. தக்க அனுபானங்களுடன் கொடுக்க திரிதோடம், சூலை, குன்மம், மந்தாக்கினி, சுரம், ஆகிய நோய்கள் தீரும். உதைய மார்த்தாண்ட ரசம் எனும் இம் மாத்திரையால் மேற்கண்ட நோய்கள் நீங்கும் என்று தன்வந்திரியார் கூறியுள்ளார்.

சபதீசக்கிரசம்

579\. இரசம், கெந்தகம், வாளம், திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, ஏலம், கடுகு, இலவங்கப்பத்திரி, இலிங்கம், ரேணுகம், கோரைக்கிழங்கு

580\. அயத்தாம்பிரபற்பம் ஆகிய வற்றை வகைக்குச் சம அளவு எடுக்க. அவ்வளவே வெல்லத்தை எடுத்துத் தண்ணீரில் போட்டு கரைத்து எரித்துக் கொள்க. அப்பாகினை விட்டு மேற்சொன்ன சரக்கினை அரைத்துக் கொள்க.

581. அரைத்த விழுதினை, 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டிக் கொள்க. அதனைத் தக்க அநுபானத்துடன் வழங்க சன்னி, இன்மம், சூலை, சுரம், சீதசுரம், தாபசுரம், சீரண சுரம், பித்தம் ஆகியவை தீரும்.

582. பலவகை வாய்வுகள், தக்க அநுபானத்தில் கொடுக்க குணமாகும். சபாசக்கிரரசமாகிய இம்மருந்தின் பண்பு இதென்று தன்வந்திரி கூறியுள்ளார்.

சிங்கநாதரசம்

583. இரசம், கெந்தகம், ~~[illegible]~~ இவை இரண்டையும் சமமாக எடுத்து கண்டங்கத்திரி, அரசு, காஞ்சிரம் ஆகிய இவற்றின் இலைச்சாற்றினால் தனித்தனியே ~~[illegible]~~ அரைத்து 130 மி.கி அளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து கொள்க.

584. உலர்ந்த மாவு, இந்துப்பு, சீரகம், விளக்கெண்ணெய் ஆகியவற்றை அநுபானமாய்க் கொண்டு சிங்கநாதரச உருண்டையை இழைத்துக் கொடுக்க சுரம், மாறல்சுரம், ஆகியவை தீரும்.

நீலகண்டரசம்

585. இரசம், கெந்தகம், இலவங்கப்பத்திரி, நாபி, ரேணுகம், நெல்லிமுள்ளி, வாய்விடங்கம், நேர்வாளம் ஆகிய சரக்குகளைச் சமமாக எடுத்துக் கொள்க.

586. இழிக்கல்லில் சரக்குகளைப் போட்டு தூளாக்கிக் கொள்க. கரிசாலைச் சாறு வார்த்தரைத்து கடலை அளவுள்ள உருண்டைகளாய் உருட்டிக் கொள்க. அதனைத் தேனில் இழைத்துக் கொடுக்க சுவாச காசம் தீரும்.

587. சூரணத்தில், அசுவகந்தி வேர்ப் பொடியில் உருண்டையை இழைத்துக் கொடுக்க சயம், காசம், தீரும். மரகதம் கலந்த வெந்நீரில் உரைத்துக் கொடுக்க இன்மமும் மேகமும் தீரும்.

588. எள்ளு, சீரகக் குடிநீரில் மாத்திரையை இழைத்துக் கொடுக்க அனைத்து வகை சுரமும் கன்னிப்பால், நெல்லிமுள்ளி, தான்றி கலந்த குடிநீரில் கொள்ள மகோதரமும் குணமாகும்.

589. தேனில் கலக்க அதிசாரசன்னியும் பஞ்சகோதத்தில் கொடுக்க வாந்தியும் ஆவாரை விதைத் தூளில் கலக்க இரீச்சரமும் தீரும்.

590. பசுவின் கொடுக்க அதிசபாகம் தீரும், மோரில் கலந்து கொடுக்க பல வகை இருமல் தீரும்.

591. காலாக்கினி உருத்திரரசம்

இரசம், கெந்தகம், சுக்கு, மிளகு, திப்பிலி கொடிவேலி, சீரகம், சத்திச்சாரம், எவட்சாரம் இந்துப்பு, வாய்விடங்கம் ஆகிய வற்றைச் சுத்தி செய்து வகைக்குச் சம அளவெடுக்க.

592. எட்டி விதையை மேற்சொன்ன அளவிற்குப் பாதி எடுத்துச் சம அளவு எலுமிச்சம் பழச்சாறு ஊற்றி அரைத்து 130 மி.கி அளவு உருண்டைகளாய்ச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்க. தக்க அனுபானங்களில் கலந்து கொடுக்க நோய்கள் தீரும்.

593. இராணி, பலவகை ஆகிய பலவகைநோய்கள் காலாக்கினி ருத்திர ரசத்தினால் தீரும் என்று சித்தர்கள் உரைத்தனர்.

பூனாதிரசம்

594. இலிங்கம் பெருங்காயம், நரண்டம் எனும் ஆமணக்கு கொடிவேலி ஆகியவற்றை வகைக்கு 10கி எடுத்துக் கொள்க. கெந்தகம் 20கி, 5கி வெண்காரம் எடுத்துக் கொள்க.

595. கொள்ளுப் பொடி 15கி, கோழிமுட்டையோடு 10கி எடுத்துப் பாகலிலைச் சாற்றில் அரைத்துச் சுண்டைக்காயளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து கொள்க.

596. நொச்சிச்சாறு, இஞ்சிச்சாறு, சுக்குநீர் இவற்றை அனுபானமாய்க் கொண்டு இழைத்துக் கொடுக்க சன்னிவாதம் தீரும். பூனாதி ரசம் என்னும் இதனால் இதீரும் இந்நோய் என்று தன்வந்திரி அறிவுள்ளார்.

நாரசிங்கரசம் (னா)

597. நாபி, வாளம், சூதம், கெந்தகம், ஆகிய சரக்குகளைப் பொடித்து 130 மி.கி எடுத்து வெந்நீரில் கலந்து கொடுக்க சுரங்கள் போகும்.

ஆபத்தாரணரசம்

598. இரசம், கெந்தகம், மனோசிலை, சாதிலிங்கம் அதிமதுரம் பூநாகம், வாளம், சுக்கு, மிளகு, திப்பிலி, சிங்கி எனும் கர்கடகசிங்கி, கோரோசினை, சிறுதேக்கு, விலாமிச்சம் வேர், முசுறு முட்டை, செம்பிளிச்சை வேர், வேலி

599. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஆகியவற்றைச் சமமாய் எடுத்துக் கொள்க. குழிக்கல்லில் சரக்குகளைப் போட்டு இளநீர் விட்டரைத்து 130 மி.கி அளவாய் உருட்டிக் கொள்க.

600. தாய்ப்பாலில் மேற்குறிப்பிட்ட குளிகையை இழைத்துக் கொடுக்க பித்தசுரம் தீரும். ~~[illegible]~~ இஞ்சிச் சாறு சேர்த்து திப்பிலியுடன் குளிகையை இழைத்துக் கொடுக்க வாதசுரம் குணமாகும். ஏனைய சுரங்கள் மற்ற சுரங்கள் தீரும்.

601. திப்பிலி, இஞ்சிச்சாறு தாய்ப்பால் சேர்த்து அதில் பூநாகத்தைப் போட்டு கோரோசினையையும் கலந்து கொள்க. இதில் ஆபத்தாரண ரச குளிகையை இழைத்துக் கொடுக்க தோசசுரம் தீரும்.

அமிர்த நாராயண ரசம்

602. செங்கழுநீர், நெய்தல், தாமரைக்கிழங்கு, பிச்சி, செண்பகப்பூ, இருவாட்சி, இருவேலி, இலாமிச்சை, புனுகு, கஸ்தூரி,

603. இருப்பைப்பூ, சாதிபத்திரி, சீரகம், நாபி, இலவங்கம், முந்திரிகை, பேரீச்சு, மிளகு, சுக்கு, கோரோசனை, இராம்பு, சீதேவி செங்கழுநீர்,

604. மதுரம், கோட்டம், குங்குமப்பூ, கொத்துமல்லி, மான் கொம்பு, ஆகிய சரக்குகளை சமமாய் எடுத்துக் கொள்க. ~~இதனை~~ அவற்றை இளநீர் விட்டரைத்து 130 மி.கி அளவுள்ள உருண்டைகளாய் உருட்டிக் கொள்க.

605. தாய்ப்பாலில், இஞ்சிச்சாற்றில் இழைத்துக் கொடுக்க சுரமனைத்தும் தீரும். இம்மாத்திரையின் பெயர் அமிர்த நாராயணன் என்று சித்தர் உரைத்தனர்.

அமிர்தக் குளிகை

606. இரசம், கெந்தகம், சிவபானக்கி, நாபி, அரிதாரம், இஞ்சிச்சாறு, அக்கிராகாரம், சுக்கு, மிளகு, திப்பிலி, மரமஞ்சள், வட்டத்திருப்பி, அதிவிடையம், கண்டங்காலி, வில்வவேர்

607. முருங்கை, கோரைக்கிழங்கு ஆகியசரக்குகளைச் சமமாய் எடுத்துக் கொள்க. நேர்வாளம் பத்து பருப்புகளையும் எடுத்து சாற்றில் பிசறி கரிசாலை, இஞ்சி சாற்றில் ஊற வைத்துக் கொள்க.

608. மூன்று மணி நேரமாக ஏழு நாட்கள் அரைத்துக் கொள்க. முருங்கைப் பட்டைச் சாற்றில் மூன்று நாள் அரைத்து மிளகளவு உருண்டைகளாய் உருட்டிக் கொள்க. அதனை மோரில் கலந்து கொள்ள பேதி நிற்கும். மலம் கட்டும்.

609. பாதிரித் தோலுடன் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றைச் சேர்த்து அதில் இளிகையை இழைத்துக் கொடுக்க கிராணி தீரும். நெல்லிக்காய்ச் சாற்றில் இளிகையை உரைத்துக் கொடுக்க விக்கல் நீங்கும்.

610. வெந்நீரில் கலந்து கொடுக்க விக்கலும் இசிவிலிட சன்னிகளும். பாம்பின் கால், அண்டம், பித்த நீரில் இளிகையை கரைத்து நசியமாகக் கொண்டும் அஞ்சனமாகவும் வைத்துக் கொண்டால் பாம்பின் விஷம் இறங்கி விடும்.

611. எருமைச் சாணி நீரில் அரசிலைச்சாற்றில், [illegible] நீர்முள்ளிச் சாற்றில், நெய்யில் மேற்சொன்ன குளிகையை உரைத்துக் கலந்து கொடுக்க பாம்பு விஷம் இறங்கும். இரத்தமுள்ள வாயுக்கள் நீங்கும்.

612. குளிர் மாறல் சுரம்* நாலாம் சீதசுரம், தியவாயுக் முதல்வகை -களாலான தோஷ சுரம், வாத சூலை, என்பது வகை நஞ்சுகள் ஆகிய நோய்கள் அமிர்தக் குளிகை எனும் இம்மருந்தால் தீரும்.

கற்பூராதிக் குளிகை

613. கற்பூரம், சௌபாக்கி இவற்றை வகைக்கு இரண்டு பங்கும், அபினி நான்கெடையும் எடுத்து கொங்கிலவம் பஞ்சில் அரைத்து மிளகளவு உருண்டை -களாய் உருட்டிக் கொள்க.

614. மாங்காயினுள் உள்ள பருப்பும், பைம்புளி விதையின் தோலையும் சுட்டெடுத்த சாம்பல், சுக்குப்பொடி இவற்றைச் சேர்த்து அனுபானமாய்க் கொண்டு அதில் குளிகையை இழைத்துக் கொடுக்க கிராணி தீரும்.

வயிரவன்

615\. தன்வந்திரி உரைத்த மருந்து முறைகளை வேதத்தில் கூறியிருப்பவற்றை மருந்தின் விதி முறைப்படி உபயோகிக்க அட்ட வயிரவன் துணை செய்வானாக.

அட்ட வயிரவர்பேர்

616\. அட்ட வயிரவர்க்கு ஆதி வயிரவர், ஆனந்தர், புரசோற் சானந்தர், சிங்கார வித்தன், சாம்பவர் என்ற பெயர்கள் உள்ளன.

617\. இரசம், கெந்தகம், நாபி, அரத்தை, கொள்ளு, [illegible], கோரைக்கிழங்கு, ஏலம், விழலரிசி, இலவங்கத்தோல், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்

618\. சிறுமூலம் ஆகிய சரக்குகளை வகைக்குச் சமமாய் எடுத்துக் கொள்க. அவ்வளவு பனைவெல்லத்தைத் தண்ணீரில் கலந்து அதில் அரைத்து அவ் விழுதினைத் துடரிப்பழம் போல் உருட்டித் தக்க அநுபானத்தில் கொடுக்க.

619\. கிராணி சுரம், பிரமேகம், இன்மம், அதிசாரம் மகோதரம், வாத விசசுரம், அக்கினி மந்தம், ஆகிய நோய்கள் ஆதிவயிரவன் எனும் மருந்தால் தீரும்.

ஆனந்தவயிரவன்

620. அரிதாரம், சாதிலிங்கம், கெந்தி, நாபி, மனோசிலை
சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், துத்தம், பொரிகாரம்,
இவற்றை வகைக்குச் சம அளவெடுக்க. எலுமிச்சம்
பழச்சாற்றில் அரைத்துக் கொள்க.

621. பன்னிரெண்டு மணிநேரம் அரைத்து 130 மி.கி அளவுள்ள
மாத்திரைகளாய் உருட்டி நிழலில் உலர்த்தித் தக்க
அனுபானங்களில் வழங்க தாபசுரம், சீதசுரம்,
சாரசுரம், சன்னி, வயிற்றுச் சூலை தீரும்.

622. கெர்ப்பசூலை, நீரிழிவு, கிரீச்சுரம், நீர்
எரிப்பு, மூர்ச்சையாதல், பிரமேகம், தேள்விடம்
ஆகிய நோய்கள் ஆனந்த வயிரவனால் குணமாகும்.

திரிபுர வயிரவன்

623. அரிதாரம், சாதிலிங்கம், கெந்தகம், வாளம், துருசு,
துத்தம், இரதம், பொரிகாரம், இருவி, கோரோசனை,
நாபி இவற்றை வகைக்குச் சம அளவெடுக்க.

624. அப்பிரகத்தையும் சேர்த்து மேற்கூறிய சரக்குகளை
உமத்தைச் சாற்றில் ஒரு நாள் அரைத்து
மறுநாள் காலையில் பாகலிலைச் சாற்றில் அரைத்து
உருண்டை செய்து கடுகு போல் உருட்டிக் கொள்க.

625. கொத்துமல்லி, தண்டுலம் எனும் (
கோதம் எனும் சீதாங்க பாடாணம் இவை
சேர்ந்த அநுபானத்தில் குளிகையை இழைத்துக்
கொடுக்க சீதசுரம் தீரும். பாலில் கொள்ள
தாபசுரம் குணமாகும். இக்குளிகையின் பெயர்
திரிபுர வயிரவன் என்பதாகும்.

சொச்சானந்த வயிரவன்

626. இரசம், மிளகு, கெந்தகம், நேர்வாளம்
சுவுபாக்கி இவற்றைச் சம அளவெடுத்து வெற்றிலைச்
சாறு ஊற்றி அரைத்து மூன்று புடங்களில் வைக்க.

627. கற்றாழைப் பால் விட்டு அரைத்து இருகினை
130 மி.கி அளவுள்ள உருண்டைகளாய் உருட்டிக்
கொள்க. அதனைத் தண்ணீரில் இழைத்துக்
கொடுக்க சுரம் தீரும்.

மதனவயிரவம்

628. பாதரசம், கெந்தகம், மனோசிலை,
மிளகு, நீர்முள்ளி, பொன்னாங்காணியிலைச்சாற்றைச் சரக்குடன்
சேர்த்தரைத்து உருண்டை செய்து நிழலில்
உலர்த்தி வச்சிர மூசையிலுள் போட்டு வாய்க்குச்
சீலை மண் செய்து கொள்க.

629. ஐம்பது மணி நேரம் அரைத்து வாலுகையில் இட்டு தீயை ஆற்றிக் கொள்க. பின் மீண்டும் பசுவின் பித்தைச் சேர்த்தரைத்து கடலை அளவுள்ள உண்டைகளாய்ச் செய்து கொள்க.

630. இளநீரை அனுபானமாய்க் கொண்டு கொடுக்க சித்தப்பிரமை தீரும். ரசகற்பூரம் நாக இரத்தத்தையும் சேர்த்து நீரில் கலந்து கடுமையான சன்னிசுரம் குணமாகும்.

மனோபவபைரவன்

631. இரசம், இந்துப்பு, கல்லுப்பு, கறியுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, சீனக்காரம், சுல்பம் எனும் செம்பு, சத்திச்சாரம், எவட்சாரம், ஆகிய சரக்குகளைச் சமனெடுத்துக் கொள்க. கோதம் எனும் சீதாங்க பாடாணத்தைப் போட்டு மூன்று நாட்கள் அரைத்து உருட்டி வச்சிரக் குகையினுள் வைத்துக் கொள்க.

632. குகையின் வாய்க்குச் சீலை மண் செய்து வாலுகா இயந்திரத்தில் வைத்து பன்னிரெண்டு மணிநேரம் எரித்து ஆறிய பின் எடுத்துக் கொள்க. அதனை ஆண் கழுதையின் பித்தில் அரைத்து 65 மி.கி அளவு மாத்திரை செய்து தக்க அனுபானத்தில் கொடுக்க சன்னி தீரும்.

சிங்கார வயிரவன்

633. மிளகளவு நாபி, லிங்கம் இவற்றைச் சமனாய் எடுத்து காரம் எனும் பொரிகாரத்தை இரண்டு பங்கு எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து 65 மி.கி அளவுள்ள உருண்டைகளாய் உருட்டிக் கொள்க. தக்க அநுபானத்தில் கொடுக்க் கொள்க.

634. ஆடாதோடை, இஞ்சிச் சாற்றில் கொடுக்க சுரம் தீரும். இழைத்துக் கொடுக்க விம்மிக் கொண்டிருக்கும் வயிற்றுப் பொருமல் வாய்வு குணமாகும்.

635. வெங்காயச் சாற்றில் உரைத்துக் கொடுக்க விசசுரமும் நீங்கும். 'சிங்கார வயிரவன்' எனும் பெயருடைய இக்குளிகை மேற்கண்ட நோய்களைத் தீர்க்கும் என்று சித்தர்கள் கூறியுள்ளனர்.

சிங்கார வயிரவன்

636. நேர்வாளம் ஒரு பங்கு, ஆறு பங்கு கெந்தகம், அதே அளவு ஊமத்தை விதை, நாபி எட்டு பங்கு துத்தம், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு மூன்று பங்கு எடுத்து கொடிவேலி சாற்றில் மூன்றுநாள் அரைத்துக் கொள்க.

637. அரைத்த விழுதினை 65மி.கி அளவுள்ள மாத்திரை -களாய் உருட்டிக் கொள்க. அதனைத் தாய்ப்பாலில் கலந்து கொடுக்க சுரதாபம் தீரும். சங்கார வயிரவர்க்குப் பத்தியம் பயற்றங் கஞ்சியாகும்.

638. பாதாஞ்சினம்

சத்திச்சாரம், வெடீசாரம், வகைக்குச்சம அளவெடுக்க. பஞ்சகேரத்தில் ஒரு நாளரைத்து மூன்று மணி நேரம் எரித்து எடுத்துக் கொள்க. பின் அதனைச் சேவல் பித்தில் அரைத்துக் கொள்க.

639. 65மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டி தேனில் இழைத்துக் கொடுக்க உருத்திரீக சன்னி தீரும்.

640. இரசம், கெந்தகம், மனோசிலை, நாபி, தாமிரம், இலிங்கம், வெண்காரம் ஆகிய சரக்குகளைச்சமமாய் எடுத்து இஞ்சி, கொடுவேலி, எலுமிச்சஞ்சாறு ஆகிய வற்றில் தனித்தனியே ஒவ்வொன்றால் அரைத்துக் கலந்து கொள்க.

641. மூன்று நாட்கள் இவ்வாறு அரைத்து 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டி தக்க அனுபானத்தில் கலந்து கொடுக்க உதிர வியாதி, திரிதோடம், அதிசாரம், விஷபாண்டு, ஆகிய நோய்கள் தீரும்.

642. நாவி, இலிங்கம், வசம்பு, மிளகு இவற்றைச் சம (ஒரு பங்கு) அளவெடுக்க. கெந்தகம், இரசம் இரண்டு பங்கு, சுக்கு எட்டு பங்கு, நாபி ஒரு பங்கு எடுத்துக் கொள்க. அளவுகளின் மொத்த எடைக்குச் சமமாக கருஞ்சீரகத்தை எடுத்துக் கொள்க.

643. கரந்தை சுட்ட ஆம்பல், கருஞ்சீரகச்சாறு ஆகிய இவை இரண்டின் சாற்றில் மேற்கூறப்பட்ட சரக்கு -களை அரைத்துக் கொள்க. இவ்வாறு எழுபத்திரண்டு மணிநேரம் அரைத்து நெய்ச்சிட்டினை -யும் சேர்த்துக் கொள்க.

644. கல்வையைக் களிப்பதமாய் கிண்டி இறக்கி சினிகை யளவாய் உருண்டை செய்து கொள்க. ~~அதனைக்~~ கொடிவேலித்தூள், இந்துப்புடன் இஞ்சிச் சாற்றையும் சேர்த்து கல்வையில் மாத்திரை -யைக் கலந்து கொடுக்க பதிமூன்று வகை சன்னி குணமாகும்.

645. பல்வகை வாய்வுகள், ஐயம், குட்டம், சன்னி வாதரசம், ஆகிய நோய்கள் தீர்ந்து வீரிய விருத்தியையும் இம்மருந்து உண்டாக்கும்.

சன்னிபாதசிரோமணிரசம்

646. இரசம் ஒரு பங்கும் மிளகு கெந்தி இவை இரண்டு பங்கும் சுக்கு, கோரைக்கிழங்கு இவற்றை மூன்று பங்கும் நேர்வாளம் எட்டு பங்கும் எடுத்துக் கொள்க. இவற்றைத் தண்ணீரில் மை போல அரைத்துக் கொள்க.

647. சர்க்கரையில், வாழைப்பழத்தில், தண்ணீரில் சேர்த்து உட்கொள்ள குன்மம், பெருவயிறு, இரத்தப் பிரமேகம், வயிற்றுக் குலை, பவுத்திரம் ஆகிய நோய்கள் குணமாகும். சன்னிபாத சிரோண்மணியை உட்கொள்ள கழிச்சலாகும்.

சன்னிபாதமகாசிரோமணிரசம்

648. நாபி, மாட்சிகம் என்னும் ,முருகு தாம்ரம், கொன்னைப் பழத்தின் சதை, சூதம், இவற்றை வகைக்கு 1கி எடுத்துக் கொள்க.
கெந்தகம் இவற்றை எட்டு பங்காக எடுக்க.

649. கரிசாலை எலுமிச்சம்பழச்சாறு விட்டு தனித்தனியாக மூன்று நாள் அரைத்து ~~உளுந்தள~~ 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டி வெற்றிலைச் சாற்றில் இழைத்துக் கொடுக்க.

650. நடுக்கல், அதுபித்தம், மூர்ச்சை, பதிமூன்று வகைச் சன்னி. ஆகிய நோய்கள் சன்னி பாத மகா சிரோமணியால் தீரும் என்று தன்வந்திரி யுரைத்தார்.

651. ## கோடா சூழிக் குளிகை.

இரதம், சுல்பம் எனும் அரிதாரம், மனோசிலை கிருமி நிர்விசம், அக்காரம், கெந்தகம், சாதிலிங்கம், நாபி, வேப்பம்பட்டை, கிலை, கழற்கொடி வேர்,

652. சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெண்காரம் இவற்றை வகைக்குச் சம அளவெடுக்க. சரக்குகளைக் கல்வில் போட்டு கரிச்சாறு விட்டரைக்க.

653. அரைத்த விழுதினை நிழலில் உலர்த்தி மோரில் கலந்துக் கொடுக்க கிராணி தீரும். எலுமிச்சம் பழச் சாற்றில் உரைத்துக் கொடுக்க வயிற்று வலி.

654. கழிச்சல், வலி குன்மம், தாபசுரம், சுரம், கல்லெரிப்பு, சூலை வெள்ளைப் பிரமேகம், மேல்சுவாசம் காசம், விசம், நீர்க்கடுப்பு,

655. தலைகழுவாதம், தாகவெப்பு பலவகை உட்புண் வாய்வு ஆகிய நோய்கள் தீரும். தேனில் கலந்து கொடுக்க உடல் வன்மை பெறும். உடலிலுள்ள கடுப்பு தீரும். உழலை, வாய்வு இவை தீரும்.

656. இரத்தி, சன்னிவாதம், வாதபித்தம் ஆகிய நோய்கள் கோடாசூரி எனும் பெயர் கொண்ட மாத்திரையால் தீரும் என்று தன்வந்திரி யுரைத்தார்.

அர்ச்சுன கோடாசூரி

657. இரதம், சாதிலிங்கம், காரம் எனும் அக்கராகாரம் கெந்தி இரசம், சுக்கு, மிளகு, திப்பிலி நாபி, கிருமி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், துத்தம், கௌரி, வெள்ளைப்பாடாணம், அன்னபேதி கடுகுரோகிணி.

658. சுவுபாக்கி ஆகிய சரக்குகளைச் சமனாய் எடுத்துக் கொள்க. அதற்குச் சமமாய் நேர்வாளத்தை எடுத்துக் கொள்க. அனைத்துச் சரக்குகளையும் நொச்சிச் சாற்றில் மூன்று நாளும் தும்பைச் சாற்றில் மூன்று நாளும் பாரிலை நீரில் மூன்று நாளும் கரிசாலைச் சாற்றில் பத்து நாளும் அரைத்துக் கொள்க.

658. அரைத்த விழுதினை உருண்டைகளாய்ச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்க. அதனை குழிசில் அடைத்துப் பின் தக்க அநுபானங்களில் கலந்து கொண்டால் நோய்கள் போகும்.

659. (பேர்ந்த) சுரம், சீதசுரம், இருமல், மாறல் சுரம், சன்னி பாத பயித்திய சுரம், பெண்களின் கால், வயறு எரிவு, காமாலை, நீர்க்கட்டு, பித்த உஷ்ணம் ஆகிய பிணிகள் தீரும்.

660. பித்தம், விஷம், செரியாமை, சோகை ஆகிய நோய்கள் ~~[illegible]~~ அர்ச்சனக் கோடாசுழிக் குளிகையால் தீரும் என்றுரைத்தார் சித்த வைத்தியர்.

<u>சுராங்கிசம்</u>

661 இரசம், கெந்தகம், கடுக்காய், சிவதை ஆகியவற்றை வகைக்குச் சம அளவு எடுக்க. நேர்வாளம் 20 கி காந்தம், ~~[illegible]~~ கடுகுரோகிணி வகைக்கு 20 கி எடுக்க.

662. மேற்கூறப்பட்ட சரக்குகளைக் கற்றாழைச் சாறு ஊட்டு நன்கு இடித்து அரைத்து 32 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்க. இஞ்சிச் சாற்றில் இழைத்துக் கொடுக்க வாதசுரமும் தாய்ப்பாலில் கடுகுரோகிணியைக் கலந்து அதில் மாத்திரையைக் கலந்து கொடுக்க பித்தசுரமும்

663. வாகைச் சாற்றில் கலந்து கொடுக்க ஐய சுரமும் தீரும். சுராங்குசத்தைக் கலந்து கொடுக்க பலவகை சுரமும் தீரும்.

சருவசுராங்குசம்

664. இரசம், கெந்தகம், நாபி, சாதிலிங்கம் சுக்கு, மிளகு திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சீரகம் இவற்றை வகைக்குச் சம அளவெடுக்க. கரிசாலைச் சாற்றில் அரைத்து 130 மி.கி. அளவுள்ள உருண்டைகளாய் உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்க.

665. இவ்விகையைத் தக்க அனுபானங்களில் சேர்த்துக் கொடுக்க சுரம் இன்மம், குணமாகும். 'சருவ சுராங்குசம்' என்னும் மருந்தினை உட்கொள்ள மலம் அதிகமாக கழிக்கும் என்று மந்திரி உரைத்தார்.

666. மேற்சொன்ன குளிகையைத் தக்க அநுபானத்தில் கொடுக்க இன்மம் தீறை, மேலம், மூவகை நாடியிலுள்ள சுரம், சீத சுரம், உள்சுரம் ஆகிய நோய்கள் இணமாகும்.

பேதி சுராங்குசி ரசம்

667. நாபி 5கி, வெண்காரம் கெந்தகம் மகி நேர்வாளம் 75கி எடுத்து கற்றாழைச் சாறு விட்டு நன்கு அரைத்துக் கொள்க.

668. அரைத்த விழுதினை 65 மி.கி அளவுள்ள மாத்திரை -களாய் உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்க. இஞ்சிச் சாற்றில் குளிகையை உரைத்துக்கொடுக்க ஐந்து முறை கழிச்சலாகும். பின் மலம் கட்டும். சுரமும் நிற்கும்.

669. ஒன்றாம் மாறல், இரண்டாம் மாறல், மூன்றாம் மாறல், நான்காம் மாறல், சுரங்கள், தோசசுரம் ஆகிய சுரங்கள் குணமாகும் பேதி சுராங்குசிரசம் எனும் இம்மருந்தால் என்று சித்தர்கள் உரைத்தனர்.

மேகநாத ரசம்

670. சவுபாக்கி, சிவதை வேர்ப் பொடி இந்துப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, ஆகியவற்றைச் சம அளவெடுக்க.

அவ்வெடைக்குச் சம அளவு நேர்வாளத்தை எடுத்துக் கொள்க.

671. *வண்ணம்பதி* சாற்றில் மேற்குறிப்பிட்ட சரக்குகளை அரைத்து 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டி நிழலில் உலர்த்தி வெந்நீரிலிட்டு உரைத்துக் கொடுக்க கழிச்சலாகும். தோசம், பாண்டு, செரியாமை குணமாகி மலமும் கட்டும்.

672. கிருமி, திணவு, பல நோய்கள் இம்மருந்தால் தீரும்.

மகாகலிங்காதி ரசம்

673. இரசம், கெந்தகம், பெருங்காயம், சாதிக்காய், கழற்சிக்காய், கடுகு, நேர்வாளம், அக்கு, மிளகு, திப்பிலி, இங்கிலியம், சிறுதேக்கு, சினக்காரம், வசம்பு

674. நவச்சாரம், கோட்டம், சேங்கொட்டை, புங்கு, ~~ஆகிய சரக்குகளை~~ *கோரோரசம்* ~~உலர்த்தி அரை~~ எடுத்துக் கொள்க. அரைப்பதற்கான மருந்துச் சரக்குகள் சொல்லப்படும்.

675. எருக்கு, வேம்பு, ஆடாதோடை, சிறுதனை, காஞ்சினம், நாயுருவி, புரசு, ஆகிய சரக்குகளைத் தூவி தண்ணீர் வார்த்துப் பிசைந்து சக்கையை

676. எடுத்து தெளிவினை இறுத்து அச்சாற்றை எரித்தால் திரண்டு உப்பாய் நிற்கும். மேற் சொன்ன மருந்தினை இரண்டு பங்கு எடுத்து குப்பியில் போட்டு அரைத்துக் கொள்க.

677. கொம்மட்டிச்சாறு 1.3லி கள்ளிப்பால் 375 மி.லி விளக்கெண்ணெய் 375 மி.லி வெள்ளெள்ளிச் சாறு 375 மி.லி, பெய்த்தும்மட்டிச்சாறு எடுத்து சீரத்தில் ஊற்றி பாதியாக வற்றும் அளவுக்கு எரித்துக் கொள்க.

678. நன்றாக கொதித்துவிட்டு மருந்தை நன்கு கலக்கி விட்டுப் பிறகு மெழுகுபதமாய் உள்ள மருந்தை, வேதியமாய் திரண்டிருப்பதை எடுத்து வைத்துக் கொள்க இனிகைகளாக திரட்டிக் கொள்க அதிக அதுபானத்தை எடுத்துக் கொள்க.

679. வெல்லப்பாகில், புளி நீரில் இனிகையைக் கலந்து கொடுக்க சூலை, சோகை தீரும். மகாவிஷ்காதி ரசத்தை எனும் மருந்தைக் கொடுக்ககிற்நோய் தீரும் என்பர்.

680. இரத்தத்தின் அளவு அதிகமாகிா வேகமாகி வெறுபட்டால் அதைக் குறைக்க சிறுகீரை, பொன்னாங்காணி சிறுபயறு உண்ணலாம்.

681. பூராங் கொழுந்தை மாங்கிசியினோட அரைத்து இரத்தம் அதிகமாகாது. பாலில் கருவேப்பிலை யையும் நாரத்தங்காயையும் சேர்த்து மத்தித்து பாக்களவு உட்கொள்ள கொட்டும் இரத்தம் குறையும்.

திரைரத்தசூரரசம்

682. மிளகு 35கி., அக்கிராகாரம் காட்டாமணக்கு ஆறு பங்கு, கெந்தகம் இரண்டு பங்கு, அக்கு, மனோசிலை எடுத்து கள்ளிச்சாறு ஊற்றி நன்கு அரைத்து 130 மி.கி அளவு உருண்டைகளாய்ச் செய்து கொள்க.

683. இதின் இக்குளிகையை வெற்றிலையில் வைத்துக் கொடுத்துப் பிறகு வெந்நீரைக் குடிக்க சுரம் தீரும்.

684. கழிச்சல் கல்வாய் இருக்கும் வயறு போன்றவை திரைத்த அரரசத்தைக் கொள்ள குணமாகும்.

அமரோகிணிக் குளிகை

685. இரதம், வெண்காரம், கெந்தகம், இவற்றை வகைக்கு 5கி எடுக்க. வாளம் 35கி எடுத்துச் சூரணித்துக் கொள்க. இளநீரில் கலந்து எரித்து மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்க.

686. அதனை 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டிக் கொள்க. அதனை உட்கொள்ள வயிறு கழியும். மோர் சாதம் சாப்பிட வயிறு கட்டும்.

687. லோகத்தாரணரசம்

பொரிகாரம், ஆமணக்கு, ஆமணக்கு விதை, நேர்வாளம், கொன்னை, வேலிப்பருத்தி விதை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பூவரசம் பூ, தாமரை, கிரசம், சிவதை, கெந்தகம், ஆகிய சரக்குகளைச் சமமாய் எடுத்துக் கொள்க.

688. கள்ளிப்பாலைச் சேர்த்து மேற்கூறிய சரக்குகளை நன்கரைத்து மூன்று நாட்கள் நன்கு காய்ச்சி வெயிலில் வைத்தால் அதினின்று தயிலம் இறங்கும். அத்தயிலத்தை எடுத்து இடுப்பு, தொப்புளின் மேல் பூச வேண்டும்.

689. அவ்வாறு பூசிய பிறகு வயிறுளைந்து கழிச்சலை யுண்டாக்கும். குளிர்ந்த தண்ணீரில் குளித்து சந்தனத்தைப் பூசி தயிருஞ் சோறும் சாப்பிட வேண்டும்.

690. அவ்வாறு செய்ய கழிச்சல் நிற்கும். வாதம், சீதம், கிருமி, குன்மம், ஆகிய நோய்கள் 'லோகத்தாரணரசம்' எனும் மருந்தால் தீரும் என்று தன்வந்திரி யுரைத்துள்ளார்.

விஷோதரசம்

691. இரதம், கெந்தகம், சுவர்ணபாக்கி, சுக்கு, மிளகு, திப்பிலி கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இவற்றை வகைக்குச் சம அளவு எடுக்க. அவ்வெடைக்குச் சமமாய் நேர்வாளத்தை எடுக்க. அனைத்தையும் இஞ்சி, வெற்றிலைச் சாற்றால் அரைத்து உபயோகித்துக் கொள்க.

692. 130 மி.கி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி தக்க அநுபானத்தில் கொடுக்க கழிச்சல், சீதம், கிருமி. சுக்கு, சீரகம், சேர்த்து கருவேப்பிலைக் சேர்த்து குடிநீராக்கி அருந்த குணமாம்.

693. எலுமிச்சம் பழத்தை ஊசியால் குத்தி விதைகளை எடுத்துவிடுக. 4கி அளவு நேர்வாளத்தின் விதைகளைக் கொம்மட்டி சாற்றில் அரைத்துப்

694. பழத்திற்குள் வைத்து பழத்தினை மூடி பத்திரப்படுத்தி அதனை அப்படியே சாப்பிட்டுக்கொள்க. போதுமென்றான உடன் குளித்து மீண்டும் உணவைச் சாப்பிட்டுக் கொள்ளலாம்.

695. பல வகை வாதம், பல வகை நோய்கள் கழிச்சல் ஆகிய நோய்களுக்கு இம்மருந்து ஆகும் என்று தன்வந்திரியார் கூறியுள்ளார்.

696. சிறுதும்மட்டிக் பழத்தைச் சாறெடுத்து எரித்து மெழுகு பதமான பிறகு இறக்கிக் கொள்க. இவ் வெடைக்குச் சமமாய் வெல்லம் சேர்த்து உட் கொள்ள கழிச்சலாகும்.

697. மருந்து சாப்பிடும் போது மோரும் சோறும் சாப்பிட்டுக் கொள்ள வேண்டும். கழிச்சல் நின்று மேலக்கட்டும். வயிற்றிலுள்ள பல நோய்கள் தீரும்

698. கொட்டிக் காவான் விதையை வச்சிரப்பாலை விட்டரைத்து நிழலில் உலர்த்தி பதினாறு பொழுது அரைத்து காய வைத்து அந்திக்கு ஒரு பாக்களவு (२.२கி) கொடுக்கவும்.

699. ~~சிந்தூரம்~~

சிந்தூரம்

700. அப்பிரகச் செந்தூரத்திற்குச் சமனடை கெந்தகத்தை எடுத்துக் கொள்க. அதனை ஊமத்தையிலைச் சாறு விட்டரைத்து 65 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டி நிழலில் உலர்த்தித் தக்க அனுபானத்துடன் வழங்கவும்.

701. உருட்டிய மருந்தினைப் பழமையான இட்டித் தண்ணீரில் ஒரு நாள் ஊற வைத்து எடுத்துக் கொள்க. கழுதைப்பாலில் வைத்துப் பின் ஆயிரம் வரட்டியில் புடம் வைத்தெடுத்து உரலில் போட்டு இடித்து 130 மி.கி அளவுள்ள உருண்டைகளாகச் செய்து கொள்க.

702. சட்டியிலே உருண்டைகளைப் போட்டு பிரமி, தழுதாழை, நொச்சி, கொட்டைக்கரந்தை, கருஞ் சாங்கு, வாகை, வேலிப்பருத்தி, நீர் முள்ளி,
703. சிப்பாத்தி, பொடுதலை, ஆகிய மூலிகைகளின் ~~[illegible]~~ சாற்றால் மேற்கூறிய சரக்குகளைத் தனித்தனியே அரைத்துக் காய்ச்சிக் கொள்க.

704. பசு, வெள்ளாட்டுக் கோமயத்தில் தனித்தனியே பின் வேக வைத்து எடுத்து உலர்த்திப் பதத்துடன் எடுத்துப் பொடித்துப் பரணியில் வைத்துப் பத்திரப்படுத்திக் கொள்க. அதனுடன் சுக்கு, மிளகு, திப்பிலி தூளைச் சேர்க்க.

705. அவ்வாறு அனுபானத்துடன் கொடுக்க சயங்கள், காசம், இரத்த காசம், அவாசம், பாண்டு சோகை ஆகிய நோய்கள் நீங்கி தேகம் வலுப்பெறும்.

நவநீத பற்பம்

706. சுத்திச் சாரணை வேரினை மூன்று பலம் எடுத்து
பசுவின் வெண்ணெய் ஒரு பலத்தைச் சேர்த்து
அரைத்து சட்டிக்குள் வைத்து வாயினை மேல் மூடையிட்டு
கொண்டு மூடுக.

707. சட்டியின் வாயினை சீலை மண்ணினால்
சுற்றி ஆயிரம் வரட்டியின் ~~புடை~~ அடுக்கி
புடம் போடுக. பக்குவமான பிறகு எடுத்துப் பார்க்க
பற்பமாகியுள்ளதைப் பரணியில் பத்திரப்படுத்திக்
கொள்ளவும்.

சினைக பொட்டணம்

708. தான்றி, கோரைக்கிழங்கு, தேங்காய், வேப்பங்கொட்டை,
மஞ்சள், முருங்கை, அகத்தி விதை சுக்கு, மிளகு,
திப்பிலி, கோட்டம், சித்தாமணக்குக் கொட்டை,
சதகுப்பை

709. ஆகிய சரக்குகளைச் சமனெடுத்து பொட்டணமாகக்
கட்டி சட்டியில் போட்டு வேப்பெண்ணெயை ஊற்றி
வெதுப்பிக் கொள்க. ஈரப்பசையோடு இருக்கும்
அதனை சன்னி சுரம், வாதங்களுக்கு ஒற்றடமாக
வைத்து எடுக்க நோய் தீரும்.

711. முற்றிய தேங்காயின் துருவல், உள்ளி ஒரு உள்ளங்கையளவு, வசம்பு 40 எடுத்துச் சூரணித்துக் கொள்க. வேப்பெண்ணெயைச் சூரணத்தின் மேல் ஊற்றி வறுத்து சன்னிக்கு ஒற்றடம் வைத்தெடுக்க காலகளுஞ் சன்னி தீரும்.

712. ஏறழிஞ்சில் வித்து, எள், கொள், புன்னை விதை, உளுந்து, வெள்ளுள்ளி, சதகுப்பை, கழற்சிப்பருப்பு, வசம்பு, சுக்கு, கருஞ்சீரகம்

713. முருங்கை, அகத்தி, வாதுமடவை, சிற்றாமணக்கு கொட்டை, கெந்தகம், தேங்காய்த் துருவல், ஆகிய சரக்குகளைப் பொட்டணமாகக் கட்டி எலுமிச்சஞ் சாற்றை ஊற்றிக் கொள்க.

714. வேப்பெண்ணெயையும் மேற்கூறிய சரக்குடன் கலந்து எரித்து பொட்டணத்தைச் சன்னி கண்ட இடங்களில் ஒற்றி எடுக்க வாதசுரம், சன்னி இவை குணமாகும்.

715. புன்னை, அரைக்கீரை, புங்கின் இலை, ஆமணக்கு, முருங்கை, மகிழ், நாவல், பருத்தி, மருதோன்றி விதை, கடுகு, உள்ளி,

716. எள், கொள், கோட்டம், இந்துப்பு, அசம்பு, புங்கு, ஓமம், வெள்ளாட்டுமூன் ஆகிய சரக்குகளைச் சமமாக எடுத்து பொட்டணமாய்ச் சேர்த்துக் கொள்க. அதில் வேப்பெண்ணெயை ஊற்றிக் கொள்க.

717. ஊற்றின பின் எண்ணெயை எரித்துப் பக்குவத்துடன் எடுத்து வலி கண்ட இடங்களிலெல்லாம் ஏற்றிட வாதவகைகள் அனைத்தும் தீரும்.

திருவிக்கிரமரசம்

718. இரசம் 40கி, வாளம் 28கி, நாபி 12கி, கொட்டாங்கச் சிக்கரி 8கி, தேங்காய்ப்பால், புட்டி கருப்பட்டி வகைக்கு 44கி, எடுத்து அனைத்தும் சரக்குகளையும் 12 மணிநேரம் அரைக்கவும். 130மி.கி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொள்ளவும். அனைத்து விஷக்கடிகளுக்கும் கொடுக்கவும். பச்சரிசி, முருங்கையிலையினைச் சேர்த்துக் கொள்ளவும்.

1. மனையில் வாழும் தாமரை மலர் போன்ற பாதங்களை வாழ்த்தி மருத்துவத்தின் சிறப்பினை வெண்பாவில் கூறுகிறேன்.

2.

3. செங்காலி நான்கு நிறையும் செங்குன்றம் இரண்டு நிறையும் சேர்த்து 'மஞ்சாடி' என்று அழைத்தார்கள். ஐந்து மஞ்சாடி கொண்டது 'நிட்கம்'. நான்கு நிட்கம் சேர்ந்தது ஒரு வராகனெடையாகும்.

4. ஓர் இரண்டு நிட்கம் சேர்ந்தது கோலம். இரண்டு கோலம் கொண்டது சொர்ணமாம். இரண்டு பங்கு சொர்ணம் சேர்ந்தது துலைமானி. துலைமானியின் இரண்டு பங்கு பலமாகும்.

5. நூறு பலம் கொண்டது துலாம். இரண்டு துலாம் சேர்ந்தது பாரம் என்பர். இவ்வாறு அளவுகளை இவ்வுலகில் கூறியுள்ளனர்

6. தொடி இரட்டிப்பாய் இருந்தால் ஆழாக்காகும்.

சுரத்துக்குக் கற்கம்

1. சுக்கு, மிளகு, திப்பிலி, உள்ளி, சுவதொட்டியிலை இவற்றைச் சம அளவெடுத்து வெந்நீரில் அரைத்துக் குடிக்க வாதசுரம், ஆமசுரம், பேய்ச்சுரமும் நீங்கும்.

2. செண்பகப்பூ, அமிர்தவல்லி, சிற்றாமுட்டி ஆகிய இச்சரக்குகளைச் சமமெடுத்து வெந்நீரில் விட்டரைத்துக் கொள்க. வெந்நீரில் கலந்து கொடுக்க [illegible] சுரம், காசம் குணமாகும்.

3. மிளகு, திப்பிலி, நொச்சி, இவற்றைச்சமனெடுத்து ஒன்றாய்ச் சேர்த்தரைத்துக் கொடுக்க சீதசுரம் தீரும்.

4. கடுக்காய், சுக்கு, மிளகு, நல்லசீரகம் இவற்றைச் சமனெடுத்து மோர்தெளிவு பழைய மைய அரைத்துக் வெந்நீரில் கலந்து குடிக்க சீதசுரம் குணமாகும்.

5. கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றைச் சமமெடுத்து வெந்நீரில் அரைத்துக் குடிக்க குளிரை போன்ற நடுக்கி சுரம் ஓடி விடும்.

6. கருஞ்சீரகம், மிளகு, கடுகுரோகிணி, சுக்கு, சீரகம்
7. இவற்றையும் இவற்றுடன் சிவநொட்டி, உள்ளி, சுக்கு, மிளகு, திப்பிலி இவையும் சேர்த்து அரைத்துக் குடிக்க சுரம் போகும். மயிலிறகைச் சுட்டு
8. வெண்ணெயில் கலந்து கொடுக்க விக்கல், திமிர் இருமல், குணமாகும்.

8. நெல்லி முள்ளி உள்ளி இவற்றுடன் வெந்நீர் வார்த்தரைத்து நெய்யில் கலந்து உட்கொள்ள விட்டு விட்டு வரும் மாறல்சுரம், சீதசுரம் குணமாகும்.

9. சுக்கு, மிளகு, திப்பிலி, உள்ளி, நொச்சி இவற்றைச் சம அளவெடுத்து வெந்நீர் விட்டரைத்துக் குடிக்க கொடுக்க மெய் நடுக்கல் தீரும்.

10. ஆனைத்திப்பிலி, நிலாஞ்சனக்கல், நெற்பொரி இவற்றைச் சுட்ட சாம்பலைத் தேனில் குழைத்துக் கொடுக்க விக்கல் தீரும்.

11. நெற்பொரி, மாதுளை, திப்பிலி இவற்றைச் சுட்டு சர்க்கரையையும் வெண்ணெயையும் சேர்த்துக் கொடுக்க வாந்தியும் விக்கலும் தீரும்.

12. நெற்பொரியையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொடுக்க விக்கல், வாந்தி குணமாகும்.

13. கருப்புக்கட்டியைப் பொடித்து நெய்யில் கலந்து கொடுக்க விக்கல் நீங்கும். அவ்வகைக் கட்டியைப் பொடித்துத் தேனிலே கலந்து கொடுக்கவும் விக்கல் குணமாகும்.

14. இங்கிலியம், மனோசிலையையும் சேர்த்துப் பொடித்து நெய்யிலே போட்டு தூபத்தைக் காட்டவும். சீந்திற் குடிநீரைக் காய்ச்சிக் கொடுக்க விக்கல் தீரும்.

15. தேனில் சுட்ட அம்பலைக் கலந்து கொடுக்க விக்கல் இளைப்பு தீரும். விளாம்பழத்தின் விதையை வெந்நீரில் அரைத்துக் அதை உட்கொள்ள விக்கல், இளைப்பு நீங்கும்.

16. இளநீரில், மானின் கொம்பினைச் சுட்டதூள், நெய் மணம் வீசும் வில்வவேர், இலவம்பிசின் ஆகியவற்றைச் சேர்த்து நன்கரைத்துக் குடிக்க விக்கல் குணமாகும்.

17. கடுக்காய், கடுகுரோகணி, சுக்கு, உள்ளி, வசம்பு இவற்றைக் காடியில் அரைத்துக் கொடுக்க வாயு இருந்த இடம் தெரியாமல் போகும்.

18. இரண்டு உள்ளி, கழற்சியினை இவற்றை இளநீரில் அரைத்து வெந்நீரில் கலந்து உட்கொள்ள வலிப்பு தீரும்.

19. வெள்ளை வெங்காயம், பூசணிப்பூ, சந்தனம், மிளகு, முந்திரிகை, கற்பூரம், முருக்கன் விதை, மான் கொம்பு, ஆகியவற்றைத் தாய்ப்பால் சேர்த்தரைத்துக் கொடுக்க வாயு நீங்கும்.

20. தித்தம் எனும் பெருங்காயம், வசம்பு, சிறுதேக்கு, கடுக்காய் சுக்கின் சுட்ட சாம்பல் இவற்றைச் சமனெடுத்து அரைத்துக் கொடுக்க தாப சுரம் ஓடிவிடும் என்பர்.

21. சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம் இவற்றைச் சம அளவு எடுத்து அரைத்துக் கொடுக்க வாயு சுரம் தீரும். ஆயுள் அதிகமாகும்.

22. அரத்தை, கடுகுரோகிணி, சுக்கு, திப்பிலி இவற்றைச் சமமாய் எடுத்துக் கொள்க. அதை வெந்நீரில் கலந்து கொடுக்க வெப்பு நீங்கி விடும்.

23. கடுக்காயில் நல்லவற்றை ஐந்தினை ஆய்ந்தெடுத்துக் கொள்க. அதனைச் அரசி நீரில் அரைத்து வடிகட்டி எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அதனை அளவறிந்து கொடுக்க வாத குன்மம் குணமாகும். ரத்தரோகம் தீரும்.

24. தண்ணீரில் வளரும் பிரண்டையை நீர் விட்டு அரைத்து உருண்டைகளாய் திரட்டிக் கொள்க. மூன்று நாட்கள் தக்க அனுபானத்தில் இழைத்துக் கொடுக்க மூலம் தீரும்.

25. அரசம்பட்டையை அரைத்து ஆட்டுப்பாலில் கலந்து கொடுக்க மூலம் மாறும். வெள்ளறுகை தீயில் போட்டு ஆசன வழியில் வேது பிடிக்க மாறும். வெள்ளறுகை ஆசனத்தின் மீது வைத்துக் கட்ட மூலம் தீரும்.

26. சுக்கு, ஓமம், திப்பிலி, இலவங்கம் ஆகிய சரக்குகளைச் சமமாய் எடுத்து அரைத்துக் கொடுக்க காலெரிவு, உள்ளங்கை எரிவு தீரும்.

27.

28. சுக்கு 1கி, சங்கம் வேர் 1கி, வெள்ளுள்ளி இரண்டு எடுத்து வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக் கலந்து கொள்க.

29. அதனை உட்கொள்ள மூலம் போம். ஆட்டுப்பாலி-னின்று எடுத்த தயிர், சாரணைவேர், புளிநரணைக் கிழங்கு, கொடிவேலி, மருள்கிழங்கு, பிரண்டை ஆகிய மருந்துச் சரக்குகளை பசு மோரில் அரைத்துக் கொடுக்கவும்

30. இம் மருந்தை உட்கொள்ள அண்ட வாதம் நீங்கும். கோழி முட்டையின் வெண்கருவினையும் கழற்சிக் கொடிப் பருப்பையும் சேர்த்துப் பிசைந்து அடை சுட்டுச் சாப்பிட அண்ட வாதம் குணமாகும்.

31. நீர் முள்ளி விதை, நாயுருவிவிதையை எடுத்து வெள்ளைக் காட்டாமணக்குச் சாற்றை ஊற்றி அரைத்துக் கொடுக்க அண்ட வாதம் குணமாகும்.

32. கழற்சிப்பருப்பு, சுக்கு, பெருங்காயம் இவற்றை அரைத்து உகி பாலில் கொள்ள அண்டவாதம் தீரும்.

33. கழற்சி, விருதி, வெள்ளுள்ளி, இவற்றை வேம்பு பழுத்தண்ணீர் விட்டரைத்துக் இழக்க வைக்க ஆறு வகையும் தீரும். அண்டவாதம் குணமாகும்.

34. ~~[illegible]~~ விரை வாத ~~[illegible]~~விரதத்துடன் பிரண்டைக் கொடிந்தைச் சேர்த்துச் சாப்பிட விரை வாதம் தீரும். வெள்ளெருக்கம் வேரைப் பாக்குடன் சேர்த்துக் கொடுக்க அண்ட வாதம் குணமாகும்.

35. முடக்கொத்தான், உள்ளி வசம்பு இவற்றை நல்லெண்ணெயில் சேர்த்துக் கொடுக்க அண்ட வாதம் குணமாகும். எட்டி விதையைப் பாக்கி வையோடு சேர்த்துச் சாப்பிட அண்டவாதம் குணமாகும்.

36. முடக்கொத்தானுடன் கடுகை வத்தியைச் சேர்த்து வறுத்து அண்டத்தில் வைத்து இறுக்கக் கட்டி வைக்க அண்டவாதம் தீரும்.

37. நீர்ப்பூலாவிலையை அரைத்து சுகி அளவு உருண்டை எடுத்துத் தேனில் கலந்து உண்ண பித்தம் தீரும்.

38. வெல்லம், பேரீச்சங்காய் இவை இரண்டையும் பசுநெய்யில் அரைத்துக் கொள்க. எலுமிச்சம் பழச் சாற்றில் சடாமாஞ்சிலைச் சேர்த்தரைத்து சர்க்கரையையும் சேர்த்துக் குடிக்க பித்தம் தீரும்.

39. நெல்லிக்காய், இஞ்சி, சர்க்கரையையும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றில் கலந்து குடிக்க பித்த சுரம் தீரும்.

40. முசுறு முட்டை, விளாங்கனி, சீரகம் இவற்றைப் பழச்சாறு விட்டரைத்து கழற்சிக்காயளவு உருட்டி உட்கொள்ள பித்தம் நீங்கி உடல் குளிர்ச்சியாம்.

41. இஞ்சி, நெல்லிக்காய், இவற்றை எலுமிச்சந் ~~[illegible]~~ சாற்றில் அரைத்து உட்கொள்ள பித்தம் தீரும். சீரகத்தை ஊறவைத்து எடுத்துக் கொண்டு சர்க்கரையையும் சேர்த்து உட்கொள்ள பித்தம் குணமாகும்.

42. எலுமிச்சம்பழச்சாறு, அதன் சோறு, மிளகு இவற்றைச் சேர்த்து உச்சியிலே தேய்த்து விட்டு விருப்பத்துடன் தலையில் தண்ணீர் விட பித்தம் தீரும்.

43. சிறு பருப்பை வேக வைத்து அதனுடன் இளநீரை வார்த்து மெல்லப் பிசைந்து சீனியைச் சேர்த்துக் குடிக்க பித்தம் குணமாகும்.

44. ஆவாரம் விதை ஆவாரம் பட்டை, கடலிராஞ்சிப் பட்டை இவற்றை வெந்நீரில் அரைத்துக் கொடுக்க தாகம், மேகம், மெய்யெரிவு ஆகியன குணமாகும்.

45. மருதம் பட்டையை அரிசி கழுவிய நீரில் அரைத்துக் கொடுக்க மேகம் தீரும். உடல் வச்சிராயுதம் போன்று வலுப்பெறும்.

46. வேப்பம் விதை, நெய்ச்சிட்டி வேர், ஆகாசக்கருடன், வாப்பாங்கிழங்கு ஆகியவற்றை அரைத்துச் சாப்பிட மேகவிரணம், மேகம், மேகக்கட்டி ஆகிய நோய் தீரும்.

47. அக்கி, உள்ளி, கழற்சி விதை இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து அரைத்து 5கி அளவு கொடுக்க வலிகுன்மம் நீங்கும்

48. குன்றி கள்ளி, வெற்றிலை இவற்றைச் சேர்த்து வெதுப்பி பிழிந்து பெருங்காயத்தைச் சேர்த்துக் கொடுக்க கிரந்தி தீரும்.

49. பூவரசத்தோலினை (பட்டையை) வெந்நீரில் அரைத்து புன்னைக்காயளவு கொடுக்க கிரந்தி, சூலை தீரும்.

50. சித்திர மூலச்சாற்றினை விளக்கெண்ணெயில் கலந்து உட்கொள்ள மேகம், கிரந்தி தீரும். குருட்டுப்பிளைச் சாற்றில் 70கி எடுத்துக் கொடுக்க கருங்கிரந்தி குணமாகும்.

51. கிராம்பு, நற்சீரகம், அதிவிடயம், சீரகம், வில்வம் இவற்றைச் சமனாய் எடுத்து அரைத்து வெந்நீரில் கலந்து சாப்பிட — கடுப்பு இணைந்த அதிசுரம் தீரும்.

52. திப்பிலி, சீரகம், இவற்றை நீரிலரைத்து தண்ணீரில் கொடுக்க வெப்பு நீங்காத சுரம் தீரும்.

53. தீத்தம் எனும் பெருங்காயம், திப்பிலி, எனும் நான்கும் சம அளவெடுத்து அரைத்து மூவிரலளவு கொடுக்க சுரமும் குணமாகி சாந்தமாகும்.

54. வசம்பு, தேக்கு, கடுகு, தீத்தம் எனும் பெருங்காயம், இவை ஐந்தையும் மைய அரைத்து வெந்நீரில் கலந்து கொடுக்க தாபசுரம் தீரும்.

55. மல்லிகை வேர், சிந்தில் கொடி, சிற்றாமுட்டி வேர், இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து நீரில் அரைத்து அப்படியே உட்கொள்ள சுரம் முதல் காசம் வரை தீரும்.

56. கருஞ்சீரகம், கோடகம் இவை மூன்றையும் சம அளவெடுத்து கடுகுரோகிணி சீரகம் வகைக்கு இரண்டு பங்கு சேர்த்தரைத்து வெந்நீர் குடிக்க சன்னிவாதம், பலவகை சுரம் தீரும்.

57. திப்பிலி இவற்றை சுண்ணத்தோடு சேர்த்தரைத்து கொடுக்க சீதசுரம் தீரும்.

58. கடுக்காய், சுக்கு, சீரகம் இவற்றைச் சமனாக எடுத்து தண்ணீரில் அரைத்து அந்நீரி -லேயே கலந்து குடிக்க சீதவெப்பு, சுரம் குணமாகும்.

59. சீதவெப்பு நீங்கிட—.

60. சுரத்தில் சீதவெப்பு தீர்வதற்குச் சுக்கு, உள்ளி, சீரகம், கஞ்சாங்கோரை, இவை ஐந்தினையும் அட்ட நீரில் சேர்த்து அரைத்துக் கொடுக்கவும் குணமாகும்.

61. சுக்கு, மிளகு, திப்பிலி, கரிய சீரகம், கடுகுரோகணி இவை ஐந்தினையும் சம அளவெடுத்து அரைத்து வெந்நீரில் கலந்து உட்கொள்ள நடுக்கல், வெப்பு, இவை தீரும்.

62. சுவரொட்டியிலை, திப்பிலி, மிளகு, சுக்கு, உள்ளி இவற்றைச் சம அளவெடுத்து அரைத்து வெந்நீரில் கலந்து குடிக்க மாறல் சுரம், வெப்பு இவை தீரும்.

63. யானைத்திப்பிலி, உள்ளி இவற்றைச் சேர்த்தரைத்து பசுவின் நெய்யில் கலந்து கொடுக்கவும். பட்டடையைச் சிறிதளவு கொள்ளவும். அவ்வாறு செய்ய மாறல் சுரம், சீதசுரம், வெப்பு ஆகிய அனைத்தும் தீரும்.

64. நொச்சி, வெள்ளெருக்கு, சுக்கு இவற்றை வெந்நீரில் அரைத்து மாத்திரையாய்ச் செய்து உள்ளுக்கு அளவறிந்து கொடுக்க சீதத்தின் வெப்பு தீரும்.

65. முருகன் ஏறும் மயிலிறகினைச் சுட்டு பசு வெண்ணெயில் கலந்து கொடுக்க இருமல், விக்கல் ஆகியவை தீரும் என்பர்.

66. திப்பிலி, அஞ்சனம் எனும் நீலக்கல், நெற்பொரி இவற்றைப் பொடித்துக் கட்டியாயுள்ள தேனில் கலந்து கொடுக்க விக்கல் குணமாகும்.

67. மாதுளை, நெற்பொரி, சர்க்கரை இவற்றைச்சேர்த்து பசு வெண்ணெயில் கலந்து கொடுக்க விக்கல், வாந்தி தீரும் என்பர்.

68. பஞ்சதாரை எனும் நாட்டுச்சர்க்கரை, திப்பிலி, நெற்பொரி, இவற்றைப் பொடித்து தேனுடன் கலந்து கொடுக்க விக்கல், வாந்தி குணமாகும்.

69. கருப்புக்கட்டியைப் பொடித்து வெண்ணெயில் கலந்து கொடுக்கவும் கருப்புக்கட்டியில் நெய்யைச் சேர்த்து கொடுக்கவும் கருப்புக்கட்டியுடன் தலை மயிரைச் சுட்டுக் கலந்து கொடுக்கவும் விக்கல் மறுபடி வராது அழிவிடும்.

70. இங்கிலியம், மனோசிலை இவற்றைப் பொடித்து நெய்யில் கலந்து தூபம் போடுக ~~கொடுக்க~~: சீந்தில் ~~[illegible]~~ குடிநீரினை உள்ளுக்குக் கொடுக்க விக்கல் தீரும்.

71. சங்கினைச் சுட்டெடுத்த சாம்பலைத் தேனில் கலந்து கொடுக்க. விளாம்பழ விதையைப் பொடித்து வெந்நீரில் கலந்து கொடுக்க விக்கல் நீங்கும்.

72. வில்வ வேரினைப் பொடித்து புள்ளிமானின் கொம்பினைச் சுட்ட சூரணத்தையும் அதனுடன் சேர்த்து இளநீரில் கலந்து கொடுக்க விக்கல் தீரும்.

73. உள்ளி, வசம்பு, கடுகு கிவை ஐந்தி-னையும் அரைத்து ஒரு வருடம் கழித்ததும் எடுத்து காடியில் கலந்து கொள்ள விக்கல் தீரும்.

74. உள்ளி

இவற்றைச் சேர்த்தரைத்து உருண்டையாக்கி வெந்நீரில் கலந்து உட்கொள்ள உடல்வலி தீர்ந்து குளிர்ச்சியாகும்.

75. முசுறுமுட்டை, பூநாகம், முந்திரிகைப்பழம், பெரிஞ்சு மிளகு, உள்ளி, பூசணிப்பூ முருக்குவித்து மான் கொம்பு, ஆகியவற்றை எடுத்து அரைத்துத் தாய்ப்பாலில் கலந்து கொடுக்க உடலிலுள்ள வாய்வு நீங்கும்.

76. சொல்லிய அமிர்தம் ஐந்தின் அரபியின் நீரில் அரைத்து கரைத்து வடித்துக் கொள்ளவும். அதனை உட்கொள்ள மலத்தைக் கழியச் செய்யும். இன்மத்தைத் தீர்க்கும். அடிறுத்துரோகம் தீர்க்கும்.

77. பிரண்டையையும் உப்பையும் சேர்த்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் உட்கொள்ள மூலங்கள் குணமாகும் என்று கூறுவர்.

80. அரசம் பட்டையை வெள்ளாட்டுப் பாலில் அரைத்து குடிக்கவும். வெள்ளறுகினை வேகவைத்து ~~அதை~~ அவ்வாவிலினை வேதுகாட்டி பின் அதை எடுத்து மூலத்தின் மேல் கட்ட மூலம் கரைந்து போகும்.

81. கடுக்காய், சுக்கு, திப்பிலி, இலவணம், இலவங்கம், திப்பிலி, இவற்றைச் சம அளவெடுத்து அரைத்து தண்ணீரில் கரைத்துக் கொடுக்க தாங்க முடியாத கால் எரிவு தீரும்.

இவையும் வாத சுரத்திற்குக் குடிநீர்

1. சிறுதேக்கு, சங்கம் வேர், தான்றி, கடுக்காய் நெல்லிக்காய், விஷ்ணுகிராந்தி, வேர்க்கொம்பு எனும், அக்கு, ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து இடித்து 2.படி தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சிக் கொடுக்க வாத சுரம் குணமாகும்.

2. சந்தனம், சீந்தில், சுக்கு, கோரைக்கிழங்கு, சிறு காஞ்சொறி வேர் ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்துப் பொடித்து எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க வாத சுரம் தீரும்.

3. சீந்தில் கிழங்கு, கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சொறி, சந்தனம் ஆகிய மூலிகைகளைச் வகைக்கு 35கி எடுத்து தண்ணீரில் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க வாத சுரம் தீரும்.

4. சுக்கு, தழுதாழை, ஆமணக்கு வேர், செருப்படை, உத்தன் குதம்பை, ஆகிய மூலிகைகளைச் சமமாக எடுத்து எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க வாதசுரம் குணமாகும்.

5. ஆற்றுமுள்ளி, பேராமுட்டி, ~~(struck-out word)~~ ஆத்தி, இலந்தை வேர், கடுக்காய், சுக்கு ஆகிய மூலிகைகளைச் சாடியில் போட்டு தண்ணீர் ஊற்றி எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க வாதசுரம் தீரும்.

6. காட்டாமணக்கு, சுக்கு, தழுதாழை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆகிய மூலிகைகளைப் பொடித்து வெந்நீரில் கலந்து கொடுக்க வாதசுரம் தீரும்.

7. வெட்டிவேர், ஆலம் விழுது, தழுதாழை, சுக்கு, தான்றிக்
-காய், அவுரி, மஞ்சள், ஆகிய மூலிகைகளைச்சமன்
எடுத்து தண்ணீரில் போட்டு காய்ச்சிக் கொடுக்க
வாத சுரம் குணமாகும்.

பித்தசுரம்

8. சதகுப்பை, கொத்துமல்லி, தண்ணீர்விட்டான்
கோரைக்கிழங்கு, அதிமதுரம், ஆடாதோடை,
முசுமுசுக்கை, வெட்டிவேர், ஆகிய மூலிகைகளைச்
சமனெடுத்துக் கொள்க. தண்ணீர் விட்டு எட்டொன்
-றாய்க் காய்ச்சிக் கொடுக்க பித்த சுரம் குணமாகும்.

9. சீந்தில், நன்னாரி, சித்தாமுட்டி, முந்திரிகை
சந்தனம், பற்பாடகம், கோரைக்கிழங்கு இவற்றைச்
சமனெடுத்துக் கொள்க. 5 லி தண்ணீரூற்றி
1.3லி ஆக சுருக்கிக் கொடுக்க பித்தசுரம் தீரும்.

10. திப்பிலி, வட்டத்திருப்பி, இலாமிச்சம், இருவேலி,
சீந்தில், பற்பாடகம், சுக்கு, கண்டங்காலி,
ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்துக் கொள்க.
தண்ணீர் விட்டு குழிநீராய்க் காய்ச்சிக்
கொடுக்க பித்த சுரம் குணமாகும்.

11. வெட்டிவேர், பேராமுட்டி, சீரகம், சிற்றாமுட்டிவேர், சீந்தில், கோரைக்கிழங்கு, சுக்கு, கரும்பயறு ஆகிய மூலிகைகளைக் குடிநீராய்க் கொடுக்க பித்த சுரம் குணமாகும்.

12. கோட்டம் விளாமிச்சம்வேர் சந்தனம், சீந்தில், நாட்டு சுக்கு, கோரைக்கிழங்கு, இவற்றைக் குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க பித்த சுரம் தீரும்.

13. கொத்துமல்லி, பேராமுட்டி, கோரைக்கிழங்கு, சுக்கு, நெல்லி முள்ளி விளாமிச்சம் ஆகிய மூலிகைகளைச் சேர்த்து குடிநீராக்கிக் கொடுக்க பித்த சுரம் தீரும்.

14. அரத்தை, அதிமதுரம், சதகுப்பை, நரிப்பயற்றம் வேர், கோரைக்கிழங்கு, வெட்டிவேர் இவற்றைக் குடிநீராய்க் கொடுக்க வெப்பான பித்தம் தீரும்.

15. கருப்பான பாசிப்பயறு, சீந்தில், சடாமாஞ்சில், கோரைக்கிழங்கு, பேராமுட்டி, அதிமதுரம் இவற்றைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க பித்தசுரம் குணமாகும்.

16. சிறுதேக்கு, கோஞ்சொறிவேர், வெட்டிவேர், சீந்தில், சுக்கு, இவற்றைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொள்க. திப்பிலியைப் பொடித்து குடிநீரில் கலக்கிக் கொடுக்க பித்த சுரம் தீரும்.

17. ஆடாதோடை ஏர்க்கு, ஆற்றுமுள்ளி, காட்டுமுள்ளி, காட்டாற்று முள்ளி, முட்காவேளை, செம்முள்ளி இவற்றைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க நீண்டநாட்களாய் உள்ள சுரம் தீரும்.

சிலேத்தும சுரம்

18. வாகையிலை, அதன் ஏர்க்கு, கடுரோகிணி, கண்டங்காலி, வசம்பு, பிரண்டை, மாசிக்காய், சுக்கு ஆகிய மூலிகைகளை வைத்து குடிநீராய்ச் செய்து அதில் திப்பிலியைப் பொடித்துப் போட்டுக் கொடுக்க சிலேத்தும சுரம் தீரும்.

19. தூதுவளை, கோரைக்கிழங்கு, கண்டங்காலி முள்ளி, செம்முள்ளி, இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து குடிநீராக்கி அதில் திப்பிலித் தூளைப் போட்டுக் குடிக்க சிலேத்தும சுரம் தீரும்.

௨௦. சுக்கு, முள்ளி, கண்டம், ஆடாதோடை, ஏர்க்கு, கடுகுரோகிணி, மரமஞ்சள், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பேய்ப்புடல், காட்டாமணக்குவேர் இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க சிலேத்தும சுரம் குணமாகும்.

௨௧. ஓமம், வசம்பு, சுக்கு, கண்டங்கத்திரி வேர், பெருங்குமிழ், சங்கு, முருங்கை, கையாந்தகரைவேர் இவற்றை வகைக்குச் சம அளவெடுத்துக் குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க சிலேத்தும சுரம் தீரும்.

௨௨. ஆமணக்கு வேர், சீந்தில், தழுதாழை, சுக்கு, உத்தன் குதம்பை, கோரைக்கிழங்கு, இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க வாத பித்த சுரம் குணமாகும்.

௨௩. கடுக்காய் நெல்லிக்காய், தான்றிக்காய், கடுகுரோகிணி, வேப்பீர்க்கு, சுக்கு, சீந்தில், பேய்ப்புடல், ஆகிய மூலிகைகளைச் சம அளவெடுத்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க வாத சிலேத்தும சுரம் தீரும்.

24. விலாமிச்சம், கொத்துமல்லி, சுக்கு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பாற்சோற்றி, செந்தொட்டி ஆகிய மருந்து பொருள்களைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க பித்த சிலேத்துமம் நீங்கும்.

தொந்தசுரம்

25. உத்தன்குதம்பை, சுக்கு, கடுக்காய், சீந்தில், நிலவேம்பு, பாற்சோற்றி, பேராமுட்டி, ஆகிய பொருள்களைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க தொந்த சுரம் குணமாகும்.

26. கண்டங்கனி, கணப்பூடு, சீந்தில், சுக்கு இவற்றைச் சம அளவெடுத்து அரைத்து உட்கொண்டவுடன் செரியாமை, சுவாசம், காசம், மந்தம் ஆகியன நீங்கும்.

27. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெண்அங்கம் வேர், கொடிவேலி, சுக்கு, மிளகு, திப்பிலி, மூலம், நாவல், திப்பிலிமூலம், இவற்றை வகைக்குச் சம அளவெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க சுரம் குணமாகும்.

கெர்ப்பிணி சுரத்துக்கு

28. நன்னாரி, மாகாளி, வராகி, அட்டிமதுரம், சுக்கு, வெட்டிவேர், கோரைக்கிழங்கு, செம்பிளிச்சை, தேன், விலாமிச்சம், ஆகிய மூலிகைகள் கெர்ப்பிணியின் வெப்பினைக் குறைக்கக் கூடியவை.

29. பேராமுட்டி, சிற்றாமுட்டி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, கூத்தன் குதம்பை, பொன்னாங்காணி, கோரைக்கிழங்கு, பாற்சொற்றி ஆகிய மூலிகைகளைக் குடிநீரிட்டுக் கொடுக்க கெர்ப்பிணிகளின் சுரம் தீரும்.

30. செவ்வியம், கொடிவேலி, சீந்தில், நிலவேம்பு, விஷ்ணுகிராந்தி, வேர்க்கொம்பு எனும் சுக்கு, முட்காவேளை, ஆகிய மூலிகைகளைக் குடிநீராக்கிக் கொடுக்க கெர்ப்பிணிக்கு வரும் அனைத்துவ் வெப்பும் தீரும்.

31. பேராமுட்டி சீந்தில், கண்டங்காலி, கூத்தன் குதம்பை, வேம்பு, வெப்பீர்க்கு ஆகியவற்றை சமஅளவெடுத்து குடிநீராக்கிக் கொடுக்க அனைத்து வெப்பும் தீரும்.

32. சீந்தில், சங்கம்வேர், சுக்கு, ஆமணக்கு, பற்பாடகம், கோரைக்கிழங்கு, கொடிவேலி இவற்றைச் சேர்த்து குடிநீராக்கிக் கொடுக்க அனைத்து வகை சுரங்-களும் குணமாகும்.

33. கொன்றைப் பழத்தின் விதை, கொத்துமல்லி, பேய்ப்புடல், சிறுகாஞ்சொறி, கோரைக்கிழங்கு, சுக்கு, ஆடாதோடை, ஏர்க்கு ஆகிய மூலிகைகளின் குடிநீர் அனைத்து சுரத்திற்கும் உகந்தது.

34. வெள்ளறுகு, பேய்ப்புடல், வேப்பீர்க்கு, கொடிவேலி, சுக்கு, பொன்முசுட்டை, ஆகியவற்றைச் சமஅளவு எடுத்து சேர்த்து காய்ச்சிய குடிநீர் விடச் சுரத்திற்கு உகந்தது.

35. செந்தொட்டி, பற்பாடகம், செவியம், பெருங்கணப்பூ, கொடிவேலி ~~சுக்கு~~, ~~பொன்முசுட்டை~~, தழுதாழை, நிலவேம்பு, சுக்கு இவற்றைச் சேர்த்து குடிநீராக்கிக் கொடுக்க விடச்சுரம் நீங்கும்.

36. வில்வவேர், நொச்சியிலை, வெண்சங்கம்வேர், சுக்கு, ஏலம், கொடிவேலி, இம்பிரிவேர், உத்தன் இதம்பை ஆகிய இந்த மூலிகைகளாலான குடிநீர் தோடசுரத்திற்கு உகந்தது. நடுக்கமும் நீங்கும்.

37. வெட்பாலை அரிசி, சுக்கு, பேய்ப்புடல், செந்தொட்டி, கோரைக்கிழங்கு, கோட்டம், எலுமிச்சை, சீந்தில், ஆடாதோடை, பற்பாடகம், ஆகியவற்றைச் சமமாக எடுத்து குடிநீராக்கிக் கொடுக்க தோடம் குணமாகும்.

38. வாகை, சீந்தில், வேம்பு, பற்பாடகம், 'தேசாவரம்' எனும் கண்டதிப்பிலி, சுக்கு, செந்தொட்டி, சிற்றாமுட்டி ஆகிய மூலிகைகளை சரியுள்ள நிறை யளவு எடுத்துப் பொடித்துக் கொள்க.

39. அதில் 35கி அளவு எடுத்துக் குடிநீராக்கிக் கொடுக்க வாதம், மூர்ச்சை, மயக்கம், சன்னி, பாதசுரம் ஆகியவை குணமாகும்.

40. பெருங்குமிழ்வேர், காட்டுசித்திரமூலம், அரத்தை, அழிஞ்சில்வேர், செவியம், பேராமுட்டி, ஆகிய மூலிகைகளைக் குடிநீராக்கிக் கொடுக்க சன்னி பாதம் தீரும்.

41. எருக்கு வேர், சுக்கு, கண்டங்காலி, வசம்பு
சுங்கு, செருப்படி வேர், பேராமுட்டி ஆகிய
மருந்துச் சரக்குகளினால் குடிநீர் காய்ச்சிக்
கொடுக்க தோடசுரம் குணமாகும்.

42. கோரைக்கிழங்கு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்,
முள்ளி, கண்டங்காலி, வேப்பின் ஈர்க்கு,
கொத்துமல்லி, சீந்திற்கொடி, சுக்கு, புடல், பற்பாடகம்,
வாய்விடங்கம் நெய்தல் பூ, எலுமிச்சம், திப்பிலி,
ஆகிய சரக்குகளைச் சமனெடுத்துக் குடிநீராய்க்காய்ச்சிக் கொள்க.
திப்பிலி சூர்ணம் எடுத்து அதனுடன் சேர்க்க.

43. கடுகுரோகிணியையும் சேர்த்து தேன் கலந்து கொடுக்க
வாத சிலேத்தும தோடம் தீரும்.

44. முந்திரிகை கர்ச்சூரம், கடுகுரோகிணி, நெய்தல்,
பற்பாடகம், சீந்தில், இவற்றைச் சேர்த்து குடிநீராக்
-கிக் கொடுக்க மூர்ச்சை மயக்கம், வெப்பாகிய
சுரம், பித்தம் குணமாகும்.

45. கண்டங்காலி, நெய்தல், சந்தனம், அமுதவல்லி
இவற்றைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக்
கொடுக்க வாதசேத்துமத்தினால் வந்த காய்ச்சல்
தோடசுரம் குணமாகும்.

46. வாகையிலை, வில்வவேர், கடுகுரோகிணி முள்ளி, நிலவேம்பு, பற்பாடகம், கோஷ்டம் பாளிதம் இவற்றைச் சமனெடுத்துக் குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க வெப்பத்தினால் வந்த தாப சுரம் தீரும்.

47. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் பேய்ப்புடல் செம்புளிச்சை, கோரைக்கிழங்கு, ஆகியவற்றைச் சமனெடுத்து சேர்த்துக் குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க. அதில் மஞ்சள் பொடியைத் தூவி தேனைக் கலந்து கொடுக்க தாப சுரம் தீரும்.

48. சந்தனம், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், சுக்கு விளாமிச்சம், பற்பாடகம், இவற்றைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சி கொடுக்க தாபசுரம் தீரும்.

49. சந்தனம், விளாமிச்சை, கோரைக்கிழங்கு சுக்கு, கண்டங்காலி செந்தொட்டி, வேப்பின் ஈர்க்கு சீந்தில், சுவரொட்டி, அவர்க்கடுகு, வெண் பாதிரி, இவற்றைச் சமனெடுத்து குடிநீராக்கிக் கொடுக்க நாக்கின் சுவையைத் தடுக்கும் சுரம் குணமாகும்.

50. சிற்றாமுட்டி, பேராமுட்டி, சீந்தில், சுக்கு, திப்பிலி நிலவேம்பு, இவற்றைச் சமனெடுத்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க மாகாரபத்தரையின் வந்த சுரம் குணமாகும்.

பதிமூன்று சன்னிக்கும் குடிநீர்

51. சிறுகாஞ்சொறி, நொச்சி, இமரி, வன்னி, பேய்ப்புடல் சுக்கு, இவற்றைச் சம அளவெடுத்து குடிநீராக்கிக் கொடுக்க சந்திக சன்னி தீரும்.

52. திப்பிலிமூலம், நெருஞ்சிவேர், செவியம், சித்திரமூலம், புடோல், கடுகு, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து குடிநீராய்ச் செய்து கொடுக்க அந்தகமாம் சன்னி குணமாகும்.

53. வெண்சங்கம் வேர், கொடிவேலி, கருஞ்சங்கு கற்பாசி, கோங்குத்தோல், சுக்கு, ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து குடிநீராய்ச் செய்து கொடுக்க இரத்தாகச் சன்னி தீரும்.

54. புள்ளிக்கனி விதை, நொச்சியிலை, சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளுள்ளி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆகிய மூலிகைகளைச் சமன் எடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க சித்த பிரம சன்னி குணமாகும்.

55. பற்பாடகம், பேய்ப்புடல், பறங்கி, இமிரை, திப்பிலி மூலம், செவ்வியம், வன்னி, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து குடிநீராய் முறைப்படி காய்ச்சி அளவறிந்து கொடுக்க சீதாங்கமூரிய சன்னி குணமாகும்.

56. எர்க்குரு வேர்த்தோல், தேவதாரம், முருக்கு, சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், சித்திரமூலம் ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து குடிநீராய் காய்ச்சி பட்டரைத் தூளை அதில் கலக்கி கொடுக்க தாந்திரிக சன்னி தீரும்.

57. பாதிரிவேர், வில்வவேர், பற்பாடகம், பேய்ப்புடல், சோதி, பெருங்குமிழ்வேர், சுக்கு, ஆகிய மூலிகைச் சரக்குகளைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க நேத்திர சன்னி தீரும்.

58. எருக்கம் வேர், அக்கு, மிளகு, திப்பிலி பேராமுட்டி, சிற்றாமுட்டி, ஆகிய சரக்குகளை வகைக்குச் சம அளவெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க காகர்ண சன்னி குணமாகும்.

59. நொச்சியிலை, கோரைக்கிழங்கு, எருக்குவேர், சுக்கு, பச்சை நெருஞ்சில், பற்பாடகம் ஆகிய சரக்குகளைச் சம அளவெடுத்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க நேத்திர சன்னி குணமாகும்.

60. எருக்கம் வேர், சுக்கு, பாதிரி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், புடல், இவற்றை வகைக்குச்சம அளவெடுத்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க தொடு சன்னி குணமாகும்.

61. கண்டமூலம், சீந்தில், சுக்கு, கைப்பான புடல், வன்னி கிமிரி வேர், அமிருஞ்சில், மரமஞ்சள், ஆகிய சரக்குகளைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க பிரலாப சன்னி தீரும்.

62. சுங்கு இரண்டு பங்கு, பேராமுட்டிச்சாறு மூன்று பங்கு, செவியம், சுக்கு கண்டுமூலம், வன்னி கோங்கின் தோல், ஆகிய சரக்குகளை வகைக்குச் சமனெடுத்து குடிநீராய் முறைப்படிக் காய்ச்சிக் கொடுக்க சிங்குவாதச் சன்னி தீரும்.

63. பேராமுட்டி மூன்று பங்கு, சுங்கு இரண்டு பங்கு, முள்ளி இரண்டு, வன்னி, கண்டுமூலம், கடுக்காய் நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, வசம்பு செவியம், ஆகிய சரக்குகளை வகைக்குச் சமனெடுத்து குடிநீராய் முறைப்படிக் காய்ச்சிக் கொடுக்க சன்னி தீரும்.

64. பூமம், நிலவேம்பு, பேய்ப்புடல், தழுதாழை இவற்றின் வேர்கள் பற்பாடகம், ஆகிய சரக்குகளைச் சமனெடுத்து குடிநீராய் முறைப்படி காய்ச்சிக் கொடுக்க சுருவசன்னி குணமாகும்.

65. தசமூலம்

பேராமுட்டி (சிற்றாமுட்டி) தழுதாழை முள்ளி கண்டங்காலி பாதிரிவேர், காட்டாமணக்கு வேர், வில்வம், உத்தன் குதம்பை குமிழ் ஆகிய பத்து மூலிகைகள் சன்னியை நீக்குவன.

66. வில்வம், தழுதாழை, பாதிரி, குமிழம், காட்டா-மணக்கு இவை ஐந்தினையும் 'பஞ்சமூலம்' என்று கூறுவர். முசிறி சுக்கு இவற்றையும் சேர்த்துக் கொடுக்க சன்னி தீருமென்று கூறுவர்.

67. முள்ளி, கண்டங்கத்திரி வேர், பேராமுட்டி, சிற்றாமுட்டி, பேய்த்தும்மட்டி, வில்வவேர், உத்தன் குதம்பை, ஆகிய எட்டு வகை மூலிகைகள் 'அட்ட மூலிகை'-கள் என்று அழைக்கப்படும். அவற்றைக் கொண்டு குடிநீர் அதனுடன் காய்ச்சி சுக்கினையும் சேர்த்துக் கொடுக்க சன்னி தீரும்.

68. சங்கின் இரண்டு வகைகள் மரகதத் தழுதாழை, பேராமுட்டி சிற்றாமுட்டி பேய்த்தும்மட்டி, கண்டங்காலி, முள்ளி, நொச்சி, முருங்கை, குமிழ், உத்தன் குதம்பை, வில்வம், பாண்டல் இமரி, பாதிரி . . . . ஆகிய

69. பதினெண் மூலிகைகளையும் முறைப்படி குடிநீரிடுக் கொடுக்க சன்னியை நீக்கும்.

70. திப்பிலி மூலம், செவியம், சித்திரமூலம், கணப்பூடு, சுக்கு, ஆகிய மூலிகைகளைச் சேர்த்துக் குடிநீரிட்டுக் கொடுக்க அதனைப் 'பஞ்ச கோலக் கியாழம்' என்பர். சன்னி சுரம் இதனால் நீங்கும்.

71. அதிமதுரம், கொத்துமல்லி, வில்வம், ஏலம் இலாமிச்சு, அருப்பாலை ஆகிய -யாகக் குடிநீர் செய்து கொடுக்க விக்கல், வாந்தி தீரும் என்பர் சித்தர்.

72. இலவங்கத்தோல், அரத்தை, ஏலம், அருப்பாலை இலாமிச்சம், மதுரம் வில்வம் ஆகிய மூலிகை-களைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் குடிக்க விக்கல், வாந்தி குணமாகும் என்பர்.

73. கோட்டம், அதிமதுரம், விலாமிச்சம், வெட்டி, கொத்துமல்லி, சீரகம், சதாபிவிதை இவற்றைச் சமனெடுத்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க தாகம் தீரும் என்பர்.

74. பாதிரிமலர், அதிமதுரம், தாமரை வளையம், நெல்லிப்பருப்பு, கோட்டம் விலாமிச்சம் ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க அந்தரதாகம் தீரும்.

75. ஆல், இச்சி, நாவல், அரசு, மா ஆகிய ஐந்து மரங்களின் பட்டை, சீரகம், அதிமதுரம், ஆகிய

சரக்குகளுடன் அளவான தண்ணீர் சேர்த்து குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க தாகம் தீரும்.

76. சிமிசு மரத்தின் கொழுந்து சீரகம், கோட்டம் பாலை வேர், அதிமதுரம், கொத்துமல்லி ஆகிய மூலிகைகளைச் சேர்த்து குடிநீரிட்டுக் கொடுக்க வாந்தி விக்கல் ஆகியவை குணமாகும்.

77. வெண்சங்கின் இலை, மிளகு, கலைமானின் கொம்பு பெருங்காயம், வெள்ளுள்ளி, சுக்கு ஆகிய மூலிகை -களைச் சமனாய் எடுத்துக் குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க சுரம் தீரும்.

78. காட்டுக்கருணை, சந்தனம், வசம்பு, சுக்கு, வெள்ளுள்ளி, முருங்கைத்தோல், திப்பிலிமூலம் வட்டத்திருப்பி, ஆகிய மருந்துச் சரக்குகளைச் சமமாக எடுத்து முறைப்படி குடிநீரிட்டுக் காய்ச்சிக் கொடுக்க சுரங்கள் குணமாகும்.

79. பாண்டுரோகத்துக்கு

சாரணைவேர், வெள்ளறுகு, கொன்றைவேர், சுக்கு, பிரமி, வன்னி, ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து

குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க வீக்கம் வற்றிப் போகும்.

80. வெண்சாரணை, சுக்கு, சதுரக்கள்ளி இவற்றின் வேர்கள், வெண் சங்கின் இலை, கடுக்காய், வன்னி கோதம் ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து ~~குடிநீராய்க் காய்ச்சி~~ கோமியத்தில் வைத்து அளவறிந்து கொடுக்க பாண்டு, சோபை ஆகியவை குணமாகும்.

81. பிரம்மி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இரும்புக்கிட்டம், வன்னி, பாவு, சுக்கு, சாரணை வேர், ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து கோமியத்தில் ஊற வைத்து அளவறிந்து கொடுக்க பாண்டு, சோபை குணமாகும்.

82. முள்ளி, நீர்முள்ளி, சாரணைவேர், பிரம்மி சுக்கு, கடுக்காய், அரசம்பட்டை, ஆகிய மூலிகைகளை இடித்து வெள்ளாட்டு மூத்திரத்தில் போட்டு குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க பாண்டு, சோபை குணமாகும்.

83. அரசம்பட்டை, சுக்கு, சாரணை ஆகிய மூலிகைகளின் சமூலத்தை எடுத்துக் கொள்க. அவற்றை இடித்து வெள்ளாட்டின் மூத்திரத்தில் வைத்துப் பின் எடுத்துக் கொள்க. அதனை அளவறிந்து கொடுக்க சோபை, சுரம், பாண்டு ஆகியவை தீரும்.

84. பேராமுட்டி, முந்திரிகை, பாற்சோற்றி, அமுதவல்லி, சுக்கு, சீதா செங்கழுநீர், சீதாங்கபாடாணம், ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க சுரம் குணமாகும்.

85. சுக்கு, மரமஞ்சள், வசம்பு, ஏலம், கண்டங்காலி ஆகியவற்றின் சமூலங்களை எடுக்க. காட்டுத் துளசி, பேராமுட்டி இவற்றையும் சேர்த்துக் குடிநீரிட்டுக் கொடுக்க பூரணை சுரம் தீரும்.

86. காட்டுத்துளசி, சுக்கு, ஏலம், மூங்கில் இவற்றின் வேர்கள், பேராமுட்டி, ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து குடிநீராய் முறைப்படி காய்ச்சிக் கொடுக்க சீதசுரம், பழைய சுரம் குணமாகும்.

87. அக்கு, வேம்பின் ஈர்க்கு, வசம்பு, சுட்ட ஆம்பல், மூங்கில், பேராமுட்டி இவற்றின் வேர்கள், ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து நீரூற்றி எட்டொன்றாய்க் காய்ச்சி முறைப்படி கொடுக்க சீதசுரம் குணமாகும்.

88. அக்கு, நிலவேம்பு, சிதா செங்கழுநீர், குடப்பாலை ஆகிய மூலிகைகளின் வேர்கள் ஆகியவற்றைச் கண்ணன் வேர்க்குடிநீரில் (சேர்த்து) குடிநீராய்க் காய்ச்சி தேனையும் சேர்த்து கணத்தூளையும் கலந்து கொடுக்க சீதசுரம் குணமாகும்.

89. பேராமுட்டி, சிற்றாமுட்டி, ஏலம், மூங்கில், கோரைக் கிழங்கு, இலந்தையிலை, அக்கு, பற்பாடகம், ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க சீதசுரம் தீரும்.

90. பேராமுட்டி, வேர்க்கொம்பு எனும் அக்கு, அடுப்பாலை வேர், நிலவேம்பு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், குடப்பாலை இவற்றின் வேர்களைச் சமனெடுத்து முறைப்படி குடிநீராக்கிக் கொடுக்க ஒன்றாம் மாறல் சுரம் தீரும்.

இரண்டாம் மாறலுக்கு

91. சீந்தில், கோரைக்கிழங்கு, சுக்கு, பேய்ப்புடல் சிறு தும்மட்டி, ஆகிய மூலிகைகளின் வேர்களினை வகைக்குச் சம அளவெடுத்து குடிநீராய்க் காய்ச்சி அதில் தேனையும் கலந்து கொடுக்க இரண்டாம் மாறல் சுரம் இணமாகும்.

92. முந்திரிகை, பேராமட்டி, சகாதேவி, சுக்கு, சிறு தும்மட்டி, ஆகிய மூலிகைகளின் வேர்களினை ~~ஆகிய மூலிகைகளை~~ சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொள்க. அதனுடன் துளசிக் குடிநீரையும் சேர்த்து அளவறிந்து கொடுக்க மூன்றாம் மாறல் சுரம் இணமாகும்.

93. பேராமுட்டி, வேல், மூங்கில், பேய்ப்புடல், செவியம், கருப்புத்துளசி, சுக்கு, கண்ணன் வேர் எனும் அனுப்பாலை வேர், ஆகிய மூலிகை களுடன் தண்ணீர் சேர்த்து முறைப்படி காய்ச்சிய குடிநீரைக் கொடுக்க நான்காம் மாறல் சுரம் தீரும்.

94. சிறு தேக்கு, அமுதவல்லி செந்தொட்டி, கோட்டம் சுக்கு, பற்படாகம், திப்பிலி, நிம்பம், ஆடாதோடை, கோரைக்கிழங்கு, ஆகிய மூலிகைகளாலான குடிநீரைக் கொடுக்கவும்.

95. நான்காம் மாறல் சுரம், செரியாமை, சன்னிபாதம் ஒன்றாம் மாறல் ஆகிய நோய்கள் குணமாகும்.

96. வேப்பின் ஈர்க்கு, பேராமுட்டி, சிற்றாமுட்டி, நிலவேம்பு, சுக்கு, நிலப்பனைக்கிழங்கு, கொடிவேலி, பெருங்காயம் ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து குடிநீராக்கிக் கொடுக்க ஒன்றாம் மாறல், இரண்டாம் மாறல் குணமாகும்.

97. மூன்றாம் மாறல், நான்காம் மாறல், ஐந்தாம் மாறல் ஆகிய சுரங்களும் அதிகமான சுரங்களும் தீரும்.

98. நெல்லிமுள்ளி, பேய்ப்புடல், கடுகுரோகிணி சுக்கு, நிலவேம்பு, மருட்கிழங்கு, கணப்பூடு, சிறு தும்மட்டி வேர் ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சி கொடுக்க மாலையில் வரும் சுரம் தீரும்.

99. விஷ்ணுகிராந்தி, சுக்கு, ஏலம், மூங்கில், அறுப்பாலை பேராமுட்டி, சிற்றாமுட்டி, கடுகுரோகிணி ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க இரவில் வரும் சுரம் தீரும்.

100. சுக்கு, கழற்ப்பாலை, இரசம், சொங்கழுநீர், சிறு தும்மட்டி வேர், மிளகு, பேராமுட்டி, அறுப்பாலை, ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து குடிநீராய் முறைப்படி காய்ச்சிக் கொடுக்க தண்ணீரால் வரும் சுரம் தீரும்.

101. பேய்ப்புடல், பற்பாடகம், கடுகுரோகணி, கோரைக் கிழங்கு, வேல் மூங்கில், சிற்றாமுட்டி ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து குடிநீராய்க்காய்ச்சிக் கொடுக்க அத்தி சுரம் குணமாகும்.

<u>இரத்த சுரத்திற்கு</u>

102. வெள்ளறுகு, பேராமுட்டி, வேர்க்கொம்பு எனும் சுக்கு, அசுவகெந்தி, கொடிவேலி, வசம்பு ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க இரத்த சுரம் குணமாகும்.

103. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கடுகுரோகிணி, சுக்கு, அறுப்பாலை, கூட்டிகிழங்கு, வேலம், பேராமுட்டி, சிற்றாமுட்டி ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க பத்திய சுரம் குணமாகும்.

104. அருப்பாலை, துளசி, பெருங்குறிஞ்சி, பேராமுட்டி, சிற்றாமுட்டி, வேலம், மூங்கில், மடலிவன்னம், வட்டத்திருப்பி, ஆகிய மூலிகைகளைச்சமனெடுத்து குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க சீதசுரம்தீரும்.

105. நெருஞ்சி, அசுவகெந்தி, நரிப்பயற்றங்கொடி, சுக்கு, சதாவேரி, சந்தனம், சீரகம், ஆகிய சரக்கு-களைச் சமனெடுத்து குடிநீராய்க் கொடுக்க சுரம் குணமாகும்.

106. ஏலம், இலவங்கம், பாதிரி, கோரைக் கிழங்கு விளாமிச்சம்வேர், மூங்கில், முந்திரி, வெட்டி வேர், ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்துக் குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க இருபதுவகை மேகங்கள் குணமாகும்.

107. கோட்டம், அரத்தை, கொடிவேலி, கெவியம், கண மூலப்பூடு, நெருஞ்சில், சுக்கு. காட்டில் வளரும் அசுவகெந்தி, நரிப்பயற்றம் வேர் ஆகிய மூலிகை-களைக் குடிநீரிட்டுக் கொடுக்க எவ்வகை நோய்களும் நீங்கும்.

109. கோரைக்கிழங்கு, விலாமிச்சை, சீந்திலிலை, வெட்டிவேர், மாதுளை, சுக்கு, நன்னாரி ஆகிய மூலிகைகளைச் சமனெடுத்து குடிநீராய் முறைப்படி காய்ச்சிக் கொடுக்க அமிர்த பித்தம் குணமாகும்.

110. பெருமரத்துப்பட்டை, சுக்கு, கோரைக்கிழங்கு, வில்வம், மாதுளை, அதிவிடையம், ஆகிய சரக்குகளைக் கொண்டு குடிநீரிட்டுக் கொடுக்க அதிசாரம் நீங்கும்

=